
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් ஜன.19-25, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU ...TIONAL TAMIL WEEKLY முரசு 495



## விலைபேசப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள்!

வாசக நெஞ்சங்களுக்கு இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள்



## அழகான ராட்சசியின் அதிரடி முடிவு!

# ஆன்மீகம்


## மந்திரங்கள்

1. பிரணவ மந்திரம்- "ஓம்"
ஆ.உ.ம். இந்த மூன்றெழுத்துக்களும் சேர்ந்தால் "ஓம்" ஆகும். "அ" பிரமாவையும், "உ" திரு மாலையும், "ம்" சிவனையும் குறிக்கின்றன. பிரணவ மந்திரம் ஏனைய மந்திரங்களுடன் சேர்ந்தும், தனியாகவும் வரும்.
2. திரு ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சர மந்திரம்) "நமசிவாய"
3. திரு ஆறெழுத்து மந்திரம் (சடாட்சரமந்திரம்) "சரவணபவ"
4. திரு எட்டெழுத்து மந்திரம் (அஷ்டாக்ஷர மந்திரம்) "ஓம் நமோ நாராயணாய"
5. திருப் பன்னிரண்டெழுத்து மந்திரம் (துவாதசாக்ஷரம்) "ஓம் நமோ பகவதே வாசு தேவாய"
6. திருப் பதின்மூன்றெழுத்து மந்திரம் (த்ரயோதசாக்ஷரம்) "ஓம் ஸ்ரீராம ஜெய ராம ஜெய ஜெய ராம ஓம்"
7. மகா மந்திரம்
"ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே கிருஷ்ண ஹரே ஹரே"

★ மேற்கூறிய மந்திரங்களை அட்சரசித்தியோடு பிழையின்றித் துதித்து வாழ்வில் நற்பேறு அடைவோமாக.

சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்-06.

## விண்ணரசில் பிரவேசிக்க இறைவனின் கட்டளையை அனுசரித்து நடப்போம்.



என்னை நோக்கி 'ஆண்டவரே! ஆண்டவரே!' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயற்படுபவரே செல்வர்.

**(மத்தேயு: 7அதி. 21 வாக்.)**

ஆமாம் அன்பர்களே! எம் தலையிலுள்ள மயிர்கள் கூட எவ்வளவு என்று அறிந்திருக்கும் எம் பரமத் தந்தையை நம்மால் ஏமாற்ற முடியுமா? அல்லது 'ஆண்டவரே! ஆண்டவரே!' என்று சொல்லி விண்ணரசில் நுழைய முடியுமா? விண்ணுலகிலுள்ள தந்தையின் கட்டளைப்படி நடப்பவரே விண்ணரசுக்குள் பிரவேசிப்பர்.

ஜோசப் அருள்சாமி.

## மறுமையைப் பற்றி அல்லாஹ்வின் கட்டளை

"நீங்கள் ஒரு நாளைப் பற்றியும் பயந்து கொள்ளுங்கள்: (அந்த நாள்) எந்த ஒரு ஆன்மாவும் எவ்வித பயனுமளிக்க முடியாது; அதற்காகப் பரிந்து (எவர்) பேசுவதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; அதற்காக யாதொரு பரிகாரத்தையும் (ஈடாகப்) பெற்றுக்கொள்ளப்படமாட்டாது; அன்றி, அவர்கள் (எவராலும், எவ்வித) உதவியும் செய்யமாட்டார்கள்."

**(சூறா 2: ஆயத்து 48)**

"மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள்; அன்றி, ஒரு நாளைப் பற்றிப் பயப்படுங்கள்; (அந் நாளில்) தந்தை பிள்ளைக்கு உதவமாட்டான்; பிள்ளையும் தந்தைக்கு எத்தகைய உதவியும் செய்ய மாட்டான். (ஒவ்வொருவரும் தன்னையே இரட்சித்துக் கொள்ள முனைந்திருக்கக் கூடிய நாளாகும்). நிச்சயமாக (அந் நாள் வருமென்ற) அல்லாஹ்வுடைய வாக்குறுதி, உண்மையானதாகும். ஆகவே இவ்வுலக வாழ்க்கை உங்களை மயக்கி விட வேண்டாம். (ஷைத்தானாகிய) மாயக்காரனும், அல்லாஹ்வைப் பற்றி உங்களை மயக்கிவிட வேண்டாம்."**(சூறா 31: ஆயத்து 33)**

பாத்திமா நிஸ்யா புகாரி, ஒட்டமாவடி-01.

---

## கவிதைப் போட்டி இல.492

பரிசுக்குரிய கவிதை

### இழப்பு

இறந்த காலமதில்
இழந்தது போக
இருந்த மீதியையும்
இந்த வெள்ளம் வந்து
எடுத்துப் போச்சுதுவே.

மாணிக்கன் இளங்கோ,
மட்/அரசினர் ஆசிரியர்
கலாசாலை.



## இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### இறைவனைத் தவிர...!

குடியிருந்த வீடும்!
குவித்து வைத்த உடைமைகளும்!
கண்ணிமைக்கும் நேரத்தில்
கருகி சாம்பலானதால்
பெற்ற பிள்ளைகளை மட்டும்
பத்திரமாய் பிடித்துக் கொண்டு
வீதிக்கு வந்த இவர்களுக்கு
விடை செல்ல யாரிருக்கா?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்

### சந்திப்போமா...?

அன்று வந்த பொங்கலில்
அப்பா, அம்மா கூட இருக்க
அண்ணன், தம்பி மூவரும்
அக மகிழ 'படம்' எடுத்தோம்!
நடுவில் வந்த போரினால்
நாங்கள் எல்லாம் பிரிந்திட்டோம்!
நாளை வரும் பொங்கலில்
நாங்கள் ஒன்று சேர்வோமா?

நா.ஜெயபாலன்-பிபிலை.

## கவிதைப் போட்டி இல.495



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.01.2003

கவிதைப் போட்டி இல.495
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### நாளை நமதே!

சந்திக்கு வந்த நீங்கள்
ஏன் சிந்திக்க வேண்டும்
அமைதி வழிதேடி
அடிவையுங்கள் நீங்கள்
அனைவரும் உள்ள இப்புத்தாண்டில்
ஒன்று சேருங்கள்!
எதிர்காலம் உங்களுக்கே...!

து.பரிமளாதேவி-கலஹா.

### யுத்தத்தின் அடையாளம்

இன்றைய சந்ததியினரை விழுங்கியது
அன்றைய யுத்தம்!
நாளைய யுத்தத்தின் உணவுக்காக
தங்களை அடையாளப்படுத்துகின்றதா
இந்தக் குடும்பம்!

பொன்னையா ஜெயா, அக்கரைப்பற்று-07.

### போஸ் கொடுக்காதீர்

உங்களை வைத்து
உழைக்க இங்கு உத்தமர் போல் வந்து
உமை போட்டோ எடுத்து
உலகிற்குக் காட்டி
உழைப்பவர் அதிகம்.

அலாவுதீன் ஏ.எல்.ஏ.பாபு, திருகோணமலை.

### ஏனிந்த அவலம்

மனித நேயமே!
விளம்பரத்தைத் தேடி
வீதிக்கு வந்தீரா...?
அல்லது, விலை வாசி
உயர்வை விளம்பரப்படுத்த
வந்தீரா...?
ம்.. போய் போராடு.
செவிடன் காதில்
ஊதிய சங்குதான்.

செல்வி க. பரமேஷ்வரி-தலவாக்கலை.

### ஆசை

யுத்தத்தில் பிறந்து வாழ்ந்த - எங்கள்
சித்தத்தின் ஆசையெல்லாம் - சென்றாண்டில்
இத்துப்போன வெடியோசை - முற்றாகச்
செத்துப் போகட்டும் இப்புத்தாண்டில்.

அ. சந்தியாகோ-கண்டி.

### வாழ்த்துக்கள்

நல்லதொரு குடும்பம்
பல்கலைக் கழகமே
பிள்ளை நிலா நான்குடன்
கொள்ளை
இன்பம் பெற்று
வெள்ளை உள்ளமாய் வாழ
வாழ்த்துகிறோம் புத்தாண்டில்...

ப.சைந்தவி, சாவகச்சேரி.

### எதிர்காலம்?

வெளுத்த முகமும்
கந்தை உடையுமாய்
போர் விதைத்த
விதைகளுக்குள்
நாமும் விதைத்தோம்
நாளைய மனிதர்களை.

எம்.எச்.எம். நிஸ்வான்-திருகோணமலை.

### முகம் காட்டும்

கிழக்கின் வெள்ளம்
நிவாரணம் தேடும்
புகைப்படத்தில்
முகங்களைக் காட்டி
முகவரியைக்
கேட்டு நிற்கும்...!

செ. ஞானராசா-மடுக்கோவில்.

### அரிதான படம்

வாழ்க்கை எனும் பயிர் நிலத்தில்
பொறிந்த யுத்த மேகங்களால்
பெருகிப் பரவிய அனர்த்தங்கள்
பெயர்த்தெறிந்த நாற்றுக்களின்
பரிதாபம் காட்டி நிற்கும்
அரிதான படம் ஒன்று.

செல்வி கொசிகா மகேந்திரன்-உடுவில்.

### புகைப்படம்!

நேற்றைய ஒன்றான
நினைவுகளில்...
புகைப்படத்தினில் மட்டுமே
பசுமையாய் நெஞ்சினில்...!
இன்றைய நிஜத்தினில்...
ஒரு வரியின் சுவடுகூட
கல்லறையில் மட்டுமல்ல...
கணக்கிலும்கூட
வருவதில்லை!!

தாராபுரம் நிலாம்-கரம்பை.

### ஏற்றதாகுமோ

சாதிக்கப் பிறந்த செல்வங்களை
வீதியில் நிறுத்திவிட்டு
வறுமைக்குத் தேடினரோ வரைப்படம்
உங்கள் புகைப்படம்.
ஏற்றதாகுமோ?

மு. கீர்த்தியன்- இரம்பொடை.

## வாசக[ர்] சாலை

**இனித்திடும் (தின) முரசே!**

துணிச்சலான கருத்தினில் நீ 'வில்லன்'டா! துடிப்பான வசனங்களில் 'அற்புதம்'டா! உன் செய்திகளைச் சேகரிக்கவோர் 'ஆல்பம்' தேவையடா. உன் மீது உண்டான 'காதல் அழிவதில்லை'யடா. என்றும் அன்புடன் புத்தாண்டு வாழ்த்துக்களடா!!

ப்ரியநேசி, களுத்துறை (தெற்கு).

**தேன் சுவையே தினமுரசு!**

பத்து வருடங்களாகப் பத்திரிகை உலகில் தடம் பதித்து, தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்ட தேன் சுவை இதழான வார மலர் 'தினமுரசு' எப்போது தினந்தோறும் வெளிவந்து எம்மை மகிழ்விக்கும் என்பதே வாசகர் அனைவரதும் நீண்ட நாளைய எதிர்பார்ப்பு. குறுக்கெழுத்துப் போட்டி மீண்டும் வெளிவந்ததையிட்டு மகிழ்ச்சி!

முஹம்மது ஹஸனி, புதிய வீதி, கல்முனை-07.

**அன்பின் ஆசிரியருக்கு,**

முரசின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது புதுவருட வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முரசு கடந்த காலங்களில் சில பெரும் பிரச்சனைகளை எதிர் கொண்ட போதும் அது தனது தரத்தில் ஒரு குறைவும் இல்லாமல் இன்றுவரை வாசகர்களின் தாகங்களைத் தீர்ப்பதில் முதல் தரத்திலுள்ளது என்பதைக் கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இது தொடர்ந்தும் நிறைவாய் வெளிவர எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

இ. இளையவன், டயகம மேற்கு, டயகம.

**என் ஆருயிர் நண்பனே! முரசு!!**


நீ சுமந்து வரும் அனைத்தும் 'சூப்பர்'. உன் வருகையை வாரம் ஒரு முறை ஆவலோடு காத்திருப்பேன். இன்றுபோல் உன் புகழ் என்றும் பரவட்டும். தொடர் கதைகள் 'சூப்பர்'.

க. நித்தியா, ஒத்தாச்சிமடம்.

**இனிய முரசே...!**

தித்திக்கும் செய்திகளைத் தெவிட்டாத மொழியில் விருந்தாக்கிப் படைக்கும் தினமுரசே...! புது யுகத்தில் புதுப் பொலிவுடன் செய்திகளைக் காவி பக்க சார்பின்றி நடுநிலை தவறாமல் இருபது பக்கங்களுடன் உன் வாசகர்களின் கைகளில் கிழமை தோறும் தவழ வேண்டுவதோடு..., உன் சேவை பார் எங்கும் வெற்றிக் கொடி கட்டி சிங்கார நடைபோட வேண்டும் என்று வாழ்த்தும் இந்த சிநேகிதன்...!

எம்.ரீ.எம். யூனுஸ், காத்தான்குடி-01.



**நெஞ்சம் கவர்ந்த முரசே!**

உனது அனைத்து அம்சங்களுக்கும் நன்றிகள். தமிழ் மக்களின் குரலாக விளங்கும் முரசு புதிய ஆண்டில் மேலும் பல சிறப்பான அம்சங்களை நெஞ்சங்களுக்குத் தந்து வெற்றி பெற வாழ்த்துக்கள்.

ஹப்புத்தளையூர், க. சுதர்ஷன்.

**என் இனிய முரசிற்கு,**

முதலில் எனது நன்றிகள், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். மன்னாதி மன்னனின் திருப்திகரமான முடிவைத் தொடர்ந்து மற்றுமொரு சிறப்பான தொடரை எதிர்பார்க்கின்றேன். குறுக்கெழுத்துப் போட்டியை ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பாப்பா முரசில் மாணவர்களின் ஆக்கங்களையும் இணைத்துக் கொண்டால் நன்றாக இருக்குமே! முரசின் பணி பல்லாண்டுகள் தொடர மனமார வாழ்த்தும்.

எஸ்.கே. ருஸ்னி குறைஸ், சன்ஜீதா வத்த, நுரைச்சோலை.

## உங்கள் பக்கம்

### மலையகத்தைக் காவு கொள்ளும் தீ

மலையகத்தில் தற்பொழுது நிகழ்ந்து வரும் தீ விபத்துக்கள் மக்கள் மத்தியில் ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே ஹட்டன்-வெலிவோயா தோட்டம், மஸ்கெலியா-சீட்டன் தோட்டத்தின் லயன்கள் எரிந்து நாசமாகியிருந்தன. இந்த வரிசையில் இறுதியில் இத் தீயில் நாசமாகியிருப்பது டயகம நான்காவது டிவிசனில் உள்ள ஓர் லயனாகும். இவற்றைத் தொகுத்து நோக்கும் போது இனிவரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் இன்னும் எத்தனையோ? என எண்ணத் தோன்றுகிறது.

இதற்குப் பிரதான காரணம் தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்கச் செய்யப்படுகின்ற வயரிங் முறை ஒழுங்காக அமைக்கப் படாதது தான் எனச் சிலர் கூறுகின்றனர். இரண்டாவது, காலம் காலமாக இருந்து வருகின்ற மிகவும் பாழடைந்த லயன்கள்தான். அத்துடன் இவர்கள் பாவிக்கும் விறகைக் குடியிருப்பின் கூரைக்கு மேலே போட்டு வைத்துப் பாவித்து வருவதனால் திடீரென ஏற்படும் தீ வேகமாகப் பரவ இது ஏதுவாக அமைகின்றது.

இதற்கு ஒரே வழி காலம் காலமாக வாழ்ந்து வருகின்ற லயன்கள் மாற வேண்டும். தனித்தனியான குடியிருப்புகளாக இருந்தால் ஒரு வீட்டுக்குத் தீ ஏற்பட்டாலும் அதோடு முடிந்துவிடும். பெரும் பாதிப்புக்களைத் தடுக்கலாம். அத்துடன் மின்சார இணைப்பு வயரிங் வேலைகளை முறையாகச் செய்தால் இந்தப் பழிக்கு ஆளாக வேண்டியதில்லையே? தீ விபத்து ஏற்பட்டு அதற்குப் பெரும் நிதியை ஒதுக்குவதை விட அதற்கான காரணத்தைக் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பது நல்லது தானே?

**கிருஸ்ணன், சிவா, மஸ்கெலியா.**

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# புத்தளத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கடத்திவரப்பட்டதாகத் தகவல்

புத்தளத்தில் இருந்து நீர் கொழும்புக்குக் கொண்டு வரும் போது கடந்த ஞாயிறு அன்று பொலிஸாரினால் இரணவில பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்குக் கடத்திவரப்பட்டவை எனத் தெரியவருகிறது.

11 சந்தேக நபர்களுடன் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், மகசீன்கள், ரவைகள், செல்லிடத் தொலைபேசிகள் உட்பட ஆயுதங்கள் சில சிலாபம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்களுள் 7 பேர் முஸ்லிம்கள். இவர்களுள் ஒருவர் நீர்கொழும்பு நகரசபையின் முன்னாள் உறுப்பினர். ஏனையவர்கள் தமிழர்கள். இவர்கள் நால்வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் மூலமே இந்த ஆயுதங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்திற்குக் கடத்திவரப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர்களுக்குப் புலிகளுடன் உள்ள தொடர்புகள் குறித்தும் முஸ்லிம் அடிப்படை வாத இயக்கங்களுடன் கொண்டிருக்கும் தொடர்புகள் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயுதங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து பல்வேறு தடவைகளில் பொது போக்குவரத்து வாகனங்கள் மூலம் புத்தளத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைதுசெய்யப்பட்ட முஸ்லிம்கள் நீர்கொழும்பு, கொச்சிக்கடை மற்றும் புத்தளப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் கடந்த நாட்களில் புத்தளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடனும் முன்னர் நடைபெற்ற பல்வேறு கொலை, கொள்ளைச் சம்பவங்களுடனும் தொடர்புபட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். ■

# வடக்கு–கிழக்கைப் பிரிக்க முடியுமா? எனச் சட்ட ஆலோசனை

தற்போதைய இணைந்த வடக்கு-கிழக்கை இரண்டு மாகாணங்களாகப் பிரிக்க முடியுமா? என்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்ட ஆலோசனை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட மாகாணசபை முறைக்கமைய அவசர காலச் சட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.

அவசரகாலச் சட்டம் தற்போது செயலில் இல்லை என்பதால் இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிக்குச் சட்ட அங்கீகாரம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் சிங்கள எம்.பி.க்கள் குழு, வடக்கு-கிழக்கை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கும் யோசனையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து முன்வைத்தது.

13ஆவது அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தின் பின்னர் சுமார் 16 வருட காலம் வடக்கு-கிழக்கு ஒரே மாகாணமாகச் செயற்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# முஸ்லிம் மாணவர்களை இடமாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியிருக்கும் முஸ்லிம் மாணவர்களை வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு மாத்திரம் இம் முறை 23 முஸ்லிம் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் அனேகமானவர்கள் கிழக்கு, வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்.

நாட்டில் இன்னமும் பூரண சமாதானம் ஏற்படாததால் தமது பிள்ளைகளை யாழ் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புவதில் சிக்கல் இருப்பதாகப் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். நெடுஞ்சாலைகள் அமைச்சர் அதாவுல்லா இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

# தென்னிலங்கை மக்களின் நம்பிக்கையுடனேயே சமாதான முயற்சி நகர வேண்டும்–ஜனாதிபதி

தென்னிலங்கை மக்களின் நம்பிக்கைக்கு மத்தியிலேயே சமாதான முயற்சிகள் முன்கொண்டு செல்லப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவ்வாறு இல்லாத பட்சத்தில் பாரதூரமான பிரச்சனைகள் ஏற்படும் என்று எச்சரித்திருக்கிறார்.

பொ.ஐ.மு.வின் மத்திய குழுக் கூட்டத்தில் கடந்த வெள்ளி அன்று உரையாற்றிய திருமதி குமாரதுங்க சமாதான முயற்சிகளில் தனது பிரதிநிதி ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படாதது குறித்து அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டினார்.

சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்கும் போக்கைத் தான் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் போவதாக வலியுறுத்திய அவர் தேசிய பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கவனயீனமாக நடந்து கொண்டால் பிரதமரைப் பதவி விலக்குவது குறித்து ஆராயப்படும் என்றும் கூறியுள்ளார்.

# பிரதமரைச் சந்திக்க முடிவு

முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவும் தேசிய ஐக்கிய முன்னணியும் (நுஆ) இணைந்து உருவாக்கிக் கொண்டுள்ள புதிய முஸ்லிம் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் சந்திக்கவுள்ளதாக நுஆ தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

தமது கூட்டமைப்பு தேசிய பிரச்சனை தொடர்பில் பரந்த அளவிலான செயற் திட்டம் ஒன்றை அமுல் செய்யவிருப்பதாகக் கூறியிருக்கும் அவர் சமாதானப் பேச்சுக்களில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பிரசன்னம் தொடர்பில் தங்களுக்கு திருப்தியில்லை எனக் கூறியிருக்கிறார்.

# சமாதானம்! போரை பின்போடும் முயற்சியா? ஹக்கீமுக்கு ஏற்பட்ட சந்தேகம்

சமாதானப் பேச்சுக்களின் போது அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தலைதூக்கும் கருத்து முரண்பாடுகளை அவதானிக்கும் போது சமாதானப் பேச்சு என்பது வெறுமனே போரை ஒத்திப்போடும் தந்திரோபாயமோ எனக் கருத வேண்டியிருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார். சமாதானப் பேச்சுக்களில் அரசாங்க சார்புப் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் ஹக்கீம் சமாதான முயற்சிகள் குறித்து நம்பிக்கை அற்ற விதத்தில் கருத்து வெளியிட்டிருப்பது அரசாங்க வட்டாரங்களையும் புலிகளையும் அதிருப்திக்குள்ளாக்கியிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற கூடாரத்துக்குள் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஒட்டகத்தைப் போல் தலையை நுழைத்துள்ளது. ஒட்டகம் தலையை நிமிர்த்தினால் கூடாரம் என்னவாகும் என்பதை புலிகள் உணர வேண்டும் என்றும் ஹக்கீம் கூறியுள்ளார்.

கடந்த வாரம் தாய்லாந்தில் முடிவடைந்த சமாதானப் பேச்சுக்களின் போது புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் ரவூப் ஹக்கீமுக்குமிடையில் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

# இரண்டு மாதத்திற்கு முன்னதாகவே இலங்கை அரசு ஆலோசனை கோரியது–ஜெனரல் சதீஸ் நம்பியார்

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே ஆலோசனை கோரியதாக ஜெனரல் நம்பியார் தெரிவித்திருக்கிறார்.

தான் இந்திய அரசின் உத்தியோகபூர்வ பிரதிநிதியாக இங்கு வரவில்லை என தெரிவித்திருக்கும் அவர் தனது தனிப்பட்ட செல்வாக்கின் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்தினால் இவ்வுதவி கோரப்பட்டதாக பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறினார்.

சரியான நேரத்தில் இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் அவதானித்த பின்னரே உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று தான் ஆலோசனை கூற இருப்பதாகத் தெரிவித்த ஜெனரல் நம்பியார் இந்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி இலங்கை தன்னை அணுகியிருக்க முடியாது எனவும் சொன்னார்.

தனக்கும் இலங்கை இராணுவத்துக்கும் ஏற்கனவே தொடர்புகள் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சி விலை பேசப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள்

தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்திப் பாராளுமன்றத்தில் ஸ்திரமான குழு ஒன்றை அமைப்பதன் மூலம் எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்திவிட்டுப் புதிய அரசொன்றை அமைக்க எதிர்க்கட்சிகள் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன. இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வரும் முக்கிய சந்திப்பொன்று எதிர்வரும் 20ம் திகதி இடம்பெறவுள்ளது.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான மேலதிக உறுப்பினர்களை ஐ.தே.க.விலிருந்து கவரும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து ஐ.தே.க.வுக்குத் தாவிய பிரபல தென்னிலங்கை அரிசியல்வாதி ஒருவர் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

மேலும் சில ஐ.தே.க. எம்.பி.களுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன. அமைச்சர் பதவிகள் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி பெருந்தொகைப் பணம் பேரம் பேசப்படுகிறது.

எப்பொழுதும் ஆளும் கட்சியில் இருப்பதையே விரும்பும் மலையகத்தின் பிரபல தமிழ் அரசியல்வாதி ஒருவருடன் எதிரணி முக்கியஸ்தர்கள் பேச்சுக்களை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது.

இப் பேச்சுக்களின் போது பெருந்தொகைப் பணப் பரிமாற்றம் ஒன்றுக்கு இணக்கம் காணப்பட்டதாக அறியவருகிறது.

# காணாமற் போனோரைத் தேட ஐ.சி.ஆர்.சி. இணக்கம்

போரில் காணாமற் போன சுமார் 20,000 பேர் குறித்து விசாரணை நடத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விருப்பம் தெரிவித்திருக்கிறது.

அரசினாலும், புலிகளாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் காணாமற் போனதாகக் கூறப்படும் படையினர், புலிகள், பொதுமக்கள் குறித்து விசாரணை செய்ய ஐ.சி.ஆர்.சி. சம்மதம் தெரிவித்துள்ளது.

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஐ.சி.ஆர்.சி. தலைவர் மார்க்கிரட் புரு மானிடம் சமர்ப்பித்த கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தப் பணியில் ஈடுபடச்சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990ம் ஆண்டு முதல் வடக்கு-கிழக்குப் பகுதியில் யுத்தத்தினால் 20000 பேர் காணாமற் போயுள்ளதாகத் தமது அமைப்புக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் இவர்களுள் 9000 பேர் குறித்த தகவல்களைத் திரட்டக் கூடியதாக உள்ளதெனவும் ஐ.சி.ஆர்.சி. பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார். 2200 பேர் குறித்து எந்தத் தகவலும் இல்லை. மீதமுள்ளோர் தொடர்பான தகவல்களைத் தேட ஐ.சி.ஆர்.சி. திட்டமிட்டுள்ளது.

இதேவேளை புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாக நம்பப்படும் பொதுமக்கள், படையினர், தமிழ் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட சுமார் 7000 பேர் குறித்து விசாரணை நடத்துமாறு சர்வதேச மனித உரிமை தாபனத்திடம் வேண்டுகோள் விடுக்க மாற்றுத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புத் தயாராகி வருகிறது.

# முரசம்

## புத்தம் புதுப்புனல் பாயவேண்டும்

*அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.*

ஈழத் தமிழர்களின் வெவ்வேறு சமூகப் பிரிவினரைச் சில சித்தாந்தங்கள் கடந்த காலங்களில் வழி நடத்தியது உண்மை. கொள்கை வழி நிற்றல் என்பது அதன் உயரிய அம்சமாக இருந்தது.

1930 களில் இலங்கையின் சுதந்திரம், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்பன யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த இளைஞர் காங்கிரஸின் நிலைப்பாடாக இருந்தது.

1950 களில் தமிழர்கள் ஏனையோருடன் சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்ற கோரிக்கை முதன்மை பெற்றது.

இலங்கையின் சோசலிசப் புரட்சியின் அல்லது ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக வடக்கு கிழக்கில் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டும் இடதுசாரி இயக்கங்கள் வளர்ச்சியுற்றன. சாதி ஒடுக்குமுறைக்கெதிரான விழிப்புணர்ச்சி இடதுசாரி இயக்கங்களால் தான் ஏற்பட்டதென்றால் அது மிகையல்ல.

எனவே இனங்களின் சமத்துவத்திற்கான இயக்கமும், தீண்டாமைக்கெதிரான இயக்கமும் வேறு வேறு தளத்தில் இயங்கின.

தமிழர்களின் சம உரிமையைக் கோரியவர்கள் தீண்டாமைக்கெதிராகப் போராட்டம் நடத்தவில்லை. சம பந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆனால் தமிழகத்தில் தந்தை பெரியார் திராவிட உரிமைகள் பற்றிக் குரல் எழுப்பினாலும் சாதி ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம் என்பவற்றுக்கெதிராகவே பிரதானமாக ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்தினார்.

இந்த விடயத்தில் தந்தை பெரியாரும் கம்யூனிஸ்டுகளும் மிகவும் நெருக்கமானவர்களாகச் செயற்பட்டார்கள்.

ஆனால் இங்கு தமிழரின் தேசிய இயக்கம் கூட முழு நேர மக்கள் இயக்கமாக நடைபெறவில்லை.

தமிழர்களின் பழைய தலைமுறைத் தலைவர்களின் பகுதி நேர வேலையாகத்தான் அது இருந்தது.

மகாத்மா காந்தியையும், சுபாஸ் சந்திரபோஸையும், வாஞ்சிநாதனையும் தமது மேடைப் பேச்சுக்களில் உணர்ச்சி பொங்க உச்சரித்தார்கள்.

ஆனால் எப்போதும் அஹிம்சை, சத்தியாக்கிரகம் என்றே வலியுறுத்தி வந்தனர்.

காந்தியடிகளின் வழியைப் பின்பற்றுவதாக இவர்கள் கூறிக் கொண்டாலும் இவர்கள் தமக்குப் போட்டியாகத் தெரிந்த அரசியல்வாதிகளையும், மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் ஒருவித குரோதத்துடனேயே அணுகினர். துரோகிகள் என்று பட்டம் சூட்டினர். அவர்கள் பௌதிக ரீதியாக அழிய வேண்டியவர்கள் என்றனர்.

ஆனால் இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் கண்ணியம் மிக்க தலைவர்கள் எப்போதும் சொந்தச் சகோதரர்களைப் படுகொலை செய்யுமாறு கூறவில்லை.

மற்றவர்களுக்கெதிரான குரோதத்தை வளர்க்கவுமில்லை. நியாயமான வேறுபாடுகள் அவர்களுக்குள் இருந்திருக்கலாம்.

ஆனால் எமது சமூகத்தின் பழைய தலைமுறைத் தேசியவாதத் தலைமைகளினால் விதைக்கப்பட்ட விரோதமும், குரோதமும் பாசிசப் படுகொலைகளாக அடுத்தடுத்த தலைமுறைகளில் பேருருப் பெற்றது.

ஸ்பீல்பேர்க்கின் யூரேஸிக் பார்க்கில், டைனோசர்கள் அதனை மீள் உற்பத்தி செய்தவர்களுக்கே அபாயகரமாக மாறியது போல இந்தக் குரோதம் பாசிச வன்முறையாக உருப்பெற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரை, வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களை சகியாத ஒரு போக்காக வளர்ச்சியுற்று, இன்று ஒரு தீராத நோயாகத் தமிழ்ச் சமூகத்தைப் பீடித்து ஆட்டுகிறது.

எனவே சமூகத்தினுள் கருத்துக்களை முன்வைக்கும்போது, செயற்படும்போது தீர்க்கதரிசனத்துடன், பொறுப்புணர்ச்சியுடன் முன்னெடுக்க வேண்டும்.

ஒரு சில வருடங்கள் நீடிக்கும் அற்ப அரசியல் சுகத்திற்காகச் சமூகத்தின் நீண்டகால நலன்கள் அடகு வைக்கப்படும்போது பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன.

சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர்ந்து கொள்வதற்காக அவ்வப்போது பௌத்த சிங்கள இனவாதத்தைக் கிளறிவிட்டதன் விளைவே இந்த நாடு இன்றும் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் திணறுகிறது.

முந்திய தலைமுறை அரசியல்வாதிகள் அவ்வப்போது தமது இருப்பிற்காக, ஆதிக்க அபிலாசைகளுக்காகச் செய்த கெடுதல்களுக்குத் தற்போதைய சந்ததி தனது விலையைச் செலுத்துகிறது.

எனவே இந்த நாடு தனது அரசியல் வரலாற்றில் தலை சிறந்தவற்றை உள்வாங்கி, கறைபடிந்த அனுபவங்களை அகற்றி புத்தம் புதிய செழுமை மிக்க சிந்தனைகளின் அடிப்படையில் செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

உலகின் பாசிச அனுபவங்களோ, மாபியா அனுபவங்களோ பிரதிபண்ணப்படுமானால் எமது தலைமுறையல்ல பல தலைமுறைகள் பேரனர்த்தத்தில் சிக்க வேண்டி நேரலாம்.

■ ■

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அதிகார சக்திகளும் மக்களும்

# நாலாம் கட்டப் பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்திற்கு எவ்வாறு நகரப்போகிறது?

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் அமைக்கப்பட்ட பாதுகாப்புச் சம்பந்தமான உபகுழுக் கூட்டங்களில் இனிமேல் தாம் பங்குபற்றப் போவதில்லை எனப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் அந்தக் குழு கலைக்கப்பட மாட்டாது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த முரண்பாடு பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் "ஒரு நீண்டகால, சிக்கல் நிறைந்த பிரச்சினைகளைத் தீர்க்க முற்படும் போது வேறுபாடுகள் எழுவது இயல்பே" என்கிறார்.

யாழ் படைத் தளபதி சரத் பொன்சேகாவின் அறிக்கையின் பின்னர் புலிகளுக்கு ஏற்பட்ட கடும் சீற்றம், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளகுடியேற அனுமதிப்பதானால் புலிகளின் பீரங்கி நிலைகளை மாற்ற வேண்டும், ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று தெரிவித்ததில் இருந்து எழுகிறது.

இது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்த இராணுவச் சமநிலை தொடர்பான கருத்துக்கள் மனிதாபிமானத்தைவிட இராணுவ ரீதியான கண்ணோட்டத்திலானது என பாலசிங்கம் தெரிவித்திருந்தார். ஆனால் நாலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இடையே புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் "ஆயுதங்கள் தம்மிடம் இல்லை, அதனை மக்கள்தான் வைத்திருக்கிறார்கள்.

**உண்மையில் யாழ் குடாநாட்டின் மத்தியில் உள்ள 512 வது படையணியின் நிலைகள், முகாம்கள் அகற்றப்படும் போது, யாழ் குடாநாட்டில் புலிகள் 1990 - 1995 வரை இருந்த நிலையை விடப் பலமான நிலையை அடைகிறார்கள். ஏனெனில் அவர்களிடம் நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய பீரங்கிகள் இருக்கின்றன.**

பிரச்சினையின் மூலம் ஹீரோவாக முயல்கிறார்" என்று கருணா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக "அரசின் உள்ளே பரிமாறப்பட வேண்டிய இரகசிய ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தியிருக்கக் கூடாது" என சிங்கப்பூரில் இருந்து திரும்பிய பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே யானை - புலி கூட்டுச் சதிக்கு எதிராக ஜே.வி.பி. மக்கள் அலை

சக்திகளிடம் இருந்து எழுந்த எதிர்ப்பும், நோர்வேயின் நடுநிலை பற்றிய கேள்வியும், நோர்வே தூதரகத்தின் முன் பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டமும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஒரு நெருடலை ஏற்படுத்தியிருந்தது. சட்டபூர்வமான வழிகளிலேயே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதாக அரச் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தலதாமாளிகைக்கு வானொலி உபகரணங்கள் பெற அனுமதி கோரப்பட்ட போது அது மறுக்கப்பட்டதாகச் சிங்கள தீவிரவாதிகளால் குற்றம் சாட்டப்பட்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது இந்தியாவிற்குத் தெரிவித்துவரும் இலங்கை அரசு 6 தொன் வானொலி உப கரணங்கள் கொண்டுவரப்பட்டதை ஏன் தெரிவிக்கவில்லை? என்ற கேள்வியும் எழுந்தது.

புலிகள் ஏற்கனவே நடத்தி வந்த வானொலி நிலையத்தை இலங்கையின் சட்ட திட்டங்களுக்குள் கொண்டு வந்து விட்டதாக அரசும், லசந்த விக்கிரமசிங்க போன்ற ஊடகவியலாளர்களும் தெரிவித்திருந்தனர்.

கிளிநொச்சியில் இயங்கும் சமாதான செயலகத்தின் பணிகளுக்காகவே இது தமக்குத் தேவைப்பட்டதாகப் புலிகள் கூறியிருந்தனர்.

ஆனால் நோர்வே அனுசரணையாளராக வந்து மத்தியஸ்தராக மாறி இப்போது புலிகளுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்யும்

தாம் பாவனையாளர்கள் மாத்திரம்தான்" எனத் தெரிவித்திருந்தார். இதனைக் கூறிய போது பத்திரிகையாளர்களிடமிருந்து வெடிச் சிரிப்பொலி எழுந்தது.

"நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு ஆயுதம் அவசியம்" என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

எனவே ஆயுதக் கையளிப்பு என்ற விடயம் எந்தக் கட்டத்திலும் இல்லை என்பதை அப்போதே வெளிப்படுத்திருந்தார்.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம "ஆயுதம் கையளிக்கப்பட வேண்டும். உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்படக் கூடாது" எனத் தமது நிலைப்பாடாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் "உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் பேச்சுவார்த்தை முறிந்துவிடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு நாலாம் கட்டப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் சுமுகமாக நடந்தது பெரும் ஏமாற்றமாய் போய்விட்டது." என்றார் அமைச்சர் பீரிஸ்.

ஆனால் "அரசு அதிக விலையைச் செலுத்தித்தான் நாலாம் கட்டப் பேச்சு வார்த்தையை ஒரு விக்கினமும் இல்லாமல் நடத்தி முடித்தது" எனக் கூறுகிறார்கள் சில அரசியல் விமர்சகர்கள்.

அதாவது உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு அப்பாலுள்ள படை முகாம்களை அகற்றுவதற்கு அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

உள்நாட்டிலுள்ள இடம் பெயர்ந்தவர்களை உயர் பாதுகாப்பு வலயங்கள் அல்லாத ஏனைய இடங்களில் முதலில் குடியேற்றுவது; அதன் பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்களில் குடியேற்றுவது தொடர்பாக ஆலோசிப்பது என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பாரதூரமான முரண்பாடுகளை ஏற்படுத்துபவற்றைத் தவிர்த்து மற்றைய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஆலோசனையை நோர்வே வழங்கியிருக்கலாம்.

உண்மையில் யாழ் குடாநாட்டின் மத்தியில் உள்ள 512 வது படையணியின் நிலைகள், முகாம்கள் அகற்றப்படும் போது, யாழ் குடாநாட்டில் புலிகள் 1990 - 1995 வரை இருந்த நிலையை விடப் பலமான நிலையை அடைகிறார்கள். ஏனெனில் அவர்களிடம் நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய பீரங்கிகள் இருக்கின்றன.

இராணுவ ரீதியில் ஒரு போரில் சாதிப்பதை விட இந்த ஒரு வருட காலத்தில் புலிகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய சாதகமான நிலை இதுவாகும்.

யாழ்ப்பாண அரச படைத் தளபதி சரத் பொன்சேகாவை அப் பதவியில் இருந்து நீக்குமாறு புலிகள் தாய்லாந்தில் கோரிக்கை விடுத்தனர். "சரத் பொன்சேகா இந்த உயர் பாதுகாப்பு வலயப்

என்று கொழும்பில் நடத்திய பேரணியில் குறிப்பிட்டளவு சனத் திரளைத் திரட்டியிருந்தது. "சரத் பொன்சேகாவைப் பொறுப்பில் இருந்து விலக்கக் கோர முடியுமானால் நாம் கருணாவையும் விலக்கக் கோர முடியும்" என்று ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையின் இறுதியில் வழங்கப்பட்ட அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தின் பேட்டி, பேச்சுவார்த்தையின் இடையில் வழங்கப்பட்ட பேட்டியில் இருந்து முரண்பட்டிருந்தது.

*ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையின் இறுதியில் வழங்கப்பட்ட அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தின் பேட்டி, பேச்சுவார்த்தையின் இடையில் வழங்கப்பட்ட பேட்டியில் இருந்து முரண்பட்டிருந்தது.*

"தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படுமானால் ஆயுதங்களுக்கு அவசியம் இருக்காது. தற்கொலைப் படையின் அவசியம் இருக்காது" என்று பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

"ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான முயற்சிகளில் ஆர்வமுடையதாக இருந்தாலும் இராணுவம் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. எனவே ஆயுதப்படைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இந்தச் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடக் கூடும்" என்று மேலும் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் "ஐ.தே.மு. அரசுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே புரிந்துணர்வு தொடர்கிறது" என்று பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதில் அளித்துள்ளார்.

வானொலி உபகரணங்களை வழங்கியது பற்றிய சர்ச்சை புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் வழங்கியதில் சிங்களத் தீவிரவாத

முகவராக மாறிவிட்டதாக த ஐலண்ட் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கம் ஒன்றில் குற்றஞ் சாட்டியிருந்தது.

போதாக்குறைக்கு சிஹல உறுமய எப்.எம். வானொலி நிலையம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம், ஆயுதக் களைவு, எப்.எம். வானொலி உபகரணங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டது தொடர்பான பிரச்சினைகளில் பல்வேறு சக்திகள் பல்வேறு கண்ணோட்டங்களில் தத்தமது நலனில் நின்று பல்வேறு பிரதிபலிப்புக்களைக் காட்டியுள்ளன.

இந்த நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களின் அபிப்பிராயங்கள் என்ன என்பது வெளிக் கொணரப்படவில்லை. அதிகாரப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் சக்திகள் மக்களின் அபிலாசைகளைப் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளவில்லை. இடம் பெயர்ந்த மக்களை, விலைவாசி உயர்வினால் திணறும் மக்களை, மீண்டும் யுத்தம் வந்துவிடக் கூடாதே என அங்கலாய்த்து நிற்கும் மக்களை யாரும் கண்டுகொள்ளவில்லை. இங்கு இந்த மக்கள் முகமற்றுப் போய்விட்டார்கள். இவர்களின் பேரில்தான் எல்லாம் நடக்கிறது. ஆனால் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம் நடத்திய கருத்துக் கணிப்பீட்டில் இந்த நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் (74 வீதம்) சமாதானத்தை விரும்பி நிற்கிறார்கள். இவர்களின் தேவைகள், அபிலாசைகள் பற்றி இந்த அதிகாரப் போட்டியில் ஈடுபடுபவர்கள் கொஞ்சமாவது கவனம் செலுத்துவார்களா? ■

# ஹக்கீமை நிராகரிக்கும் புலிகள்
# சாமாதானத்தில் கேள்விக்குறியாகும் முஸ்லிம்களின் பங்கு

எம். பி. எம். பர்ஷான்



இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் முன்னெப்போதும் இல்லாத அளவு சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளது.

தற்போதைய அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த நாள் தொடக்கம் முஸ்லிம் பிரதிநிதி என்ற வகையில் அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமாகிய ரவூப் ஹக்கீமுக்குப் புலிகள் வழங்கி வந்த அங்கீகாரத்தை மறுதலிக்கும் விதத்தில் புலிகள் இயக்கத்தின் உயர்மட்டத் தலைமை தெளிவாகக் கருத்து வெளியிட்டிருக்கிறது.

புலிகளுக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஆரம்பமாகிவிட்டதை முரசு பல வாரங்களுக்கு முன்னரே சுட்டிக்காட்டியிருந்தது. இத் தடவை தாய்லாந்துப் பேச்சுக்களின் போது இந்த விடயம் வெளிப்படையாகத் தெரிந்தது. பேச்சுவார்த்தை மேசையில் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட முயற்சித்த அனேகமான சமயங்களில் குறுக்கிட்ட அன்டன் பாலசிங்கம் ஹக்கீமுடன் கருத்துப் பரிமாறத் தமக்கிருக்கும் விருப்பமின்மையை வெளிப்படுத்தியதாக அறியக் கிடைக்கிறது.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாலசிங்கம் ஹக்கீமை முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஏற்க முடியாதெனக் கூறியதோடு துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கும் கட்சியை ஒன்றுபடுத்திச் சகலரதும் அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.


நீதிமன்ற உத்தரவுகள் சில ரவூப் ஹக்கீமின் கட்சி அரசியலுக்குச் சாதகமாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், புலிகள் ஹக்கீமை நிராகரிக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டிருப்பது தேசிய அரசியலில் அவர் தன்னை முஸ்லிம்களின் தலைவராக நிலைநிறுத்த எடுக்கும் முயற்சிக்குக் கிடைத்த பின்னடைவு என்றே கூற வேண்டும்.

புலிகள் ரவூப் ஹக்கீமை வன்னிக்கு அழைத்து, அவருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாட்திட்டு, விருந்து கொடுத்து மகிழ்ந்த நாட்களுக்கும் இன்றைய தினங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? ஏன் ஹக்கீம்-புலி உறவு முறிந்தது? இந்த இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது தொடக்கம் இன்றுவரை அவ்வொப்பந்தத்தின் எந்தவொரு சரத்தும் முறையாகவும் முழுமையாகவும் அமுல் செய்யப்பட்டதாக இல்லை. முஸ்லிம்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளான ஆட்கடத்தல்,வரி அறவீடுகளை நிறுத்துதல் போன்ற அம்சங்கள் கூட தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந் நிலையில் இவற்றைத் தடுக்க வேண்டும் என்ற வலுவான அழுத்தம் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடமிருந்து எழுந்தது. ஹக்கீம் இவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். புலிகள் விசயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிக்க முடியாதவராக இருந்த அதே நேரம் கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் அதனோடிணைந்து கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகளையும் சமாளிக்க வேண்டிய இரண்டும் கெட்டான் நிலைக்கு ஹக்கீம் தள்ளப்பட்டார்.

குறைந்த பட்சமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் தீவிர பொருளாதார அபகரிப்புகளையேனும் நிறுத்த வேண்டிய நிலை ஹக்கீமுக்கு ஏற்பட்டது. அவர் புலிகளின் தலைமையுடன் இது குறித்துப் பலமுறை கருத்துப் பரிமாறினார். ஆனால் கிழக்கில் இத்தகைய சம்பவங்கள் தொடரவே செய்தன.

நோர்வே ஏற்பாட்டாளர்களுடாகப் புலிகளை வழிக்குக் கொண்டு வரலாம் என்று கருதிய ரவூப் ஹக்கீம் அந்த வழியிலும் முயற்சி செய்து பார்த்தார். அதுவும் சாத்தியப்பட்டதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகள் குறித்துப் பாரதூரமான விவாதங்கள் எழுந்தன. எத்தகைய அரசியல் தீர்வில் முஸ்லிம்கள் பங்குபெற வேண்டும் என்று விவாதிக்கப்பட்டன.



அன்றாட வாழ்வுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளையே பேசித் தீர்க்க முடியாத ஒரு தலைவர், அடிப்படையான அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதை எந்த ஒரு சமூகமும் விரும்பாது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டி ஹக்கீமின் நிலையைப் பலவீனப்படுத்தியதோடு புலிகளுக்கு ரவூப் ஹக்கீமை ஓரங்கட்ட மிகவும் வசதியான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. தனது கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளித்து அதிருப்தியாளர்களை அரசியல் ரீதியில் வெற்றிபெற புலிகள் விசயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்கு ஹக்கீம் தள்ளப்பட்டார்.

எமது மக்கள் தங்களது உரிமை விசயத்தில் தலைமை உறுதியாக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள் என ரவூப் ஹக்கீம் கடந்த வாரங்களில் கூறி வந்தார். மக்கள் தங்களது உரிமைகள் தொடர்பில் தலைமை உறுதியான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்புவதாக ரவூப் ஹக்கீம் மிகவும் தாமதமாகவே புரிந்துகொண்டார். முஸ்லிம் காங்கிரஸ் இரண்டுபட்டு, ரவூப் ஹக்கீமின் தேசியத் தலைமைத்துவத்திற்கு நெருக்கடி வராமல் இருந்திருந்தால் அவர் சொல்லுவது போல் மக்கள் விருப்பத்தை இன்னமுமே புரிந்து கொண்டிருப்பார் என்று கூற முடியாது.

தங்களது பதவிகளுக்கும் தலைமைத்துவத்திற்கும் பிரச்சனை ஏற்படும்போதுதான் முஸ்லிம் தலைவர்கள் மக்களின் விருப்பம் குறித்து உணரத் தொடங்குகிறார்கள்.

புலிகளுடன் வன்னிக்குச் சென்று ஒப்பந்தம் செய்து கொண்டபோது சுற்றிவர நின்று புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்த அதாவுல்லாவும் அவரது சகாக்களும் ஹக்கீமுடன் முரண்பட்டுப் பகிரங்கமாகப் போர்க் கொடி தூக்கியதும் முஸ்லிம் காங்கிரஸ்-பிரபாகரன் ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் புலிகளும், இரண்டுபட்ட முஸ்லிம் காங்கிரஸில் அதாவுல்லா குழுவினரைப் புறக்கணித்து ரவூப் ஹக்கீமைத் தங்களுடன் வைத்துக்கொள்ளும் நிலையிலிருந்து செயற்பட்டபோது, முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பாக புலிகளுடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது என்ற புதுப் பாட்டை அதாவுல்லா, நூர்தீன் மசூர் போன்றோர்கள் பாடத் தொடங்கினார்கள். இப்போது ரவூப் ஹக்கீம் புலிகளுடன் முரண்பட்டிருக்கிறார் என்றதும் ஒருவேளை அந்த இடத்திற்குத் தங்களைப் புகுத்திக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவினர் முயற்சிக்கக் கூடும். உண்மை என்னவெனில் இந்த இரண்டு பிரிவினருமே மக்களின் நலன் என்பதற்கப்பால் தங்களது அதிகார இலாபங்களுக்காகப் புலி வாலை எப்படிப் பிடிக்கலாம் என்றுதான் சிந்திக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகள் குறித்துப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக முஸ்லிம் தலைவர்கள் புலிகளுடன் பேசுவது பொருத்தமற்றது என்று ரவூப் ஹக்கீமோ அதாவுல்லாவோ முன்னர் ஒருபோதும் கூறியதில்லை.

முஸ்லிம்களின் உரிமைகளைப் புலிகளிடம் இருந்துதான் பெற்றெடுக்க வேண்டும் என்ற கருத்துருவத்தையே இதுவரை காலமும் முஸ்லிம் தலைவர்கள் கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் விசயத்தில் புலிகள் கொண்டிருக்கும் அடிப்படையான கோட்பாடு என்ன என்பதைத் தெளிவாக தெரிந்து கொண்டிருந்தபோதும் முஸ்லிம் தலைவர்கள் புலிகளையே நம்பியிருந்தனர். இது ரவூப் ஹக்கீமுக்கு மட்டுமல்ல அதாவுல்லாவுக்கும் பொருந்தும்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பான பலவாறான கருத்துப் பரிமாற்றங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற போதும் நூற்றுக்கும் குறைவான குடும்பங்களே வடக்கில் மீளக் குடியேறியுள்ளன.

இப்போது ரவூப் ஹக்கீமின் பிரதிநிதித்துவம் புலிகளால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. பாலசிங்கம் கூறியது போல் முஸ்லிம் காங்கிரஸ் ஒன்று சேர்ந்து பிரதிநிதி ஒருவரைப் பிரேரிக்கும் வாய்ப்பும் மிகக் குறைவு. அப்படியாயின் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டங்களில் முஸ்லிம்களின் கதி என்ன? யார் முஸ்லிம் பிரதிநிதியாகப் பேச்சுவார்த்தைக்குச் செல்வது?

தங்களது எதிர்பார்ப்புக்கள் சிலவற்றிற்கு முஸ்லிம் சமூகம் குறுக்கே நிற்கக் கூடும் என்ற பயம் புலிகள் மத்தியில் கணிசமாகக் காணப்பட்டதை அண்மைக் காலமாக வெளியிடப்பட்ட புலித் தலைவர்களின் அறிக்கைகளிலிருந்து உணர முடிந்தது.

தங்களது போராட்டத்தில் இருந்து முஸ்லிம்கள் இலாபம் அடையப் பார்க்கிறார்கள். அதுவும் தமிழ் மக்களுக்குச் சிங்கள அரசாங்கத்தினால் கிடைக்கும் அரசியல் அதிகாரப் பங்கீட்டில் இருந்து முஸ்லிம்கள் பங்கு கேட்கத் தொடங்கிவிட்டார்கள் என்ற எண்ணக்கரு புலிகளுக்குள் தீவிரமாக நிலவுகிறது. இந்தப் பின்னணியிலிருந்து பார்க்கும்போது முஸ்லிம்களின் தலைமைத்துவம் உறுதியான ஒரு கோரிக்கையை முன்வைக்க முடியாத அளவு பலவீனப்படுவது புலிகளைப் பொறுத்தவரை சாதகமான.அம்சம். அரசாங்கத்திடமிருந்து உரிமைகளைப் பெறுவதில் புலிகளும் முஸ்லிம்களும் ஒரே அணியில் நிற்கிறார்கள் என்றால் முஸ்லிம்கள் பலமாக இருப்பதைப் புலிகள் விரும்பக் கூடும். ஆனால் இங்கே நிலைமை அதுவல்ல.

பேச்சுவார்த்தை மேசைக்கு முஸ்லிம் புத்திஜீவிகள் குழுவொன்றை அனுப்புவது தொடர்பாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசியல் பிரதிநிதித்துவம் இன்றி வெறுமனே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேச்சுவார்த்தை மேசைக்குப் போவது எந்த விதத்திலும் பிரயோசனம் இல்லாத விடயம்.

மிகவும் முக்கியமான ஒரு தருணத்தில் முஸ்லிம்களுக்கெனத் தலைமை ஒன்று இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. யார் ஈடு செய்வது? எப்படி நிவர்த்தி செய்வது? முஸ்லிம் சமூகத்தின் அடுத்துள்ள பிரதான கேள்வி இதுதான். ○

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் **குளியலறை உபகரணங்களை**
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)
நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 18.01.2003 முதல் 21.01.2003 வரை
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 077-602513.

## வகுப்புக்கள்

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் 2003 இல் தபால் மூலம் தையற்கலை.

டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை, பெயின்டிங், மணப் பெண் அலங்காரம் பயிற்றுவிக்கப்படும். பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளவும்.

Director:- Mrs. Sithy Kamila Rafi,
No: 41, Vihara Road, Matale.

## பத்திரிகை முகவர் தேவை

வாராந்தம் வெளிவரும் எமது தினமுரசு பத்திரிகையை விநியோகிக்க பின்வரும் பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. முந்தல், 2. உடப்பு, 3. ஹொரவப்பொத்தானை, 4. காலி,
5. பல்லேகட்டுவ, 6. கந்தபோல, 7. பத்தலுஓயா, 8. மல்வான.

விண்ணப்பதாரர்கள் தமது விபரங்களைப் பின்வரும் முகவரிக்குக் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அறிவிக்கலாம்.

தொடர்பு: **தினமுரசு வாரமலர்,**
இல. 16 A நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P.: 074-514282 Fax: 074-513266.

## கம்பியூட்டர் வகுப்புக்கள்

7 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு பெண்டியம் கம்பியூட்டர்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. புதிய வகுப்புகள் ஜனவரி 2 இல் ஆரம்பம். கட்டணம் மணித்தியாலத்திற்கு 50 ரூபா. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-
**Swiss Tec Computer System**
5-1/21, கொட்டாஞ்சேனை மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு-13.
✻ T.P 078-669247 ✻

## விளம்பரப் ✻ பகுதி ✻

## Anisch Credit & Kranken Kasse

ANISCH

Anisch Bank Credit இன் குறைந்த வட்டி வீதத்தில் இருந்து வங்கிக் கடன் வழங்கும் திட்டமும், ஆலோசனையும்.

(உதாரணம்:- 4000 Sfrக்கு வருட வட்டி 62 Sfr மட்டுமே) 2003 ஆம் ஆண்டின் புதிய வங்கிக் கடன் பெறும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளதை முன்னிட்டு டிசம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை எம்மிடம் Sfr 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1/2 பவுண் தங்க நகை; Sfr 20 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1 பவுண் தங்க நகை; Sfr 45 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 2 பவுண் தங்க நகை அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு K. Ananda
**Anisch Credit & Kranken kasse**
Gantrisch -Str -11 - 3052- Zullikofen (Born Swiss )
Tel:- 031-9110338 , Natel : 078-8158916 Fax:- 031-9115894

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

வீட்டுப் பணிப்பெண்கள். ஆண்களுக்கான எல்லாவிதமான தொழில்கள்

**சவுதி அரேபியா, குவைட், டுபாய், கட்டார், ஜோர்டான், லெபனான்.**

| | |
|---|---|
| இருவழிப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் | சேவைக் காலமான 2 வருடத்திற்குள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தரப்படும். |

பணிப்பெண்களுக்கு இலவசம்

**ZAHANA INTERNATIONAL**
*Manpower Supply*

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச் சீட்டு, புகைப் படங்கள், வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன்

Tel : 074-610301, 074-618502
Fax : 074-724324
Mobile: 072-426669.
E-mail : zahana@dialogsl.net
LLNO: 1845

75/2, 2nd Floor, Armour Street, Colombo 12, Sri Lanka.

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)
*Eric Rajapakse*
Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539. காலி வீதி. வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142 2/1, காலி வீதி. வெள்ளவத்தை, கொழும்பு 06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.


பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்பக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.



### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்பக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. இலங்கை நேரப்படி
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# பின்னோக்கிய திசையில் சமூகத்தை இழுக்க முடியாது

2003 இல் சமாதான முயற்சிகள் எவ்வளவு தூரம் முன்னோக்கிய திசையில் செல்லும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

2002 ஒப்பீட்டளவில் பாரியளவிலான மனித உயிரழிவுகள் தவிர்க்கப்பட்ட ஆண்டாகக் காணப்பட்டது. ஆனால் ஆட்கடத்தல்களுக்கும், ஆற்றில் வீசப்பட்ட சடலங்களுக்கும், வேலை செய்யும் தளத்தில் இருந்து மாற்று அரசியல் கட்சிகளை வெளியேற்றுவதற்கான சதி வேலைகளுக்கும் குறைவிருக்கவில்லை.

கடந்த ஆண்டில் பெருமளவு மக்கள் உலகின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் வடக்கு-கிழக்கிற்குச் சென்றார்கள். உறவுகளை, உற்ற சுற்றங்களைப் பார்ப்பதற்குக் கூடி வாழ்வதற்குப் பல ஆண்டுகளின் பின் சென்றார்கள்.

யாத்திரீகர்களாகவும், உல்லாசப் பிரயாணிகளாகவும் வேற்று நாட்டு மக்களும் நம்நாட்டு மக்களும் வடக்கு- கிழக்கிற்கு வந்தார்கள். சோதனைச் சாவடிகள் தளர்த்தப்பட்டு, ஏ9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டு இனம்புரியாத மகிழ்ச்சியொன்று மக்களின் மனங்களில் பிரவாகித்தது.

வாழ்க்கை வடக்கு-கிழக்கில் மீண்டும் சுடர் விடுகிறது என்ற நம்பிக்கைகள் எழுந்து கொண்டு இருக்கையில் அந்தச் சுடர் அணைந்துவிடுமோ என்ற அச்சமும் ஏக்கமும் இருந்து கொண்டுதான் இருந்தது. முஸ்லீம் மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான கேள்விகள் எழும்பும் அளவிற்குச் சம்பவங்கள் நடைபெற்றன. அதே போல் தமிழ்ச் சமூகத்தில் மாற்று அரசியல் கட்சிகளின் இருப்பும் கேள்விக் குறியாகியது.

ஆனால் இந்த இருப்புகள் செயற்பாடுகளுக்கான பாதுகாப்பு திட்டவட்டமாக உறுதிப் படுத்தப்படாத நிலையில் 2003ம் ஆண்டை அடைந்துள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டையும் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பது மனித குலத்தின் இயல்பு.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முரண்பாடு கடந்த ஆண்டின் இறுதியில் உச்ச நிலையை அடைந்தது. அது தற்போது தணிந்திருப்பினும் திரும்பவும் எழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படுவதன் மூலம் வடக்கு-கிழக்கின் நிலை குணாம்ச ரீதியாக வேறுபட்டு விடலாம். வெறும் இராணுவ ரீதியான உள்ளடக்கத்தை மாத்திரமல்லாமல் இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம் என்ற உள்ளடக்கத்தையும் அது கொண்டிருக்கிறது. எனவே மிகுந்த அவதானத்துடனும் நிதானமாகவும் இவ்விடயம் கையாளப்பட வேண்டும். சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழும் நிலையா அல்லது பழம் நழுவி பாலில் விழும் நிலையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி முறையிலான தீர்வு தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். எனவே கருமேகம் சூழ்ந்த நிலையில் பிரகாசமான சில நிகழ்ச்சிகள் நடந்த ஆண்டாக 2002 ஐக் கொள்ள முடியும்.

ஆனால் சாதாரண மனிதனின் அன்றாட வாழ்விற்குச் சவால் விடும் அளவிற்கு விலைவாசிகள் அதிகரித்துள்ளன. மாவின் விலை 2.50 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பது தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வைப் பாரதூரமாகப் பாதிக்கும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி. விலைவாசிகள் மற்றும் யானை-புலி கூட்டுக்கு எதிராகக் கொழும்பில் குறிப்பிட்டளவு மக்களைக் கொண்ட எதிர்ப்பு இயக்கத்தை நடத்தியது. தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்குவதற்குத் தொழில் வழங்குவோருக்குச் சாதகமான முறையில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் பெருவாரியான தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தலாம். இந்த அமைதியின்மை தவறான வழியில் கையாளப் படுமானால் தற்போதைய நிலைமைகள் மேலும் மோசமடையலாம்.

மேற்காசியாவில் யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்ற நிலையில் அது நம்மையெல்லாம் பாதிக்காது என்று கண்களை மூடியிருந்துவிட முடியாது.

## கிழக்கான்

சர்வதேச உதவிகள் பெருமளவு எதிர் பார்க்கப்படும் ஆண்டாக இருந்தாலும் மேற்காசிய நிலைமைகள், எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிடலாம்.

எனவே சமயோசிதமாகவும் தீர்க்கதரிசனத்துடனும் செயற்பட வேண்டிய தேவை இலங்கையின் அரசியல் சமூக, பொருளாதார, இராணுவ சக்திகளுக்கு இருக்கிறது. எனவே உலக நிலைவரங்களை அலட்சியப்படுத்தி எமது நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

ஈராக்குடனான யுத்தத்திற்கு இலங்கையைத் தளப் பிரதேசமாகப் பாவிப்பது பற்றியும் திருகோணமலைத் துறைமுக நகரில் அமெரிக்காவிற்கு மீண்டும் ஆர்வம் ஏற்பட்டிருப்பது பற்றியும் உள்ளூர், சர்வதேச ஊடகங்கள் செய்திகள், கட்டுரைகள், குறிப்புக்களை வெளியிட்ட வண்ணமுள்ளன.

சமகால நிலைவரங்களில் இந்த நாட்டின் இறைமை பற்றிய கருத்து அர்த்தம் இழந்து கொண்டிருக்கிறது.

பல்வேறு நாடுகளினதும் சர்வதேச நிறுவனங்களினதும் ஆர்வமூட்டும் பிரதேசமாக மாறியிருக்கும் இலங்கையில் பல்லினங்களின் சம உரிமை உறுதிப்படுத்தப்படுவதும் சகல சமூகங்களின் உள்ளும் ஜனநாயகம், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் இந்த வருடத்தில் முக்கியமாக எதிர்பார்க்கப்படுவதாகும்.

எவரும் பின்னோக்கிய திசையில் சமூகத்தை இழுக்க முடியாது. ஆனால் சமூக ஜனநாயக சக்திகள் விழிப்பாக இல்லாவிட்டால் எல்லாமே தலைகீழாகி விடலாம். ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும்.

# ஜனநாயக சுதந்திரம் இல்லாமல் பொருளாதார அபிவிருத்தியும் இல்லை

ஈராக்கிய சதாம் ஹுசைனுக்கோ அல்லது பாகிஸ்தான் ஜனாதிபதி முஸாரப்பிற்கோ அவர்கள் ஜனநாயக அக்கறை அற்றவர்களாக இருப்பினும் தவிர்க்க முடியாத, உதாசீனம் செய்ய முடியாத சில கடமைகள் இருக்கின்றன. அதாவது ஈராக்கிய பாகிஸ்தான் மக்களுக்கான சேவைத் துறைகளைக் குறைந்த பட்சம் பராமரிப்பது அல்லது வழங்குவது.

ஈராக்கினதோ அல்லது பாகிஸ்தானினதோ தேசிய வருமானத்திலிருந்தோ அல்லது சர்வதேச உதவியிலிருந்தோ மக்களுக்கான சேவைகளை வழங்கல் என்பதே அது.

ஜனநாயகத்தை அங்கீகரிக்காத அல்லது ஏற்றுக்கொள்ளாத சர்வாதிகார அரசுகளாக இருந்தாலும் அவர்கள் இந்தக் கடமைகளிலிருந்து ஒரேயடியாக நழுவிவிடவில்லை.

ஆனால் தமிழ் சமூகத்தின் மத்தியில் தமது இராணுவ மேலாண்மையினால் அரசாகிக்கொண்டிருக்கும் சக்தி எப்போதும் மக்களின் நுகர்வுச் சேவை பற்றிக் கருத்திற்கெடுத்ததில்லை. தனது யுத்த இயந்திரத்திற்கு மக்கள் எவ்வாறு பயன்படுவார்கள் என்பதிலேயே அதன் கவனம் எல்லாம் குவிந்திருந்ததே அல்லாமல் இந்த மக்களின் வாழ்க்கை உருப்படியாக ஆக்கப்பட வேண்டும் என்பதில் சிறிதளவும் அக்கறை காட்டுவதாக இல்லை.

மக்கள் சமூகமொன்று தமக்கு வரி செலுத்த வேண்டிய, யுத்தத்திற்கு ஆட்களை வழங்க வேண்டிய, தாம் நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்புக்கள் எல்லாவற்றிலும் பங்கேற்க வேண்டிய கும்பலே தவிர எலும்பும்- தசையும்- உணர்ச்சியும்- உணர்வும் உள்ள மனிதர்களாகக் கருதப்படவில்லை.

1990-1995 வரை யாழ்ப்பாணம் இந்த மேலாதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது. இக்காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் எவற்றையாவது பட்டியலிட முடியுமா? பனங்களியில் உடை தோய்ப்பது எப்படி? சூட்டடுப்பில் சமைப்பதெப்படி? என்று, சமூகம் பின்னோக்கிய ஒரு வாழ்க்கை முறைக்கு நகர்த்தப்பட்டிருந்தது.

ஆனால் 1990 தொடக்கம் இன்று வரை அவர்களின் கட்டுப்பாட்டில்தான் வன்னியிருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளைப் பட்டியலிட முடியுமா? யுத்தத்தைக் காரணம் காட்டி இவற்றுக்கான நியாயங்களைக் கூறிவிடலாம்.

ஆனால் உண்மையில் தம்மை மையப்படுத்தாத சமூக வாழ்வில் அவர்கள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

மக்களுக்கு இலவசமாக மானிய அடிப்படையில் கிடைப்பவற்றிற்கு மேல் வரி விதிப்பது அல்லது அவற்றில் ஒரு குறிப்பிட்ட வீதத்தைத் தமது பங்காக எடுத்துக்கொள்வது என்ற போக்குத்தான் காணப் படுகிறது.

கிராமங்களின் வறிய மக்களுடன் சம்பந்தப்பட்ட சமுர்த்தி ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கூட பணம் அறவிடப்படுகிறது.

காடுகளில் சுள்ளி பொறுக்குவோரும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஆசிரியர்கள் அரச ஊழியர்களும் அவ்வாறுதான்.

சாதாரண மக்களின் வாழ்க்கை மீது அவர்களின் அந்தரங்கங்களைச் சோதனை இடுதல், அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாக பெற்றோர் மாத்திரமல்ல பிள்ளைகளே தீர்மானிக்க முடியாத நிலை போன்றவை இருக்கும்போது வடக்கு-கிழக்கு எவ்வாறு சமகால முன்னேறிய உலகிற்கு நிகராக வளர்ச்சியடைய முடியும்.

ஐரோப்பாவிற்கும் ,வட அமெரிக்க நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களும் வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களும் சமகால உலகிற்கு ஈடு கொடுத்து வாழ முடியும்.

ஆனால் வடக்கு-கிழக்கில் எந்தச் சட்ட திட்டங்களுக்கும் அடங்காத வரி செலுத்திக் கொண்டு சில்லறைத் தொழில்களைச் செய்யலாம். ஆனால் பிரமாண்டமான அளவில் புதிய தொழிற் துறைகளையோ மீன்பிடி, விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட நவீன தொழில் துறைகளையோ மேற்கொள்ள முடியாது.

தென்னாசியாவில் முன்னணி வகிக்கக் கூடிய கம்பியூட்டர் நகரங்களை உருவாக்கக் கூடிய நுட்பமான தொழில்நுட்ப அறிவுள்ளவர்களை உருவாக்கும் வளமான அந்த வடக்கு கிழக்கு நிலம் தற்போது அந்த வாய்ப்புக்களை இழந்து கொண்டிருக்கிறது.

யார் அதிகாரத்திலிருக்கிறார்களோ அவர்கள் சமூகத்தைத் தம் மயமாக்க முனைகிறார்கள். அதற்கு உலகியல் அறிவு தேவையில்லை என்று கருதுகிறார்கள். யுத்தத்திற்கு ஆட்திரட்டும்போது 11,12 வயதுச் சிறுவர்களை அணிதிரட்டுவதும் அந்த அடிப்படையிலாகும்.

துரதிர்ஸ்டம் என்னவென்றால் சமூகத்தில் யாரும் இவை பற்றி கேள்வி கேட்கவோ அல்லது ஊடகங்கள் கண்டுகொள்வதான நிலைமைகளோ இல்லை. தமிழ் ஊடகங்கள் எனப்படுபவை ஊடகங்களுக்குரிய உண்மையான தார்மீக நெறிமுறைகளுக்கேற்ப நடுநிலையாகவோ, சமூகப் பொறுப்புணர்வுடனோ செயற்படுவனவல்ல என்பது பல தடவை இப் பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சமூகம் எக் கேடு கெட்டால் என்ன? தமது இருப்பிற்குப் பங்கம் வந்துவிடக் கூடாது. எனவே புலிகள் எதனைக் கூறுகிறார்களோ ஊடகங்களும் அதனைத் திருப்பிக் கூறுபவையாக இருக்கினறன அல்லது புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதாக அல்லது மூடி மறைப்பதாகச் செயற்படுகின்றன.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச சமூகத்திற்கு இது விளங்காத ஒன்றல்ல. எவ்வாறு சமகால சர்வதேச தராதரத்திற்கேற்ப மாற்றங்களைக் கொண்டுவரப்போகிறாகள் என்பதே முக்கியமான கேள்வியாகும்.

ஏனெனில் ஜனநாயகத்தின் அரிச்சுவடி கூட எமது சமூகத்தில் செல்லரித்துப் போய்விட்டது.

கம்பூச்சியாவை ஒருகாலத்தில் மனிதப் பேரழிவிலும், வறுமையிலும் வைத்திருந்த பொல்பொட்டிஸம் அல்லது அடிப்படைவாதப் பிற்போக்குத்தனங்கள், வறுமை, மனித உரிமைகளிலிருந்து பெருந்தூரத்தில் ஆப்கானிய சமூகத்தை வைத்திருந்த தலிபானிஸம் இவற்றுக்கு நிகரான சித்தாந்தங்களே எமது சமூகத்தில் ஆதிக்கம் பெறுகின்றன.

எனவே இங்கு அழிவை வழிபடும்-இருளை வழிபடும் ஒரு நிலைதான் பராமரிக்கப்படும். இந்தச் சூழ்நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளோ அல்லது சர்வதேச சமூகத்தின் முதலீடுகளோ அல்லது எமது இளைய தலைமுறையினருக்கு வேலை வாய்ப்புக்களோ, உருப்படியான கல்வியோ சாத்தியமில்லை.

## தாகூர்

சுதந்திர இந்தியாவை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்வதற்குத் தீர்க்கதரிசனமும் அறிவொளியும் கொண்ட ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் இருந்தார்கள்.

ஆனால் அறிவையும், ஜனநாயகத்தையும் வெறுக்கும் ஒரு சர்வாதிகாரக் கட்டமைப்பில் உள்ள எமது சமூகத்தில் முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியுமா என்பதே முக்கியமான ஒரு கேள்வியாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாரதியார் "தோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம் ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்" என்றெல்லாம் பாடினான். அப்படிக் கனாக் காணும் கவிஞனை எமது சமூகத்தில் காண முடியுமா? அது கவிஞர்களின் தவறல்ல. அதனை நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் எமது சமூகம் இருக்கிறது.

எனவே அரசியல் அரங்கில் மாத்திரமல்ல பொருளாதார அரங்கிலும் ஜனநாயகம் வேண்டும்.

# அதிரடி அய்யாத்துரை



**நாலாவது** தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவையின்ர நினைவாய் இந்த ஜனவரி 10ந் திகதி யாழ்ப்பாணம் முத்தவெளியில கூட்டம் நடந்தது. அதில 'துரோகிக் குழுக்கள்' எண்டு சொன்னவையும், 'பாஸிசக் குழு' எண்டு சொன்னவையும் ஒண்டாய் மேடையேறிப் பேசினவையாம். 'அருகூட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும் ஒரு கூட்டில் வாழ உலகு' எண்டு ஆரோ ஒரு புலவர் முந்திச் சொன்னவரெல்லே...

**உண்மையாய்ச்** சமாதானம் வரவேணுமெண்டால் பேச்சிலயும் ஒரு நிதானம் இருக்கவேணும் கண்டியளோ! 'புலியளோட சண்டை பிடிச்சுப் பின்வாங்கின அனுபவம் இருக்கிறபடியால் சதீஸ் நம்பியார் அதியுயர் பாதுகாப்ப வலயம் பற்றி ஆக்கபூர்வமான கருத்துச் சொல்ல ஏற்ற ஆள்தான் எண்டெல்லே சொல்லுது இந்த கிட்னி ட்ரபிள் மனுசன். ஆலோசகருக்கு நக்கல் இருக்கலாம், நளினம் இருக்கலாம், இந்தப் பாணியம்தானே கூடாதெண்டிறது...

**ஆலோசகர்** என்னைவிட அதிரடி விண்ணாணக்காரர் எண்டதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேணும். பத்திரிகைக்காறரெல்லாம் நிலைகுலைஞ்சு போற மாதிரி 'பாவனையாளர் தியரி' ஒண்டை எடுத்து விட்டவரெல்லோ? "ஆயுதங்கள் எங்களிட்டை இல்லை. அது மக்களிட்டை இருக்கு. அதை எடுத்து நாங்கள் பாவிக்கிறம். நாங்கள் வெறும் பாவனையாளர்கள், அவ்வளவுதான்" எண்டு அவர் சொல்ல, முன்னால இருந்த பத்திரிகைக்காறர் அடக்க மாட்டாமல் வெடியெழுப்பின மாதிரி சிரிச்சுப் போட்டினம். ஆலோசகற்றை விளக்கங்கள் கேட்டு எனக்கு அப்பப்ப சீலை உரிஞ்ச மாதிரி ஒரு அந்தரம் வாறதுதான்! ஆனால் அதெல்லாத்துக்குள்ளயும் இது சூப்பரோ சூப்பரண்ணை...!

**சமாதான** மரத்தைக் கிளை பரப்பி உறுதியாய் வேரூண்ட விடுறார் ரணில் எண்டு நினைக்கிறன் நான். சமாதானச் செயற்பாட்டில பெண் விவகாரக் குழு, சிறுவர் துஷ்பிரயோகம் கவனிக்கக் குழு, இயன் மாட்டின் தலைமையில மனித உரிமைக் குழு, நம்பியார் தலைமையில உயர் பாதுகாப்ப வலயக்குழு இன்னும் பல உப குழுவெண்டு போருக்குத் திரும்பேலாத ஒரு வியூகம் அமையுதெண்டு கந்தசாமியண்ணரிட்டச் சொன்னன். அவர் காதைத் தடவிக் கொண்டு சொன்னார்: "எங்கட நம்பிக்கை அவைக்கு விளங்காது. மரத்தில இருக்கிற கிளியெல்லாம் பறக்க, ஒரு வெடி பறிஞ்சால் காணும்..."

**ஆலோசகரைப்** பற்றித்தான் இன்னுமொரு கதை. இப்பவோ எப்பவோ எண்டு வருத்தத்தில கஷ்டப்படுகுதெல்லே மனுசன்? ஆனால், அண்ணை எப்ப போவார் திண்ணை எப்ப காலியாகும் எண்டு அந்த இடத்தைப் பாய்ஞ்சு பிடிக்கிறதுக்கும் நம்மட தமிழ்ப் பத்திசீவியளுக்குள்ள இப்பவே ஓடுப்பாடு நடக்குதாம். மும்முரமாயிருக்கிறவர்... யெஸ், ஆரெண்டு நினைக்கிறியள்? இவரும் குயுக்தியாய் யோசிப்பார்; ஆங்கிலத்தில எழுதுவார்; கண்ணாடி போடுவார்; தண்ணியும் போடுவார்... ஆ... பின்னைக் காணாதே?

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை அணிக்கு உற்சாகமான வெற்றி

**தொ**டர் தோல்விகளால் துவண்டு போயிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணி வி.பி.கிண்ணத்துக்கான போட்டி ஒன்றில் அவுஸ்திரேலிய அணியை 79 ஓட்டங்களால் வெற்றி கொண்டு மீண்டும் உற்சாகமடைந்திருக்கிறது.

9ம் திகதி சிட்னியில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 343 ஓட்டங்களைப் பெற்றது. சனத் ஜயசூரிய 122 ஓட்டங்களையும் மாவன் அத்தப்பத்து 101 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 237 ஓட்டங்களைப் பெற்றுச் சாதனை படைத்தனர். ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணியின் அதி கூடிய இணைப்பாட்டச் சாதனை இதுவாகும்.

ஜயசூரிய 2 ஓட்டங்கள் மட்டுமே பெற்றிருந்த நிலையில் பந்து நேராக விக்கெட்டில் பட்டு ஆட்டமிழக்கும் நிலைக்கு முகம் கொடுத்த போதும் அது 'நோ போல்' என்பதால் அதிஷ்டம் கை கொடுத்தது. ஜயசூரியவின் 'கெட்ச்' இரண்டு கைநழுவிப் போனதுடன், அத்தப்பத்து 86 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் அவரின் கெட்ச் ஒன்றையும் அவுஸ்திரேலிய வீரர்கள் கைப்பற்றத் தவறிவிட்டனர். இலங்கை அணிக்காக மஹேல ஜயவர்த்தன ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களைப் பெற்றார்.

சிட்னி மைதானத்தில் பெறப்பட்ட அதி கூடிய ஓட்டமாகவும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராகப் பெறப்பட்ட அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையாகவும் இந்த 343 கருதப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணி 49.3 ஓவரில் 264 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டேமியன் மார்டின், மைக்கல் பெவன் ஆகியோர் முறையே 40, 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜயசூரிய 39 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முத்தையா முரளிதரன் இந்தப் போட்டியில் பெற்ற 2 விக்கெட்டுக்களுடன் 299 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# இலக்கிய நயம்

**த**ன் மார்பில் மலர் மாலையெனத் துவண்டு கிடந்த மாதுளாவைத் தன் கரங்களால் சிறைப்படுத்தியிருந்தான் நகுலன்.

அடி மரமொன்றில் தன் முதுகைச் சாய்த்து அமர்ந்திருந்தான் நகுலன். அவன் மார்பில் முதுகைச் சாய்த்து அமர்ந்திருந்தாள் அந்தக் காரிகை. இருவர் காற் பகுதிகளும் எதிரெதிர்த் திசையில் நீண்டு கிடந்தாலும் இடைக்கு மேற்பட்ட இருவர் உடம்புகளும் ஒரச்சில் இணைந்திருந்தன.

மாதுளாவின் நெற்றியில் தன் கன்னத்தைச் சாய்த்திருந்தான் நகுலன்.

அத்துமீறிய எந்தச் செய்கையிலும் அவன் கைகள் இறங்காதிருந்தாலும் எல்லைக்குட்பட்ட நிலைமைகூட எதிர்பார்ப்பை அதிகமாகக் கிளறிவிட்டதால், இருவருமே இன்ப ஜாலத்தில் மூழ்கிக் கிடந்தனர்.

அவள் கழுத்தைச் சுற்றி வளைத்திருந்த நகுலனின் வலது கை இப்போது வழுவழுத்த அவள் கழுத்தை விட்டு மெல்லக் கீழே இறங்கலாயிற்று. இடது கையும் அவள் இடையை விட்டு இடம் மாற ஆரம்பித்தது.

அந்த நகர்வுகளை அனுமதித்தால் தன் உணர்ச்சிகள் விபரீதத்தின் எல்லைக்குப் போய்விடும் என்ற நினைப்பால் சற்று விலக முற்பட்டுத் தன்னுடலை முன்னோக்கி அசைத்தாள் மாதுளா.

ஆனால் அவன் இரும்புக் கரங்கள் தனக்கு விடுதலை அளிக்க மறுப்பதை உணர்ந்ததால் சற்றுக் கோபத்தின் வசப்பட்ட மாதுளா, "சரி சரி கையை எடுங்கள்" என்றாள். குரலில் கோபத்தைக் காட்டி.

"எந்தக் கையை?" என்றான் நகுலன் அவளைத் தன்னோடு மேலும் சேர்த்து இறுக்கியபடி.

"என்னைச் சுற்றி வளைத்திருக்கிற இந்தத் துஷ்டக் கைகளை" என்றாள் மாதுளா அவன் கைகளுக்குள் தன் உடலை நெறித்துத் திமிறியதால் ஏற்பட்ட தினறலுடன். அந்தப் பஞ்சுப் பொதி நெளிந்ததும் திமிறியதும் நகுலன் கைகளுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தன.

"என் கைகள் மட்டும்தான் துஷ்டக்கைகள். ஆனால் உன் உடல் முழுவதிலும் எத்தனை துஷ்ட அங்கங்கள்..!"

"ம்... உங்கள் கைகளைப் போல் அவை ஆளைச் சுற்றுவதில்லை...." என்று தன் அழகிய உதடுகளில் இகழ்ச்சிப் புன்முறுவல் காட்டினாள் மாதுளா.

"ஆமாம், சுற்றுவதில்லை. ஆனால் சுழல வைக்கின்றன."

"ச்சீ... விடுங்கள். உங்களுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது" என்றாள் அவள் கைகள் புகுந்து விளையாட முற்பட்ட இடங்களால் உணர்ச்சி அலைகளில் மோதித் திணறியபடி.

கைகளின் சேட்டையை நிறுத்தாமல் அவள் கன்னத்தோடு கன்னத்தை உராய்ந்தபடி நகுலன் சொன்னான், "ஆமாம்" என்று.

"என்ன ஆமாம்?"

"பைத்தியந்தான் பிடித்திருக்கிறது."

"என்ன பைத்தியம்?"

"காதல் பைத்தியம்" என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தான் நகுலன்.

திரும்பி அவள் கண்களை ஆராய்ந்தான். உதடுகளால் அங்கே ஒற்றினான். மாதுளா சிலிர்த்து விழிகளை மலர்த்தினாள்.

அந்த விழிகளின் பாய்ச்சலைத் தாங்க மாட்டாமல் நகுலன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்ன?" என்றாள் அவள் செல்லமாக.

"தினைப் புனக் காவலர் பயிரை அழிக்க வந்த விலங்குகளை அம்பெய்து கொன்று மீண்டும் அந்த மிருகங்களின் உடலிலிருந்து தைத்த அம்பைப் பறித்தெடுத்து வருவார்களல்லவா.... அந்த

## "காதல் நோயினைக் காட்டிக் கொடுத்திடும் காரிகையே நீ அழாதே!"

"எதற்குச் சிரிக்கிறீர்கள்?" சீறலோடு கேட்டாள்.

"பைத்தியம் சிரிக்காமல் வேறென்ன செய்யும்?" என்று கேட்டுவிட்டு மேலும் பலமாகச் சிரித்தான் நகுலன்.

"ம்... இன்னும் சத்தம் போட்டுச் சிரியுங்கள். யாராவது இந்தக் கோலத்தை வந்து எட்டிப் பார்க்கட்டும்."

"சரி வாயை மூடிக் கொள்கிறேன்" என்று சொன்னவன் அவளது இடையிலிருந்து தன் இடது கையைக் கீழே நகர்த்தி அவள் சேலையை நெகிழ்த்தினான். வலது கையும் சும்மா இருக்கவில்லை. முன்புறத்தில் அதன் அத்துமீறிய துணிச்சலான செய்கையைக் கண்டு அவள் கோபத்துடன் அக் கையைத் தட்டிவிட்டாள்.

அவள் கோபம் உண்மையானதல்ல என்றும், பெண்மைக்குரிய நாணத்தைப் பறைசாற்ற விரும்புகிறாளேயொழிய தடை தாண்டி நுழையும் அந்தக் கையை அவள் வரவேற்கவே செய்கிறாள் என்பதை உணர்ந்திருந்ததால் அந்தக் கை மீண்டும் மீண்டும் தன் சேட்டையைத் தொடர்ந்தது.

ஏதோ அவளது நெஞ்சுடன் சேர்த்து அவன் கை றப்பரினால் பிணைக்கப்பட்டது போல தள்ளிவிடத் தள்ளிவிட மீண்டும் மீண்டும் அங்கேயே வந்து மோதியது மாத்திரமல்ல, சுதந்திரமாக அங்கே விளையாடவும் முற்பட்டது.

அந்தக் கையை அவள் தட்டிவிடும் வேகமும் வரவரக் குறையலாயிற்று.

ஆனால், அவனாகவே கைகளை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் குனிந்து உதடுகளால் முத்தமிட்டான்.

பின்னர் அவளுக்கு விடுதலையளித்து, கைகளால் அவள் அழகிய தோள்களைப் பற்றித்

அம்புகளைப் போல என் உயிர் துளைத்த சாறைச் சிந்துகின்றன உன் விழிகள்..." அவள் அவன் தோளில் தன் முகத்தைப் புதைத்தாள்.

"என்னடி, விழித்தபடியே கனவுக்குப் போய்விட்டாயா?" என்று சத்தமிட்டபடி வந்த மதியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள் மாதுளா.

"ஏய், கிளிகள் எல்லாம் பயிர்களைக் கொய்கின்றன. காவலுக்கென்று வந்து நீ, கண்களைத் திறந்தபடி எந்த உலகத்திலடி இருக்கிறாய்? கிளிகளைத் துரத்த எழும்ப வேண்டுமென்ற நினைப்பில்லாமல், நேற்று அவர் செய்த சேட்டைகளின் நினைப்பில் மூழ்கியிருக்கிறாய் போலும்!"

"வாபடி, நானே நொந்து போயிருக்கிறேன். என்னை மேலும் ஏனடி துன்புறுத்துகிறாய்?"

"ஐயையோ, நான் ஒன்றும் சொல்லவில்லையம்மா... நீ அழுது கிழுது தொலைக்காதே. ஏற்கனவே வாடி உலர்ந்து பார்க்கிற வர்களுக்குச் சந்தேகமுண்டாக்கும் விதத்தில் பரிதாபமாக இருக்கிறாய். உன் அழகெல்லாம் கெடும்படியாக அழுவதையாவது செய்யாமல் இரு..."

மாதுளாவின் உதடுகள் பரிதாபகரமாகச் சிரிக்க முயன்று தோற்றன.

"சரி சரி மனசைப் போட்டு அலட்டிக் கொண்டு அயலவர் எல்லோருக்கும் உன் நோயைக் காட்டிக் கொடுத்துவிடாதே" என அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள் மதி.

எழாஅ ஆகலின்
எழில் நலம் தொலைய
அழாஅ தீமோ
நொதுமலர் தலையே!
ஏனல் காவலர்
மாவீழ்த்துப் பறித்த
பகழி அன்ன
சேயரி மழைக்கண்
நல்ல பெருந் தோளோயா!

**(நற்றிணை: 13:1-5)**

தகுவது

முழடில்யன்

# சிந்தியா பதில்கள்

✉ கவிதை எப்படி உருவாகிறது?

பே. ஷீஜன், மன்னூர்-02.

ஒரு ஜப்பானியக் கவிதை:
"என் அயல் வீட்டுக்காரன்
திருடிவிட்டான்
புல்லாங்குழலில் ஓலமிட
ஏன் தூண்டினாய் நிலவே?"
இப்படி ஒரு தன்னிலை மறந்த ஓலம்தான் கவிதையும்.

✉ **'காதல் வைரஸ்' எப்படி? கதிர் வென்றுவிட்டாரா?**

பி.விக்னேஸ்வரன், அட்டன்.

மனித இனத்தின் இதயமே இந்தக் கோமாளித்தனமான காதல் உணர்விற்காக மட்டுமே ஏங்கிக்கொண்டிருப்பது போலக் காட்டுகிற தமிழ்ச் சினிமாக்காரர்களின் அபத்தப் போட்டியில் இரண்டாமிடத்தைக் கதிருக்கு அளித்துவிடலாம். (முதலிடம் டி. ராஜேந்தருக்கு)

✉ **வீரனைச் சண்டையில் அறியலாம்; எதிரியை எதிர்க்கும் வேளையில் அறியலாம். கூடவே இருந்து குழி பறிப்பவர்களை எப்போது அறியலாம்?**

இ.சூரியகுமார், மான்காடு.

குழிக்குள் கிடக்கும்போது.

✉ **இலங்கையில் தமிழ் இலக்கியம், தொலைக்காட்சி நாடகம், சினிமா போன்றவற்றின் நலிவிற்குக் காரணம் தடையற்ற இறக்குமதிதானே? தமிழ் நாட்டிலிருந்து வந்து குவிவதைத் தடுத்து நிறுத்தினால் நம்மவர்கள் வளரலாமல்லவா?**

யா. ரொஷான், ஒந்தாச்சிமடம்.

1945-52 களிலேயே இங்கிலாந்தில் அமெரிக்கப் படங்களே அட்டகாசமாக ஓடி வசூலைக் குவித்தன. அதே சமயம் இங்கிலாந்துப் படங்கள் அமெரிக்காவில் மிகக் குறைந்தளவு ஆதரவைக் கூடப் பெறுவதில்லை. இங்கிலாந்துப் படங்களுக்கு இங்கிலாந்திலேகூட வரவேற்புக் கிடைக்காததையிட்டு பிரிட்டிஷ் பத்திரிகைகள், பிரமுகர்கள், அரசாங்கம் எல்லாம் சேர்ந்து கூக்குரலிட்டனர். அமெரிக்கப் பட இறக்குமதியைத் தடை செய்தனர். இங்கிலாந்துப் படங்களுக்கு வரிக் குறைப்பு, கடன், மானியம் எல்லாம் கொடுத்துதவினார்கள். எல்லாப் படமாளிகைகளுக்கும் இங்கிலாந்துப் படங்களை வருடத்தில் இவ்வளவு வாரங்கள் கட்டாயமாகக் காட்டித்தானாக வேண்டும் என்று சட்டம் போட்டார்கள். ஆனால் இவற்றாலெல்லாம் ஓடாத படங்களை ஓடவைக்க முடியவில்லை. பின்னாளில், சொந்தத் தகுதியையும் சிறப்பையுமே நம்பிய இங்கிலாந்துக் கலைஞர்கள் ஹொலிவூட்டிலும் சென்று வெற்றி பெற்றார்கள். இங்கிலாந்துப் படங்களுக்குரிய முத்திரையையும் பதித்தார்கள்.

✉ சிந்தியா, உங்கள் சந்தோசமான நேரம் எது?

க. தவப்பிரியன், தம்பிலுவில்-02.

நான் வாசகராயிருக்கும் போது.

✉ தமிழகக் கலைஞர்களை அழைத்து வந்து அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஏக தடபுடல் நம் நாட்டுக் கலைஞர்கள் விசயத்தில் கொஞ்சமும் காண்பிக்கப்படுவதில்லையே?

எஸ்.எம்.சுல்பிகார், மாத்தளை.

அதையும் விட, ஒவ்வொரு குழுவும் வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டு வந்து திரும்பிப் போகும் காலம் வரை, இவர்கள் ரீ.வியிலும் ரேடியோவிலும் ஒரே விளம்பரத்தை ஓராயிரம் முறை போட்டுக் கதறுவதால், நம் கண்களும் காதுகளும் துவண்டு போகும் கொடுமை... தாங்க முடியவில்லை சாமீ! 'அடுத்தது யாரோ' என்று மனம் 'திக் திக்' என்றபடி...

✉ **ஹக்கீமையே முஸ்லிம் தலைவராக முல்லைத்தீவுக்கு அழைத்துப் பேசிய புலிகள், இப்போது ஹக்கீமை மட்டும் முஸ்லிம் தலைவராக ஒத்துக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறார்களே?**

பாத்திமா பர்ஸானா, எந்தரமுல்ல.

ஆமாம், இனித் தமிழ்ப் பத்திரிகைகளைப் பார்த்துத் தெளிவடைய வேண்டியதுதானே உங்கள் பொறுப்பு!

✉ **நீங்கள் அடக்குபவரா? அடங்கி நடப்பவரா?**

ஐ.வதனா, நெளுக்குளம்.

மனம் முழுக்க அடக்குகிற ஆசையோடு அடங்கிப் போய்க்கொண்டிருப்பவர்.

✉ **அவுஸ்திரேலியாவுடனான வெற்றி எப்படி?**

பி.நிரோஷினி, கொழும்பு-15.

முப்பத்திநாலாவது ஓவர் வரை நாடி நாளங்களுக்குள் அடங்கிப் போக மறுத்துப் பொங்கிக் கொண்டே இருந்தது என் இரத்தம்!

✉ த்ரிஷா?

ந. கிஷ்ஜனா, ஆரையம்பதி-02.

ஆமாம்! மௌனமே பேசுகின்ற அதிசயம்! அநேகமான பெண்களின் புன்னகையில் ஒரு அழகான கவிதை மறைந்து கிடக்கும். இது ஒரு கவிதைப் புன்னகை அற்புதம்!



✉ காதலின் தோல்வி தற்கொலையில் முடியலாமா?

தே.சுமணன், கோப்பாய்.

வெற்றி பெறுவதும் ஏறத்தாழ அந்த முடிவை ஒத்ததுதான் என்று பலர் சொல்கிறார்கள்.


✉ **இன்றைய அரசியல் சூழலில் மக்கள் தாங்களாகவே கோபப்பட்டுக் கிளர்ந்தெழுந்து தங்களுக்கெதிரான அநியாயங்களைத் தட்டிக் கேட்பதற்கு உண்மையிலேயே வாய்ப்பிருக்கிறதா?**

எம். வானதி, கொழும்பு-13.

பராசக்தி பட வசனப் பாணியில் சொல்வதென்றால், 'மக்கள் எந்தக் காலத்திலடா தாங்களாகவே முன்வந்து போராடினார்கள்?' என்று கேட்க வேண்டியிருக்கும். அது ஒரு பக்கமிருக்கட்டும். இந்த வெகுஜனக் கோபம் என்பதற்கு ஓர் உதாரணம்.

எண்டமூரி வீரேந்திரநாத் என்ற தெலுங்கு எழுத்தாளரைத் தமிழ் வாசகர்களும் நன்கறிவர். இவருடைய நாவல்கள் தெலுங்கு மொழியில் மட்டும் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், அதாவது 1980 இல் நடந்த நிகழ்ச்சி இது. இவருடைய தொடர்கதைகளால் கவரப்பட்ட வாசகியரில் கல்லூரி மாணவி ஒருத்தி. இரசிகை என்பதற்கும் மேலாக இவரோடு கடிதப் போக்குவரத்து வைத்திருந்து, இவரைத் திருமணம் செய்துகொள்ள முடியாத ஏக்கத்தில் தற்கொலை செய்து கொண்டாள். இச் செய்தி மிகுந்த பரபரப்பாக அந் நாளைய பத்திரிகைகளில் வெளிவந்தது. எழுத்தாளருக்கு ஏற்கனவே கல்யாணமாகிக் குழந்தைகளும் இருந்தது. இந்த மாணவியின் மரணம் தெலுங்கு தேச மக்களைப் பெரிதும் ஆத்திரமுற வைத்து ஹர்த்தால்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், கூட்டங்கள் நடந்தன. வீரேந்திரநாத்தை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டுமென்று மாநிலமெங்கும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. கையில் கிடைத்தால் கொன்று போடவும் அந்தக் 'கும்பல் உணர்ச்சி' துடித்திருந்தது.

நாலைந்து ஆண்டுகள் கழிந்தபின் அந்த எண்டமூரி வீரேந்திரநாத் ஆந்திராவிலேயே மிகப் பிரபலமான எழுத்தாளர். இன்றும் அதிக வாசகர்கள் அவரைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.




## ஒன்றிரண்டல்ல!

ஒரு 'ஸ்ரோ'வை வைத்துக்கொண்டிருக்கும் உதடுகள் ஏராளம் கண்டிருப்பீர்கள். 269 ஸ்ட்ரோக்களை ஒன்றாக வைத்த வாயைக் கண்டிருக்கிறீர்களா?

இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த 35 வயதான சுரேந்திரன் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிப்பதற்காக இப்படி ஒரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

## அச்சுறுத்தல்



நியூசிலாந்து நாட்டின் ஸ்டிவேட் தீவு கரையோரங்களில் இந்த நாட்களில் ஏராளமான திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளன. கடந்த ஒரு வார காலத்தில் இவ்வாறு கரையொதுங்கிய 159 திமிங்கிலங்களுள் 80 மீன்கள் இறந்துவிட்டன. மீதமுள்ளவற்றையும் இன்னும் தொடர்ச்சியாகக் கரைக்கு வந்துகொண்டிருக்கும் மீன்களையும் பாதுகாக்க அந் நாட்டுக் கரையோர அதிகாரிகள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர். திடீரென இவ்வாறு திமிங்கிலங்கள் கரையொதுங்குவதற்கான காரணம் அறியப்படவில்லை. கடல் நீரில் ஏதேனும் இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.



## பாதணியா....?

பாதரட்சைகளை வாகனங்களாகப் பயன்படுத்திப் பயணம் செய்யும் சம்பவங்கள் குறித்து இதிகாசக் கதைகளில் மட்டுமே கேட்டுப் பழக்கப்பட்டுவிட்ட நமக்கு, அத்தகைய காட்சிகளை நேரில் காணும் பாக்கியம் கிட்டியிருக்கிறது.

டேவிட்குரோ என்ற கலைஞர் வடிவமைத்துள்ள இந்த மாபெரும் பாதணி மொத்தத்தில் ஒரு முச்சக்கர வண்டி. உள்ளே அமர்ந்து பயணம் செய்ய முடியும்.

## கலைத்துவமான எதிர்ப்பு

தங்களது எதிர்ப்புக்களைக் காட்டும் முயற்சிகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதுண்டு. வித்தியாசமான முறைகளில், மக்களின் கவனத்தை ஈர்க்கும் விதங்களில் எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவது கூட ஒரு தனிக் கலைதான். இங்கே படத்தில் காணப்படுவது ஒரு கலைஞரின் எதிர்ப்புணர்வு சிலை வடிவம் பெற்றிருப்பதுதான்.

ஒஸ்ட்ரியாவிலும், செக்கோஸ்லாவாக்கியாவிலும் இனவாதத்திற்கு எதிராகத் தனது கவலையை வெளிப்படுத்தும் முகமாக ஜெரொன்ஸ்லாவி லிபன்ஸ்கி என்ற சிறபக் கலைஞர் முன்னாள் செக் தேசியவாத ஜனாதிபதியான எட்வர்ட் பென்ஸ்சின் தலைப் பகுதியை அந் நாட்டின் எல்லையில் சிலையாகச் செதுக்கியிருக்கிறார்.

இவ்வாறு 200 தலைகள் செதுக்கப்பட்டுள்ளன.

யூகோஸ்லாவிய மற்றும் அதனோடிணைந்த பிராந்தியத்தில் கடந்த காலங்களில் தலைதூக்கிய மோசமான இனவாத உணர்வுகள் காரணமாக அப் பிராந்தியம் போர்க்களமாக மாறியதுடன் இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்ட பல கலைஞர்கள் வட ஐரோப்பாவுக்கு வெளியில் சென்று குடியேறினர் என்பது குறிப்பிடத் தக்கது.





## வெள்ளோட்டம்

ஆற்றுக்குள் விழுந்து விட்ட கார் என்று நினைத்து விடாதீர்கள். இது வேண்டுமென்றே ஆற்றில் இறக்கி விடப்பட்டதுதான். தண்ணீரில் பயணம் செய்யக்கூடிய இந்தக் காரை இத்தாலியின் வெனிஸ் நகரில் காணலாம்.

லிவியோ டி மாசி என்ற கலைஞர் வடிவமைத்த இந்த ஃபெராரி காரின் எஞ்சின் மற்றும் சில பாகங்கள் தவிர்ந்த அத்தனை பகுதிகளும் மரப்பலகையினால் ஆனது.

தனது வாகனத்தை வெள்ளோட்டம் விடத் தயாராகிறார் அதன் உற்பத்தியாளர்.



விக்ரம்-ரீமாசென்
படம்: தாஜ

## நான்கு ஹீரோக்களுடன் 'பந்தா பரம...

பிரபு-ரம்பா, அப்பாஸ்-மோனிகா, கலாபவன் மணி-... மூன்று ஜோடிகளுடன் இன்னொரு கதாநாயகனாக ... படம் 'பந்தா பரமசிவம்'. இதை டி.பி.கஜேந்திரன் இயக்... படத்தில் நான்கு கதாநாயகர்கள் இணைந்து நடிக்கும்படி ... கதை எழுதப்பட்டுள்ளது. மேலும் எஸ்.ஏ. சந்திரசேகரன் ... குமார், பி.வாசு, மணிவண்ணன், டி.பி. கஜேந்திரன் ஆகிய ... நர்கள் இந்தப் படத்தில் இணைந்து நடிக்கின்றனர். ஒரு ... காட்சியில் நடனமாடும்படி சிம்ரனிடம் கால்ஷீட் கேட்டுள்ள... பாளர்!

## நந்திதாவின் பந்த...

ஜெனிபராக இருந்து நந்திதாவாக மாறிய கதாநாயகி... எல்லை மீறிப் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்கி... ராஜா இயக்கும் 'ஈர நிலம்', 'கும்மாளம்', மிதுன் தேஜ... முதல்' ஆகிய படங்களில் கதாநாயகியாக நடிக்கும் ... படம் ஓடாத காரணத்தால் வருத்தத்துடன் காணப்படு... அதிகமாகச் சம்பளம் கேட்பது உட்பட பல புகார்களு... இருக்கிறார். காயத்ரி ரகுராமுக்குப் பிறகு அதிகமாக ... நடிகை நந்திதா என்று பார்த்தவர்கள் கூறுகின்றனர். ... நிலையில் ஏன் இப்படி நடக்கிறாரோ...?

## அமீஷாவைத் திட்டித் தீர்க்கும் ...

'என்ன விலை அழகே..' படத்தில் பிரஷாந் ஜோடி... வந்த இந்தி நடிகை அமீஷா பட்டேல், 'கீதை' படத்தில் ... இணைந்து நடிக்கிறார். இந்தியில் அதிக சம்பளம் வாங்கி... நியாயமான சம்பளத்தை மட்டுமே எதிர்பார்ப்பதாகச் சொல்... நிறையத் தமிழ்ப் படங்களில் நடிக்க ஆர்வமாக இருக்கிறா... அவர் இங்கேயே தங்கி தனது மார்க்கெட்டைக் காலி ... வாரோ என்று பயந்து போன கிரண் அமீஷாவைப் பற்றி ...

## தீபுவின் விரக்தி!

வெகுளித்தனமான பெண்ணைப் போல தோற்றம் அளிக்கும் 'அன்பு' பட அறிமுக நாயகி தீபு, காதல் காட்சிகளில் மட்டும் என் என்று சொன்னால் என்னமாக இருக்கிறாராம்! புதுமுக நாயகன் பாலாவுடன் நெருக்கமாக நடித்து அசத்திய அவர், "இந்த மாதிரி சினிமாவுக்காகக் காதலிக்கிறது மட்டுமே எனக்குப் பிடிக்கும். நிஜ லைப்ல யாரோட காதல் வலையிலும் சிக்கமாட்டேன். ஏன்னா, கல்யாணம்னாலே எனக்கு வெறுப்பு!" என்று விரக்தி மனப்பான்மையுடன் பேசுகிறார். இப்படி அவர் காதலை வெறுக்கும் அளவுக்கு நிஜ வாழ்க்கையில் ஏதாவது பிளாஷ்பேக் இருக்குமோ?

## பிரபுதேவாவுடன் ஆத்திரத்தில் ஆமிஷா!

'அலாவுதீன்' மட்டுமே கைவசம் இருப்பதால், அதிரடி கவர்ச்சிக் காட்சியில் நடிக்கத் தொடங்கிவிட்டார் ஆஷிமா. இதன் மூலம் ஒட்டு மொத்தமாக அனைவரது கவனத்தையும் தன் பக்கமாக இழுக்கலாம் என்பது அவருடைய திட்டம். இதை எப்படியோ புரிந்து கொண்ட பிரபுதேவா, 'சார்லி சாப்ளின்' படப்பிடிப்பில் காயத்ரி ரகுராமுக்கு கடுமையான நடன அசைவு கொடுத்து ஹிம்சைப்படுத்தியதைப் போல, ஆஷிமாவுக்கும் மிகக் கடுமையான முறையில் நடன அசைவுகள் கொடுத்துக் கதிகலங்கச் செய்துவிட்டாராம்! இனிமேல் எந்தப் படத்திலும் பிரபுதேவாவுடன் இணைந்து நடிக்கமாட்டேன் என்று சொல்லி வருகிறார் ஆஷிமா. அதே சமயம் அதிக கவர்ச்சி காட்டி நடிப்பது கூட ஆபத்தில்தான் முடியும் என்று தெளிவு பெற்றுள்ளாராம்!

## சினேகாவின் கவலை

"ஷூட்டிங்கில் யாருடன் பேசினாலும் பிரச்சினை வந்து விடுகிறது என்பதால்தான், புத்தகம் படிப்பதில் கவனம் செலுத்துகிறேன். சிடியில் ஆங்கிலப் படம் பார்க்கிறேன். இப்படி நான் அமைதியாக இருப்பதைப் பார்த்துவிட்டு, இந்த பொண்ணுக்கு ரொம்ப கர்வம் என்று என் காதுபடப் பேசிவிட்டுச் செல்கின்றனர். நான் அப்படிப்பட்ட பெண் இல்லை" என்று சொல்லி வேதனைப்படும் சினேகா, இதுநாள் வரை தன்னுடைய கால்ஷீட் விவகாரங்களைக் கவனித்து வந்த நபரைத் தனது உதவியாளராக மாற்றி விட்டாராம்! இனிமேல் சினேகாவின் கால்ஷீட் வேண்டும் என்றால் அவருடைய அம்மாவையோ அல்லது அண்ணனையோதான் அணுக வேண்டும் என்று கூறுகிறார்.

## சிம்ரன் மறுப்பு

சேரன் தயாரித்து இயக்கி நடிக்கும் 'பொக்கிஷம்' படத்தில் சிம்ரன் நடிக்க மறுத்துள்ளார். காரணம், சம்பளப் பிரச்சினை! இப்போது 'பைவ் ஸ்டார்' கனிஹா நடிக்கப் பேச்சுவார்த்தை நடத்து வருகிறது.



படம்: ஸ்ரீ [illegible]



லைலா-ஜோதிகா-ரம்பா
படம்: த்ரீ ரோசஸ்

## கார் ரேஸ் ஏன்? அஜித் விளக்கம்

"சினிமாவுல வந்த காசுக்காக என்னைக்குமே நான் நடிச்சதில்லை. என்னுடைய வேலையை நான் ஒழுங்கா செஞ்சுட்டு இருந்தா காசு தானா வருது. நான் காசுக்காக ரேஸ் கார் ஓட்டல. என்னோட சந்தோசத்துக்காகவும் என்னோட பர்சனல் இன்ட்ரஸ்டுக்காகவும்தான் ஓட்டறேன். மத்தவங்க என்னைப் பார்க்கணும் என்பதற்காக ஓட்டல. மத்தவங்களைப் பொறுத்தவரை நான் ஒரு நடிகன். அவங்களுக்குப் பொழுதுபோக்கு நிறைந்த தரமான படங்களைக் கொடுக்க வேண்டியது, சந்தோசப்படுத்துவது மட்டுமே என் கடமை."

...சிவம்'

...ரி ஆகிய ... நடிக்கும் ...ர். ஒரே ...மையான ...ஸ். ரவி ... இயக்கு ... பாடல் ... தயாரிப்

---

...னா

...டகாசம் ... பாரதி ... 'இன்று ... 'முத்தம்' ...னிலும், ...ன்னாகி ... செய்யும் ... வரும்

---

...ரன்

... நடித்து ...ய்யுடன் ... தமிழில் ... அவர், ... எங்கே ...ய்துவிடு ...டு வந்த ...ளி பேசிக் ...டிருக்

# பாலசந்தர் படத்தில் விஜய்

இயக்குநர் கே.பாலசந்தரின் கவிதாலயா நிறுவனத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அதன் படங்களில் நடிக்காமல் இருந்த நடிகர் விஜய், தற்போது கவிதாலயா தயாரிக்கும் படத்தில் நடிக்கவுள்ளார்.

முன்பு ஒருமுறை கவிதாலயாவின் படம் ஒன்றை, தியேட்டரில் திருட்டு வீசிடி எடுத்தது தொடர்பான தகராறில் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகருக்கும், பாலசந்தருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கவிதாலயா தயாரிப்பில் நடிக்கவிருந்த விஜய்யின் படம் ஒன்று கைவிடப்பட்டது.

இந் நிலையில் விஜய்க்கும், கவிதாலயாவுக்கும் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு நீங்கியுள்ளது. கவிதாலயா தயாரிப்பில் ஒரு படத்தில் விஜய் நடிக்கவுள்ளார்.

தற்போது விஜய் நடித்து வந்த 'வசீகரா' படம் முடிவடைந்துவிட்டது. 'கீதை' என்ற படம் தொடங்கியுள்ளது. 'வசீகரா' பொங்கலுக்கும், 'கீதை' தமிழ்ப் புத்தாண்டுக்கும் ரிலீஸ் ஆகின்றன.

'கீதை' படத்தை முடித்துக் கொடுத்த பிறகுதான் கவிதாலயா படத்தில் விஜய் நடிக்கவுள்ளார். படத்தின் டைட்டில் இன்னும் முடிவாகவில்லை. இயக்குநரும் முடிவாகவில்லை.

இந் நிலையில் 'கீதை' பட டைட்டிலுக்கு இந்து அமைப்புகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது குறிப்பிடத் தக்கது. எதிர்ப்பு வலுத்தால் தலைப்பு மாறலாம்.





சிம்ரன்

## மினி சினி

★ 'திருடா திருடி' என்ற படத்தில் நடிக்கிறார் 'துள்ளுவதோ இளமை' நாயகன் தனுஷ். அவருக்கு ஜோடியாக நடிப்பது சாயாசிங். எஸ்.கே.கிருஷ்ணகாந்த் இப் படத்தைத் தயாரிக்கிறார்.

★ சுயசரிதை எழுதுகிறாராம் நடிகர் நாகேஷ். தனது வாழ்வின் முக்கிய சம்பவங்கள், தனது அனுபவங்களை இதில் குறிப்பிட்டுள்ளாராம்.

★ 'ஒரு தடவை சொன்னா' படத்தை அடுத்து 'சந்தோஷி' என்ற படத்திலும் ஹீரோவாக நடிக்கிறாராம் சின்னி ஜெயந்த்.

★ 'நிலைக் கண்ணாடி' திரைப்படம் பொங்கல் ரிலீசாக மலர்கிறது.

★ 'லேசா லேசா' திரைப்படம் இம் மாதம் 26ம் திகதி திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'பந்தா பரமசிவம்' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆட இருக்கிறாராம் சிம்ரன். தெலுங்கில் இரண்டு படங்களைத் தயாரிக்க இருக்கிறாராம் ஆஸ்கார் பிலிம்ஸ் ரவி.

★ 'காலாட்படை' படம் முப்பத்து நான்கு நாட்களில் எடுத்து முடிக்கப்பட்டுள்ளதாம். பாடல் காட்சிகளை வித் அவுட் லைட்டில் எடுத்துள்ளார்கள்.

★ சத்யராஜ் நடிக்கும் 'ராமச்சந்திரா' படத்தில் வில்லனாக நடிக்க ஆட்களைத் தேடி அலுத்துப்போனாராம் டைரக்டர் ராஜ்கபூர் (மொட்டை போட்டுக் கொண்டு நடிக்க வேண்டியிருந்ததால் யாரும் ஒப்புக்கொள்ளவில்லையாம்). கடைசியில் தானே அந்த வேடத்தை ஏற்றுக்கொண்டாராம் டைரக்டர்.

★ ஷாஜி கைலாஷ் இயக்கும் 'ஜனா' படத்தில் ஆக்ஷன் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி வற்புறுத்தி வருகிறார் அஜித். பேமிலி டைப் கேரக்டர்களில் நடிக்க இன்னும் தனக்கு வயதாகவில்லை என்பதுதான் அவருடைய வாதம்.

★ சத்யராஜ் மகன் சிபிராஜ் நடித்த 'ஸ்டூடண்ட் நம்பர் 1' படத்தில் ரஷ்யாவில் எடுத்த காட்சியைப் பார்த்து வியந்த இயக்குநர் செல்வா, அடுத்து தான் இயக்கும் படத்தில் சிபிராஜையே கதாநாயகனாக்கி விட்டார். இதில் ஓவராகக் கவர்ச்சி காட்டி ஆடியுள்ள செரின், 'விசில்' படத்தில் தனது கேரக்டரை டம்மியாக்கிவிட்ட இயக்குநர்கள் ஜேடி-ஜெர்ரி ஆகியோரைத் திட்டிக் கொண்டிருக்கிறார்! அவர்களோ இதுபற்றி நோ கமெண்ட்ஸ்.

★ சினேகாவைப் பற்றி அடிக்கடி வதந்தி கிளப்பி விடுவது அவருக்கு நெருக்கமான ஒரு சிலர்தான் என்று ஒரு முன்னணி கதாநாயகன் கூறுகிறார். "நான் கேள்விப்பட்ட வரையில் பப்ளிசிட்டின்னா சினேகாவுக்கு ரொம்ப பிடிக்குமாம்! அதனால, தன்னைப்பத்தி அந்தப் பொண்ணே வதந்தி பரப்பிவிடுதுன்னு சந்தேகமா இருக்கு. எதுக்கும் சினேகாகிட்டயே விசாரிச்சு இந்த மேட்டரை எழுதுங்க" என்று நைஸாக நழுவிக் கொண்டாராம் ஒரு ஹீரோ.

## ...ரிஷாவின் ஏமாற்றம்

...மௌனம் பேசியதே...' படத்தில் தன்னுடைய நடிப்...மையை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைக்க... என்று வெளிப்படையாகச் சொல்லி வருகி...ஷா. இதனால், திரையுலகில் அவரைப் பற்றி... எதிர்பார்ப்பு எல்லாம் தவிடுபொடியாகிவிட்டது. ...தாக, அஜித் நடிக்கும் 'ஜனா' படத்தில் இருந்து... எறியப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக... அந்த வாய்ப்பைத் தேடிச் சென்று அபகரித்...!

## ...ரனின் புத்தாண்டு ஆசை

...ஞ்ச நாளாகவே என்னைப் பற்றி வதந்திகள் ...ணம் உள்ளது. என்னைப் பொறுத்தவரை நான் ...த மனசுக்காரி. எனது மனசில் தோன்றுவதை ...றவு இல்லாமல் சொல்லிவிடும் தைரியம் உள்ளவள். ...ைகயில் இந்தப் புத்தாண்டு பிறக்கட்டும். எனது ...ின் மிக முக்கிய செய்தியை இந்த ஆண்டில் ... வேண்டும். இதுவே எனது புத்தாண்டு ஆசை" ... கூறியிருக்கிறார் சிம்ரன்.

## ...ஜித்தின் அதிரடி முடிவு

... வருடத்திற்கு இரண்டு படங்களில் மட்டுமே ... என அஜித் முடிவு செய்துள்ளார். மூன்று மாதம் ... மீதமுள்ள மாதங்களில் படப்பிடிப்புகள் எனத் ...ச் செயலாற்றி வருகிறார். தற்போது 'ஜனா' ...'ஸைலன்ஸ் ஸ்டார்' படங்களில் அஜித் நடித்துக் ...ருக்கிறார். 'ஜனா'வை இயக்குவது மலையாள ... ஷாஜி கைலாஷ். மே மாதம் 1ந் திகதி படத்தை ... வகையில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. ...அஜித்தின் பிறந்த நாளும் கூட...



பிரபு-சங்கவி
படம்: ஆசை வைச்சேன் உன்மேல

## ...ரையரங்கில் 'முத்தம்' கேட்கும் இரசிகர்கள்

...சென்னையில் அபிராமி என்றொரு திரையரங்கு இருக்கிறது. தமிழகத்தில் எங்குமில்லாத ஒரு ... இத் தியேட்டருக்கு உண்டு. இங்கு பணிபுரிபவர்களில் டிக்கெட் விற்பனையாளர் முதற் ... அனைவரும் பெண்கள். சரி விசயத்திற்கு வருவோம்.

...ஏ. சந்திரசேகர் இயக்கிய 'முத்தமிடலாமா' படத் தலைப்பு உணர்ச்சியைத் தூண்டும் வகை...யதால் படத்தின் தலைப்புக்குத் தடை விதித்தது தணிக்கைக் குழு. இதையடுத்துப் படத்தின் ...ப 'முத்தம்' என்று மாற்றினார் சந்திரசேகர். இப்போது இதற்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. ...தம்' படத்திற்காக அபிராமி தியேட்டரில் டிக்கெட் வாங்கச் செல்பவர்களில் சில குறும்புக்... "முத்தம் படத்திற்கு 3 டிக்கெட்" என்று கேட்பதற்குப் பதிலாக "2 முத்தம் கொடுங்க," "3 ... கொடுங்க" என்று கேட்கிறார்களாம். இதனால் வெட்கத்தில் முகம் சிவந்து போகிறது டிக்...விற்பனையாளர்களுக்கு. இதே போன்று தமிழகத்தின் மற்றத் தியேட்டர்களிலும் ஆண் டிக்கெட் ...யாளர்களிடம் கல்லூரி மாணவிகள் குறும்பு செய்வதாகத் தகவல்கள் வந்த வண்ணம் ...

## ...ம்ரன்–கமல் சிங்கப்பூர் சுற்றுலா

...டன் தன்னை இணைத்துப் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் குறித்து உள்ளூர ...டன்தான் காணப்படுகிறார் சிம்ரன்! சும்மா வெளியே மட்டும், "என் பெர்ஸனல் லைப்ல ...க்கு நுழைக்காதீங்க" என்று பொய்க் கோபம் காட்டுகிறார்! சென்ற வாரம் கூட தன் மனம் ... அவருடன் சிங்கப்பூருக்கு ஜாலியாகப் பயணம் மேற்கொண்டிருந்தார் சிம்ரன்!

---

முகப்பில் / ஜீவா – ஷர்மிலி
படம் ஆசை ஆசையாய்



பிரசாந்த்-ஸ்நேகா
படம்: விரும்புகிறேன்

## தைத்திருநாளில் மகிழ்ந்திடுவோம் வாரீர்!

தைத்திருநாளின் புத்தொளியில்
புதுமைகள் பல படைப்போம்
வாரீர்

புன்னகை முகத்தோடு நாம்
வையகத்தில் வலம் வருவோம்
வாரீர்

நற்சொல் பேசி நாம்
இன்பமாய் வாழ்வோம்
வாரீர்

துன்பங்கள் நேரிட்டாலும்
மகிழ்வாய் ஏற்போம்
வாரீர்!!

பழமையை மறந்து
நாம் பகுத்தறிவை
வளர்ப்போம் வாரீர்

பொங்கலின் பெருமைதனை
பார் எங்கும் பரப்புவோம்
வாரீர்
நாடு நலம் பெறவே
நற்சிந்தனை பெறுவோம்
வாரீர்
வீடு வளம்பெறவே
வியர்வை சிந்திடுவோம்
வாரீர்

கமத்தொழில் செய்து
செல்வத்தை பெருக்கிடுவோம்
வாரீர்.

வருகின்ற பொங்கலில்
வளங்காண வாரீர் வாரீர்

ஏ.பிரசாந்தன்,
வெள்ளவத்தை.

---

இளைஞனே!
வறுமைகண்டு ஏன்
அஞ்சுகின்றாய்...?
இறைவன் தந்த அருளால்
அறிவு உன்னிடம் நிறைந்தே..
கிடக்கின்றதே...!
குளம் வற்றும் என்று
கொக்கு கூட தவம் நிற்க
நீ சவம் ஆக ஏன்
துணிவு கொண்டாய்...?
சான்றோர் வாழ்வை நீ
நோக்கவில்லையா?
அவர்களும் வறுமையை
ஆண்டோர்தானே...!
பாதையிலே பள்ளம் கண்டு
பயணத்தை முடித்துவிடலாமா..?
இன்னும் எத்தனை பாதைகள்...
எட்டுத்திக்கும் திரும்பிப்பார்...!
உன்போல...
புயல் கண்டு மரம் அஞ்சிவிட்டால்..
உலகில் இப்போது தாவரங்கள் ஏது?
தினந்தினம் பறிக்கிறார்களே என்று
மலர்கள் அஞ்சிவிட்டால்...
இப்போது வண்ண வண்ண மலர்கள் ஏது?
அழிந்திடும் மரணம் கண்டு, மனிதன்
அஞ்சிவிட்டால்..
இப்போது இங்கு நாம் ஏது..?
நண்பனே!
நீ ஏழை மட்டும்தான்
கோழையல்ல..
இன்னுமா
உன் குடிசைக் கூரையினுள்ளால் வரும்
சூரிய ஒளி உன்னைச் சுடவில்லை?
உன்னிடம் அறிவுண்டு..!
புறப்படு...!
புத்தம் புதிதாய் புலரட்டும் உன்
புதுப் பொழுது..

செம்மண் ஓடை, ஏ.ஜி.எம். நிவாஸ்.

---

## தேன்கிண்ணம்

### மறக்க முடியவில்லை

நீரினுள் அமிழ்த்தி
மேலெழும் பலூனைப்போல்
நித்தமும் மேலெழும்
புதிய நின் நினைவுகள்

பசுந்தரையில் நாமிருவரும்
பட்டாம் பூச்சிகளாய்
திரிந்ததை எண்ணி எண்ணி
படுக்கையில் புரளுகின்றேன்.

பாதி டொபியை கடித்து
மீதி கொடுத்த உன்ஞாபகம்
மனதிற்குள் மத்தாப்பாய்
சுழலுகிறது.

எழுதி எழுதி என்பேனாவுக்கு
இப்போ இடுப்புவலி
எத்தனை கடிதம் உனக்கு
என்னிடமிருந்து...

உன்னையே கல்யாணம் செய்வேன்
என்ற உன் உறுதிவார்த்தை...
எத்தனை நாள் என்னை
ஏங்கவிட்டது.

இப்படியெல்லாம் இருந்துவிட்டு
இதயத்தை
மட்டும் எப்படி திசைமாற்றிக்
கொண்டாய்
இருந்தும் கல்லறைக்குப் போகும்
காலம்வரை மறந்திடாது உன்னை
என் இதயம் மட்டும்...

இராமச்சந்திரன், தவேந்திரன்,
ஹாலி-எல.

---

### புதிரான மாற்றம்

காரிருள் தன்னில்
கடுகுபோல் விண்மீன்கள்
என் விழிக்கதிரில்
வீழ்ந்து புரண்டதுவே!

மேனி சிலிர்த்திட
மெல்ல உரசிடும்
தென்றல் என்னை
சீண்டிச் சிரித்ததுவே!

வைகறை வந்து
வாசலில் நின்று
நாணத்தால் என்னுடல்
நனைத்ததுவே!

என் பார்வையின்
பயணத்தை என்னால்
நம்ப முடியவில்லை!

உள்ளத்தை தாண்டிய
உணர்வுகளின் வேகத்தை
அறிந்து கொள்ள முடியவில்லை!

இதுவரை இல்லாத
புதிரான மாற்றங்களை
புரிந்து கொள்ள முடியவில்லை!

ஒருவேளை இது
பருவ நாடகத்தின்
ஒத்திகை வேளையோ
தெரியவில்லை.

முரசுப் பிரியன், மு.கீர்த்தியன்,
இறம்பொடை.

---

## இசையில் கரைந்த உணர்வுகள்

உள்ளத் தரையில்
உதித்த இசை மலரே
உள்ளம் உள்ளவரை
உறவாட இசை
வண்ணங்களால்-உனை
அழைக்கிறேன்.

இசையினை சுவைக்காத
இதயம் இல்லை
இசையினை சுவைக்காதவர்
எவரும் இல்லை
படர்ந்திருக்கும் இசையில்
தொடர்ந்திடும் இன்பம்
ஊட்டி வளர்க்கும்
ஊராரின் நாகரிகம்
இது கேட்டுக் கிடைக்கும்
வேறெந்த இசையில்
புன்னகை பூத்த வதனங்களை
பூத்துக் குலுங்கும் வண்ணங்களால்

பேசத் துடித்தால் வாய் மறுக்கும்
எழுத நினைத்தால் விரல் நடுங்கும்
ஆனால் பாட நினைத்தால்
பாசம் விளங்கும்
எண்ணை இல்லா விளக்கில்
ஏங்கி வாழும் வெளிச்சம்
என் எண்ணமெல்லாம்
வெளிச்சமாகி-ஏழையை
உற்சாகப்படுத்தும் கனவு

காதல் தெருவில் ஒரு பயணம்
கருத்தொருமித்தவளின்
மண்ணில் மலரும் சீவியங்கள்
கண்ணில் புலரும் ஓவியங்கள்
ஆசை விழிகளின்
நயனங்களிலே-இசை
ஓசை மொழிகளின் நயனங்கள்

ஆரம் அணிந்திட
ஆரத் தழுவிட
ஆசையின் ஆரம்பம்
காதல் மழையில்
நனைந்த உடல்கள்
எடுத்தியம்பி வாழும்
எண்ணத்தின் இசைவடிவம்

கடந்துவிட்ட காலங்களை
மீட்டெடுத்துப் பாடுவது
இதயம் கலையாத
கோலங்களின் இசைவடிவம்
இழந்த உயிர்களுக்கு
இசை ஓர் ஆறுதலின்
இருப்பிடம்.

அப்துல் ரகுமான் முகமட் ஜிப்ரி,
கல்முனை.

---

## பேனா நண்பர்கள்



பெயர்: **Mohd Zameer**
வயது: --
முகவரி:
**GETTCO TRADING,**
**P.O. BOX-919,**
**STATE OF QATAR.**
பொழுது போக்கு:
ரி.வி. தினமுரசு.



பெயர்:
வி. கோகிலவாணி
வயது: 17
முகவரி: இல. 03,
கொலம்புகமம்,
நிவித்திகல.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: S.J.MANIVANNAN.
வயது: 23
முகவரி: SUNGMIN E.N.G.
KYUNGGI-DO, HWASEONG,
TAEAN-EUP, NEUNG 4-RI,
534-4, SOUTH KOREA.
பொழுது போக்கு:
INTERNET

---

## இலவு காத்த கிளி

இளவேனில் வரும் போது
இயற்கை மகிழ்ந்து கொள்ளுமே.
அதுபோல்தான்
நீ என்னெதிரில் வந்தநேரம்
மனம் வசந்தத்தில் மூழ்கியது.

உறக்கம் கலைந்த இரவுகளை
உனக்காகத் தொலைத்தேன்
உன் கனவுகளுக்குக் கூட
வர்ணம் பூசிப் பார்த்தேன்!
உன் நினைவுகளை மட்டுமே
வரிசையாகக் கோர்த்தேன்
உன்னைப்பற்றி எழுதி எழுதியே
விரல்களைத் தேய்த்தேன்.

உன் வருகை என்னுள்
வசந்தத்தைப் புகுத்தினாலும்
பின்
இடிகளையும் நிகழ்த்திற்று

இதயப் பரப்பில்-நான்
எழுதியவையெல்லாம்
உன் மௌன அலைகளால்
அழிந்துபோயின.

சந்தோசங்களை
சேகரிக்க சாத்திய ஏணி
துன்பக்கிடங்கின்
விட்டமாகின

வாழ்க்கையில்
பிடிமானங்கள்
தூரப் போனதால்
முயற்சிகள் தற்கொலை
செய்து கொண்டன!

பனித்துளிக்காய் ஏங்கும்
மலர் இதழ்போல்
தவிக்கிறது மனசு! ஆமாம்

பசுமரம்போலிருந்த
என் இளமை
உன் பார்வைத் தென்றல்
படாததால்
பட்டுப்போனது பெண்ணே!

அபுஸர்பான்,
ஒலுவில்-02.

---

## நினைத்து, நினைத்து சிரிக்க

வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு கணவனும் அவனது மனைவியும் விவாகரத்துக்காக விண்ணப்பித்திருந்தார்கள்.

விவாகரத்து தீர்ப்புடன் கணவனிடம் வந்த வக்கீல், "உங்களுக்கு ஒரு நல்ல சேதியும், கெட்ட சேதியும் காத்திருக்கிறது" என்றார்.

"நல்ல சேதி என்ன"

"உங்கள் மனைவி எந்த ஜீவனாம்சமும் வேண்டாம் என்று கோர்ட்டில் தெரிவித்துவிட்டாள்" என்றார் வக்கீல்.

"கெட்ட சேதி?" கேட்டான் கணவன்.

"விவாகரத்துக்குப் பிறகு அவள் உங்கள் தந்தையாரைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறாள்" என்றார்.

---

ஒரு டாக்டரும், ஆலோசனை அதிகாரியும் சந்தித்துக் கொண்டபோது, ஆலோசனை அதிகாரி சொன்னார். "எனது வேலை ரொம்ப ஜாலியானது. என்னிடம் வருபவர்கள் தங்கள் குறைகளைச் சொல்லிவிட்டு ஆலோசனைக்காகப் பணமும் தந்துவிட்டுப் போகிறார்கள்."

டாக்டர் சொன்னார், "இது என்ன பிரமாதம்! என்னிடம் வருபவர்கள் தங்கள் குறைகளைச் சொல்வதோடு ஆடைகளையெல்லாம் கழற்றி வைத்துவிட்டல்லவா பணம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள்."

---

கசாப்புக் கடைக்கு வந்த நாயின் வாயில் ஒரு பர்ஸ் இருந்தது.

கடைக்காரர் நாயிடம், "என்ன வேண்டும்?" என்றார்.

"லொள்.. லொள்.." எனச் சத்தமிட்டே, தேவையான இறைச்சியைக் கேட்டது. புரிந்துகொண்ட கடைக்காரர், "அரைக் கிலோவா, ஒரு கிலோவா?" என்றார்.

அதற்கும் நாய் குரைத்தது.

வியந்துபோன கடைக்காரர் இறைச்சியைக் கொடுத்துவிட்டு பர்சை வாங்கிப் பார்த்தார். சரியான பணம் இருந்தது.

யார் வளர்க்கும் நாய் இது! என்பதை அறிந்து கொள்வதற்காக நாயைப் பின்தொடர்ந்தார். ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாவது மாடிக்குச் சென்ற நாய், ஒரு வீட்டின் முன் நின்று கதவைப் பிராண்டியது. எரிச்சலுடன் கதவைத் திறந்த வீட்டுக்காரர், நாயைத் திட்டிக் கொண்டே கம்பால் அடித்தார்.

கடைக்காரர் குறுக்கிட்டு, "புத்திசாலித்தனமாக நடக்கும் இந்த நாயைப்போய் அடிக்கிறீர்களே" என்றார்.

"என்னது? புத்திசாலியா? சாவியை எடுத்துக் கொண்டு போ என்றால், இதோடு மூன்று முறை அதை மறந்துவிட்டுப் போயிருக்கிறது" என்றார் வீட்டுக்காரர்.

---

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

"மனித சமூகத்தின் மொத்தப் போராட்டத்தையும், ஒரு வார்த்தைக்கும் மற்றொரு வார்த்தைக்கும் நடந்த சண்டையெனச் சுருக்கிக் கூறலாம்"

-அல்துஸ்ஸர்.

வார்த்தைகள் குறித்துப் பேசும் சில கவிதைகள் இவ் வாரச் சிறப்புக் கவிதைகளாக

### ஒரு சொல்

காதல் கடிதம் எழுதுவது
மிகவும் சுலபமானது
பதற்றம்-வியர்வை
வார்த்தைத் தேர்வுகளுக்கான
கால விரயம்
நிறைவற்ற சோர்வு
ஒன்றும் தேவையில்லை
கிடைத்தற்கரிய வார்த்தைகளால்
மிகச் சிறந்த காதல் கடிதம்
நீ காகிதம் தேடிய
அருமையான சூழலில்
எழுதப்பட்டுவிட்டது.
நீ அந்தக் கடிதத்திலிருந்து
ஒரு வரியை
அல்லது ஒரு வார்த்தையை
அவளுக்குச் சொல்
எழுதப்பட்ட கடிதம் உன்
நினைவுக்கு வரவேண்டிய
அவசியமில்லை
நீ எதைச் சொன்னாலும் அது
கடிதத்தில் எழுதப்பட்டதாகவே
இருக்கும்
நீ சரியாகச் செய்ய வேண்டியது
இது மட்டும்தான்
சொல்
மொழிகளையெல்லாம் உருக்கி
வார்த்த
ஒன்றே ஒன்று
என்றான பிரயோகமாக
பிறகு அந்தக் கடிதத்தின்
மற்ற விவரங்களை
அவள் உனக்குச் சொல்லத்
தொடங்குவாள்.

யூமா, வாஸுகி.

### படிக்கத் தேவையில்லாத கடிதம்

நேற்றும்
நித்தியாவிடமிருந்து வந்திருந்த
கடிதத்தில்
(என் கடிதத்துக்குப் பதில்)
பத்தி பத்தியாக வார்த்தைகள்.

என் மனதிலிருப்பதும்
வார்த்தைகளாகவே.

"துளியூண்டு கார்டில்
நாலே நாலுவரிக் கிறுக்கல்
எப்படிப் போதும்?"-நித்யா.

பிரித்ததும் எழுதியவன்
யாரென்று
கையெழுத்தைத் தேடச் சொன்னவன்
மேலும் சொன்னான்:

"அது உனக்குச் சொல்லும்
நான் உனக்குச் சொல்ல
நினைத்ததை.
பின்
எழுதியிருக்கும் விசயங்கள்
உனக்கும் எனக்கும்
அனாவசியம்."
என் பதில்:
வார்த்தைகளற்ற ஒரு நிலை
'சூழல் கரைந்த மௌனம்'
ஒரு தூர லட்சியம்.

வார்த்தைகளைக் கடந்து செல்ல
வேண்டிய நியதியிலிருந்து
படுத்துகிறதே
என்று இப்படி.

-பா.வெங்கடேசன்.

### வார்த்தைகள் பற்றி

கேட்டது நிஜம்- ஆனால்
சொல்லப்பட்டது பொய்
பொய்யை நிஜமாக நம்பி-ஒருநாள்
நம்பியது பொய் எனத்
தெரிந்தபோது
நிஜமாக நம்பியது பொய்த்துப்
போனது மட்டுமல்லாமல் பொய்
நிஜமெல்லாமே பொய்யாகவன்றி
வேறெதுவாயும் தெரிவதில்லை.
நிஜம் சுடும் என்கிறார்கள்
இருக்கலாம். ஆனால் பொய்
நம்பியவனைப் பொசுக்கியே
விடுகிறது.
அப்போது இதைக் கூறலாம்:
சாம்பலுக்கு நிஜமென்ன
பொய்யென்ன.

-அசோகமித்திரன்.

### வார்த்தைகள்

நாம் சில வார்த்தைகளை
பரிமாறிக் கொண்டோம்.
நமக்கான உலகம் விரிந்தது
பொருட்களைப் பற்றிய
வார்த்தைகளைப் போல்
சமயங்களில் அதன் உபயோகமும்
சில வார்த்தைகள், கடிதங்கள்,
பூமியைவிட்டு வெளியேறும்
கனித்தல்,
எனது கைகளை நீ பற்ற
முடியாமல் போனது
சுவர்களைக் கடப்பது போல்
சற்று விலகி
மறுபடியும் நாம் வார்த்தைகளை
பரிமாறினோம்.
பூமியைப் பற்றி வெளியேறி
விரியும் மரங்களை நழுவவிட்டு.

-அப்பாஸ்.

## சமையலறையே ப்யூட்டி பார்லர்

தினம் ஒரு அழகு சாதனம் அறிமுகமாகிறது. எதை உபயோகித்தால் அழகு கூடும் என்று குழப்பமா? கண்ட கண்ட அழகு சாதனங்களை வாங்கி உங்கள் அழகையும், பர்ஸையும் காலி பண்ணாதீர்கள். உங்கள் வீட்டுச் சமையலறையே மிகச் சிறந்த பியூட்டி பார்லர் தெரியுமா? அங்கே உள்ள பொருட்களைக் கொண்டே உங்கள் அழகை நீங்கள் கூட்டிக் கொள்ளலாம். சில டிப்ஸ்....

★ தேன் மாதிரி மிகச் சிறந்த அழகு சாதனம் வேறில்லை. சிறிதளவு தேனுடன் சிறிது பார்லியும், முட்டையின் வெள்ளைக் கருவும் சேர்த்து பேஸ்ட் போலச் செய்து முகத்தில் தடவி சில மணி நேரம் ஊற விட்டு, வெதுவெதுப்பான தண்ணீரால் கழுவிட, முகம் பளபளப்பாகும்.

★ முதல் நாள் இரவே பாலில் பாதாம் பருப்பை ஊற வைத்து விடவும். மறுநாள் அதை அரைத்து அத்துடன் சிறிது தேன். இரண்டு சொட்டுக் கிளிசரின் கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்து, பத்து நிமிடங்கள் கழித்துக் கழுவ, முகம் வறண்டு போகாமல் கண்ணாடி போலிருக்கும்.

★ இளம் வயதிலேயே தலையெல்லாம் வெளுத்துவிட்டதா? செம்பருத்திப் பூ, அவுரி விதை, நெல்லி முள்ளி மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை ஒரு இரும்புப் பாத்திரத்தில் ஊற வைக்கவும். நரை உள்ள இடத்தில் இதைத் தடவி, சிறிது நேரம் ஊறிய பின் அலசவும். இது இயற்கையான, கூந்தலுக்குப் பாதிப்பில்லாத டை.

★ முட்டையின் வெள்ளைக் கருவுடன் துளிகள் எலுமிச்சை சாற்றைக் கலந்து முகத்திலும், கழுத்திலும் தடவி, அது உலர்ந்த பிறகு அழுத்தமான டவலால் மென்மையாகத் துடைத்து விட வேண்டும். முகத்திலுள்ள புள்ளிகளை அகற்ற மோர் அல்லது தயிர் கொண்டு மசாஜ் செய்வது நல்லது.

★ புதினா, கொத்தமல்லி என எது கிடைத்தாலும் அதைக் கசக்கிச் சாறு எடுத்துக் கொள்ளவும். அதைப் பூசி சிறிது நேரம் ஊற விட்டுத் துடைத்தால் முகம் பிளீச் செய்தது போலப் பளபளக்கும்.

★ முதல் நாள் இரவே வென்னீரில் கைப்பிடியளவு பன்னீர் ரோஜாக்களைப் போட்டு மூடி வைத்துவிடுங்கள். மறுநாள் காலை அந்தத் தண்ணீரை வடித்துவிட்டு, அதில் முகம் கழுவி வந்தால், முகம் இயற்கையாக சிகப்பழகு பெறும். மென்மையாகவும் மாறும்.

★ வெந்தயத்தை முதல் நாள் இரவே ஊறவைத்து, மறுநாள் அரைத்து அதைத் தலையில் தடவி மொட மொடவெனக் காயும்வரை விட வேண்டும். பிறகு ஷாம்பு போட்டுக் குளித்தால் கூந்தல் ஆரோக்கியம் பெறும் மற்றும் பளபளப்பாகவும் இருக்கும்.

★ உருளைக் கிழங்கைப் பச்சையாக அப்படியே துருவிச் சாறு பிழிந்து கண்களுக்கடியில் போட்டுக் காய்ந்ததும் துடைத்தால் கருவளையங்கள் மறையும்.

★ தக்காளிப் பழத்தை மசித்துக் கூழாக்கிக் கொள்ளுங்கள். அதை முகம், கழுத்து, கை, கால்களில் தடவி சிறிது நேரம் ஊறவிட்டுக் கழுவிட, சருமத்தில் தென்படும் கரும்புள்ளிகள், திட்டுகள் மறைந்து சருமம் பளிச்சென்றாகும்.

★ முதல் நாள் இரவே கசகசாவை ஊறவைத்துவிடுங்கள். மறுநாள் காலை அதை மைபோல் அரைத்து, பால் அல்லது பாலாடை கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவிக் கொள்ளலாம். இப்படிச் செய்வதன் மூலம் சருமம் நீண்ட நாட்களுக்கு இளமையுடன் காட்சியளிக்கும். பருக்கள் அதிகமிருந்தால் இச்சிகிச்சையைத் தவிர்ப்பது நல்லது.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Be

பெயர்:............................
முகவரி:............................
............................
தொழில்:............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25- 01-2003
அனுப்பவேண்டிய முகவரி- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
அக்கரைப்பற்று வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ப. ரேகா
ஆர். கே. எம். வீதி, அக்கரைப்பற்று-07.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## கைகள் பேசட்டும்



மணப்பெண் அலங்காரத்தில் தவிர்க்க முடியாத ஒரு விசயம் மெஹந்தி. அது இல்லாமல் பிரைடல் மேக்கப் பூர்த்தியாவதில்லை. மெஹந்தி கற்றுத்தரவென பிரத்தியேக வகுப்புகள் கூட ஆரம்பிக்கப்படுகிற அளவுக்கு அத்தனை பிரபலம் அது. மெஹந்தி இடுவதென்பது அப்படியொன்றும் சிரமமான விசயமில்லை. மருதாணியைச் சரியான அளவில் கலக்கும் பக்குவமும், கைப் பழக்கமுமே முக்கியம்.

மெஹந்தி போடும் முறை இதோ இங்கே உங்களுக்காக...

### தேவையான பொருட்கள்:-

தரமான மருதாணிப் பவுடர்-1 கப்
எலுமிச்சம்பழம்-1
நீலகிரித் தைலம்-1 சிறு போத்தல்
டீ டிகாக்ஷன்-தேவையான அளவு

### கலக்கும் முறை

மருதாணிப் பொடி நாட்பட்டதாக இருக்கக் கூடாது. அதை முதலில் மெல்லிய துணியில் (துப்பட்டா சிறந்தது) சலித்துக் கொள்ளவும். சலித்த மருதாணிப் பொடியை ஒரு கப்பில் போட்டுக் கொள்ளவும். எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து வடிகட்டிக் கொள்ளவும். கப்பில் இருக்கும் மருதாணிப் பொடியுடன் நீலகிரித் தைலம், எலுமிச்சம்பழச் சாறு, டீ டிகாக்ஷன் ஆகியவற்றைக் கலக்கவும். ரொம்பவும் கெட்டியாகவும் இல்லாமல், ரொம்பவும் நீர்க்கவும் இல்லாமல் பேஸ்ட் போன்ற பதத்தில் குழைத்து நான்கு மணி நேரம் ஊற வைக்கவும்.

### கோன் செய்யும் முறை

பால் கவரைக் கத்தரித்துக் கழுவித் துடைத்துக் கொள்ளவும். அதைப் பாதியாக வெட்டி, கோன் வடிவில் சுருட்டவும். மேல் பாகம் பிரியாமலிருக்க பின் செய்யவும். உள்ளே குழைத்து வைத்துள்ள மருதாணியை நிரப்பி கோனின் மேல் பகுதியை மூடவும். கீழ் நுனியில் சிறியதாகக் கத்தரிக்கவும். துவாரம் பெரிதானால் மெஹந்தி டிசைன் சரியாக வராது. இது மாதிரி இரண்டு, மூன்று கோன்களில் மருதாணியை நிரப்பித் தயாராக வைத்துக் கொள்ளலாம்.

### மெஹந்தி இடும் முறை

முதலில் வெள்ளைத் தாளில் சிறிய டிசைன்கள் வரைந்து பழகலாம். கை தடுமாற்றமின்றி வரைந்து பழகியதும் கைகளில் போட்டுப் பயிற்சி எடுக்கலாம். கைகளைச் சுத்தமாகக் கழுவித் துடைத்துக் கொள்ளவும். பிறகு தேவையான டிசைனை வரையவும். மருதாணி காய்ந்ததும் எலுமிச்சம் பழச் சாறும், சர்க்கரையும் கலந்த கரைசலைப் பஞ்சில் தோய்த்துக் கைகளின் மேல் ஒற்றி எடுக்கவும். ஐந்து மணி நேரம் கழித்து மருதாணியை எடுத்து விடவும். கைகளைக் கழுவ வேண்டாம். உடனே கைகளில் தேங்காய் எண்ணெயைத் தடவவும்.

### சில தகவல்கள்

★ மருதாணியின் நிறம் அவரவர் உடல் வாகையும் பொறுத்தது. ரொம்பவும் சூடான உடம்புடையவர்களுக்கு நன்றாக நிறம் வரும்.

★ நாட்பட்ட மருதாணியாக இருந்தாலும் நிறம் பிடிக்காது.

★ மருதாணியின் குளிர்ச்சி ஒத்துக்கொள்ளாதவர்களும், சைனஸ் தொந்தரவு உள்ளவர்களும் நீலகிரித் தைலம் கலந்து இட்டுக்கொண்டால் பாதிப்பிருக்காது.

★ வெறும் அழகு என்பதை மீறி, மருதாணி இட்டுக் கொள்வது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விடயமும் கூட. உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். கை, கால்களில் வெடிப்புகள் வராமல் காக்கும்.

★ சிலர் மெஹந்தி கலக்கும் போது வெண்டைக்காய்ச் சாறு சேர்ப்பார்கள். இதற்கும், நிறத்துக்கும் தொடர்பில்லை. வெண்டைக்காயின் கொழகொழப்பு, டிசைன் போடும்போது சுலபமாகப் போட உதவும். ■

## நீங்கள் கமகமக்க....



பூக்களுக்கு நீயே வாசமடி என்றும், மங்கை அவள் வாய் திறந்தால் மல்லிகைப் பூ வாசம் என்றும் பெண் வாசம் பற்றிப் பெருமை பேசும் பாடல்கள் நிறைய. நிஜத்திலும் அது சாத்தியமாக இதோ சில வாசனை டிப்ஸ்...

பெண்ணின் உடலமைப்பு, செயற்பாடு காரணமாகப் பலருக்கும் உடல் துர்நாற்றம் என்பது தவிர்க்க முடியாமல் போகிறது. துர்நாற்றத்துக்குக் காரணங்கள் பல.

முதலில் வியர்வை. இது ஆண் பெண் எல்லாருக்கும் பொது. வியர்வைக்குத் தனியே எந்த வாசனையும் கிடையாது. அது பாக்டீரியாவுடன் சேரும் போதுதான் ஒருவித துர்நாற்றம் வெளிப்படுகிறது. வியர்வையை அசுத்தமாக நினைப்பவர்கள் பலர். ஆனால் அது ஆரோக்கியத்தின் வெளிப்பாடு. வியர்வையின் மூலம் உடலின் தேவையற்ற கொழுப்பும் வெளியேறும். சருமத்தில் ரோம வளர்ச்சி அதிகமுள்ள இடங்களில் வியர்வை அதிகம் சுரக்கும். தினம் இரு வேளைகள் குளிப்பது, டியோடரண்ட் உபயோகிப்பது, பருத்தி உடைகளை அணிவது போன்றவை இப் பிரச்சினைக்குத் தீர்வளிக்கும்.

தினம் இரண்டு வேளைகள் பல் துலக்கினாலும் சிலருக்கு வாய் நாறும். இவர்கள் மவுத் வாஷ் உபயோகிக்கலாம். கிராம்பை ஊற வைத்த தண்ணீரால் அடிக்கடி வாய் கொப்பளித்து வந்தாலும் நாற்றம் அகலும். அதே மாதிரி ஏலக்காயையும் மெல்லலாம்.

உடலை நாள் முழுவதும் நறுமணத்துடன் வைத்திருக்க....

குளிக்கும் தண்ணீரில் வேப்பிலை அல்லது கற்பூரம் அல்லது எலுமிச்சம் பழத்தின் தோல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் போட்டுக் குளிக்கவும். உடல் மணக்கும்.

ரொம்பவும் வாசனையான சவர்க்காரங்கள் சருமத்துக்கு நல்லவையல்ல. அதுவும் இந்தக் கோடை காலத்தில் சோப்பின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்வதே நல்லது. சோப்புக்குப் பதிலாகப் பச்சைப் பயறு மா அல்லது கடலை மாவுடன் கஸ்தூரி மஞ்சள், சந்தனம், வெட்டி வேர், பூலாங்கிழங்கு, ரோஜா இதழ் போன்றவற்றைக் காய வைத்து அரைத்து உடம்புக்குத் தேய்த்துக் குளிக்கலாம். இது சரும அழகையும் அதிகரிக்கும். உடலையும் இயற்கை நறுமணத்துடன் வைக்கும்.

வியர்வையைக் கட்டுப்படுத்த நிறையப் பேர் ஆண்ட்டி பெர்ஸ்பிரண்ட் உபயோகிக்கிறார்கள். இது வியர்வையை வெளியேறவே விடாமல் செய்து விடும். வியர்வை வெளியேறினால்தான் உடலுக்கு ஆரோக்கியம். எனவே ஆண்ட்டி பெர்ஸ்பிரண்ட்டுகளைத் தவிர்த்து, டியோடரண்டுகளை உபயோகிக்கலாம்.


இப்போது கடைகளில் அரோமா டிஃப்யூசர்கள் என்று கிடைக்கின்றன. பெரிய பியூட்டி பார்லர்களிலும் கிடைக்கும். இதை வாங்கி வீட்டில் ஆங்காங்கே ஊதுபத்தி போன்று ஏற்றி வைத்துவிட வேண்டியதுதான். விட்டிலிருப்போரின் மேலும் அதன் வாசனை பிரதிபலிக்கும்.

பஞ்சில் சிறிதளவு யு டி கொலோனை நனைத்து, உள்ளாடைக்குள் வைத்துக் கொள்ளலாம். நாள் முழுவதும் உடல் வாசம் வீசும்.

குளிக்கும் தண்ணீரில் யு டி கொலோன் கலந்து குளிக்கலாம்.



செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலுஞ்
-சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்!
**சுப்பிரமணிய பாரதியார்–**



## பாப்பா முரசு சிறுகதை

# மதியூகத் தீர்ப்பு

**சு**ந்தரும், கவுதமும் நண்பர்கள். பக்கத்து வீட்டினரும் கூட. ஒரு நாள் சுந்தர் ஒரு கல்யாணத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் தன் நண்பன் கவுதமிடம் சென்று எப்போதும் கவுதம் தன் விரலில் போட்டிருக்கும் மோதிரத்தைக் கேட்டான்.

"திருமணம் முடிந்து வந்ததும் தந்து விடுகிறேன்," என்று.

சரி! நண்பன் கேட்கிறானே என்பதால் உடனே கழட்டிக் கொடுத்தான் கவுதம். திருமணம் முடிந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டது. சுந்தர் மோதிரத்தைத் திருப்பிக் கொடுக்கவே இல்லை. அந்த மோதிரம் சுந்தரின் கைக்கு அழகாக இருந்ததால் அதைத் திருப்பிக் கொடுக்க மனமின்றித் தானே வைத்துக் கொண்டான்.

கவுதம் நண்பனிடம் சென்று மோதிரத்தைக் கேட்டான். "மோதிரமா? என்ன விளையாடுற. நான் என்னமோ மோதிரம் இல்லாதவன் மாதிரியும் உன்னிடம் கடன் கேட்டு வாங்கின மாதிரியும் பேசுறியே. இதோ பார், இது என் மோதிரம். எங்கிட்ட மோதிரம் இருக்கும் போது நான் ஏன் உன்னிடம் வந்து கடன் வாங்கணும்," என்றான்.

அதிர்ந்து போனான் கவுதம். "டேய்! அநியாயமா பேசாதே. என்னோட மோதிரத்தை விரல்ல போட்டுகிட்டு ஏமாத்துறியா?" என்றான் கவுதம்.

"யார்கிட்டே வேண்டுமானாலும் போய் சொல்லு. நான் என்ன ஒன்றும் இல்லாதவனா உன்கிட்ட வந்து கடன் வாங்க? உன்னை விட அதிகம் சம்பாதிக்கிறேன் தெரியுமா?" என்று கேவலமாகப் பேசித் திட்டி அனுப்பினான் சுந்தர்.

கொதித்துப் போன கவுதம் தான் ஏமாற்றப்பட்ட விடயத்தை மரியாதை ராமனிடம் சென்று தெரிவித்தான்.



ஆள் அனுப்பி சுந்தரை வரச் சொன்னார் ராமன்.

"அய்யா! இது என் மோதிரம்தான். இந்த மோதிரத்தின் மீது இவனுக்கு ரொம்ப நாளாகவே ஒரு கண். அதான் இப்படி பொய் சொல்கிறான்," என்றான் சுந்தர்.

"சரி! நீங்கள் இருவரும் சொல்வதைக் கேட்டால் யார் குற்றவாளி என்ற உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்குச் சாட்சியும் கிடையாது. எனவே இரண்டு நாள் கழித்து நீங்கள் இருவரும் வாருங்கள். பொற்கொல்லரை வைத்து மோதிரத்தை மதிப்பிட்டு, அந்தத் தொகைக்கு மோதிரத்தை விற்று இருவருக்கும் பாதி பாதி பணத்தைக் கொடுக்கிறேன்," என்றார் ராமன்.

சுந்தர் மனதுக்குள் ஏற்பட்ட மகிழ்ச்சியை மறைக்க முடியாமல் மெல்லச் சிரித்தபடியே சென்றான்.

கவுதமோ, "கஷ்டப்பட்டு வாங்கின மோதிரமாச்சே," என்று புலம்பியபடியே சென்றான். அப்போதே யார் குற்றவாளி என்பதைக் கணக்கிட்டு விட்டார் ராமன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு இருவரும் மரியாதை ராமனிடம் வந்தனர். பொற்கொல்லர் கவுதமின் மோதிரத்தை தேய் தேய் என்று தேய்த்தார்.

"கவுதம் அய்யோ! உரைகல்லில் போட்டு இப்படி தேய்க்கிறீர்களே..." என்று பதறினான். சுந்தரோ ஒன்றும் பேசாமல் இருந்தான். பிறகு மோதிரத்தின் மதிப்பை விட மிகவும் குறைவான மதிப்பைச் சொன்னார் பொற்கொல்லர்.

"ஐயா! இது அநியாயம். இந்த மோதிரத்தை நான் வாங்கிய விலையில் கால் பங்கு விலைகூட இந்தப் பொற்கொல்லர் சொல்லவில்லை. இவருக்கு எடை போடத் தெரியவில்லை," என்று கூச்சலிட்டான் கவுதம்.

சுந்தரோ எதுவும் பேசாமல் நின்றிருந்தான். மதியாதைராமன், சுந்தரைப் பார்த்து "என்ன நீ வாயே திறக்காமல் இருக்கிறாய். உண்மையிலேயே இது உன்னுடைய மோதிரமாக இருந்திருந்தால் நீ பதறி இருப்பாய். வேண்டுமென்றேதான் நான் பொற்கொல்லரிடம் இதன் மதிப்பை குறைத்து மதிப்பிடச் சொன்னேன். உன் நண்பன் கவுதமை ஏமாற்றிய குற்றத்திற்காக உனக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை. கவுதம்! நீ உன் மோதிரத்தை பெற்றுக் கொள்," என்றார்.

நண்பனை ஏமாற்றிய தனக்கு இந்தத் தண்டனை தேவைதான் என்று நினைத்தான் சுந்தர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. மளமளவென மலை நகருது அவன் யார்?
2. ஒற்றைக் கண்ணன் கூரான உடம்புக்காரன் அவன் யார்?
3. திறந்ததை மூட முடியாது அது என்ன?
4. கத்திபோல் இலையிருக்கும் கவரிமான் பூப்பூக்கும் தின்னப்பழம் பழுக்கும் தின்னாத காய்காய்க்கும் அது என்ன?
5. நித்திரையில் தூதுவன் நினையாமல் வருவான் அவன் யார்?
6. ஓடும் சாடும் ஒற்றைக்காலில் நிற்கும் அது என்ன?
7. வெள்ளைக்காரனுக்குக் கறுப்புத் தொப்பி அது என்ன?
8. காய்ப்பார் பூப்பார் கலகலப்பார் காகம் இருக்கக் கொப்பில்லை அது என்ன?
9. செக்கச் சிவந்திருக்கும் செவ்வாழை பூத்திருக்கும் வாலும் முளைத்திருக்கும் வந்திருக்கும் சந்தைக்கு அது என்ன?
10. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை அது என்ன?

**விடைகள்.**

1. ரெயில் 2. ஊசி
3. தேங்காய் 4. வேப்ப மரம்
5. கொட்டாவி 6. கதவு
7. தீக்குச்சி 8. நெல்லு
9. செத்தல் மிளகாய்
10. கண் இமைகள்

**வி. டிலானி, இராமநாதபுரம் மகாவித்தியாலயம், வட்டக்கச்சி.**

## பலாப்பழ மீன்



**மீ**ன் இனத்தில் 'கிளவுன் பப்பர்' என்னும் அபாய மீன் உள்ளது.

பலாப்பழத்தைப் போலவே காட்சியளிக்கும் இந்த மீன் ருசியானது அல்ல. கொடிய விசமுள்ளது. இந்த மீன் தண்ணீரில் மிதக்கவும் செய்யும்.

கிளவுன் பப்பர் மீனைச் சாப்பிடும் மற்ற மீன்களுக்கு மரணம்தான் ஏற்படும். எதிரி மீன் இதன் உடலின் மேல் உள்ள முட்களை அகற்றி விட்டுச் சாப்பிடுவதற்குள் மரணமடைந்துவிடும்.

## ஸீ ஸ்கர்ட்!



**எ**ன்னடா போத்தல் போத்தலாய் எக்ஸர்சைஸ் பண்ற உருண்ட கட்டையாட்டம் இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? இது ஒரு கடல் பிராணி. பெயர் ஸீ ஸ்கர்ட். இதன் மேற்பரப்பில் இரண்டு ஓட்டைகள் இருக்கும். ஒன்றின் வழியாக இந்தப் பிராணியின் உணவு (கடல் தண்ணீர்) சென்று, மற்ற ஓட்டையின் வழியாகக் கழிவுகளுடன் சேர்ந்து நீர் வெளியே வரும். இந்த வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். இந்த ஸ்கர்ட்டை யாராவது தோந்தரவு செய்தால் தனது இரு ஓட்டைகள் வழியாகத் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும். இதன் அடிப் பாகம் ஏதாவது ஒரு பாறை அல்லது கிளிஞ்சல்களுடன் ஒட்டிக் கொண்டு இருப்பதால் தனது எதிரிகளைக் கண்டதும் ஓடி மறைய முடியாது. இருப்பினும் இதன் தடிப்பான மேற்புறம் இதற்குப் பாதுகாப்பாக அமைந்துள்ளது!

## வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:- உலகிலுள்ள உயரமான எரிமலைகள்**

| எரிமலை | நாடு | கடைசியாகக் குமுறிய ஆண்டு | உயரம் மீற்றர் | அடி |
|---|---|---|---|---|
| 1. Guallatiri | சிலி | 1987 | 6,060 | 19,882 |
| 2. Lascar | சிலி | 1991 | 5,990 | 19,652 |
| 3. Cotopaxi | ஈகுவடோர் | 1975 | 5,897 | 19,347 |
| 4. Tupungatito | சிலி | 1986 | 5,640 | 18,504 |
| 5. Popocatepetl | மெக்சிக்கோ | 1995 | 5,452 | 17,887 |
| 6. Ruiz | கொலம்பியா | 1992 | 5,400 | 17,716 |
| 7. Sangay | ஈகுவடோர் | 1988 | 5,230 | 17,159 |
| 8. Guagua Pichincha | ஈகுவடோர் | 1988 | 4,784 | 15,696 |
| 9. Purace | கொலம்பியா | 1977 | 4,755 | 15,601 |
| 10. Kliuchevskoi | ரஷ்யா | 1995 | 4,750 | 15,584 |

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.01.2003.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 480**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 478

பரிசுக்குரியவர்:
**எ.ஃப்.எஸ். சர்மிலா,**
மு.க.வி. கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **கே. தயானி,** மௌபிரேய் கல்லூரி, கண்டி. | **உ. விஜ்யூ,** கேம்பிரிஜ் சர்வதேச பாடசாலை, கொழு.15. |
| **தி. ஞானேஸ்வரன்,** அருள்மனை சிறுவர் இல்லம், மானிப்பாய். | **ஜெ. காஞ்சனா,** வடிவாம்பிகா த.ம.வி., முன்னேஸ்வரம், சிலாபம். |
| **எம்.என்.எ.ஃப்.ரிப்கா,** துருக்கராகம, கஹட்டகஸ்திகிலிய. | **எம்.எஸ். துஷ்யந்தன்** தர்மதூத கல்லூரி, பதுளை. |
| **தேவராஜா புவனேஸ்வரன்,** 103, மூன்று முறிப்பு சந்தி, கண்டி வீதி, வவுனியா. | **பூ. கிரிஷாந்** 18/1, அன்னை திரேசா வீதி, இறம்பைக்குளம், வவுனியா.. |
| **ஞா. சாயி அஸ்வின்குமார்,** 208, ஹொரவப்பொத்தான வீதி, வவுனியா. | **வ. மிறின் தனோஜன்,** 145, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா. |

## இந்த வாரப் புதிர்




தரப்பட்ட உருவில் P,Q,R, என்னும் இடங்களில் வர வேண்டிய எண்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# அரச விடுதி

மாசி மாதமாகையால் காலைக் கதிரவனின் ஒளிக்கற்றைகளை ஊடறுத்து மென்பனி அப்போதும் பெய்து கொண்டிருந்தது. ஓலையால் வேய்ந்திருந்த எங்கள் வீட்டுக் கூரை மழையினால் நனைந்தது போல பனியில் தெப்பமாகி விட்டிருந்தது...

குழந்தைகள் நால்வரும் பாடசாலைக்குப் புறப்படும் ஆயத்த நடவடிக்கைகளில் தாய் இந்துவைப் பிய்த்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். உலர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில் இரவு வெளிக் கொடியில் விரித்த சீருடைகள் பனியில் நனைந்ததனால் இந்து அவற்றை ஸ்திரிக்கை செய்து காய்ச்ச வேண்டி இருந்தது. அதனாலேயே அன்று அனைத்துக் கருமங்களும் தடங்கலாகிக் கொண்டிருந்தன.

பிள்ளைகள் பாடசாலைக்குப் புறப்பட்டவுடனேயே சந்தை கலைந்தது போன்று வீட்டு ஆரவாரங்கள் அனைத்தும் முற்றாக அடங்கி விட்டது.

"என்னப்பா... சந்திரன் முதலாளி, 'கடைக் கணக்கை இந்த மாதம் முற்றாகத் தீர்க்காவிட்டால் சாமான் தரமாட்டன்' எண்டு சொல்லிப் போட்டான்... வளருகிற பிள்ளைகளை வைத்துக்கொண்டு இந்தக் கொட்டில் வீட்டிலை நான் எப்படிச் சமாளிக்கிறது... வெற்றிடமாகியுள்ள 'லேபர் குவார்ட்டசை' இந்த முறையாவது பணிப்பாளரைப் பிடித்து எடுக்கப் பாருங்கோ..." இது இந்துவின் சிணுங்கல்.

நான் அலுவலகப் பணியாளராகக் கடமை ஏற்று இருபது வருடங்கள் ஆகிவிட்டது. மாகாண சபை அமைப்பில் பல வசதிகளையும் பெறலாம் என்கின்ற நம்பிக்கையில் மத்திய அரச பணியிலிருந்து மாறி வந்தது பெரிய தவறாகப் போய்விட்டது. மாகாணசபையின் கீழ் செல்வாக்கைப் பிரயோகித்து அமைய ஊழியர்களாக இணைந்தவர்களே நிரந்தர நியமனமும் பெற்று அரச விடுதியிலும் சுகமாக வாழ்கின்றார்கள்...

இந்து எனக்குக் காலை உணவு பரிமாறி, உடைகளைத் தெரிவு செய்து தந்து மற்றும் அவசியமான உதவி ஒத்தாசைகளை வழங்கி, பின் தானும் சென்று குளித்து மாற்றுடை அணிந்து பூவைத்துப் பொட்டிட்டு என் முன்னால் பிரசன்னமானாள்.

அலுவலகத்திற்குச் செல்லும் கணவனை மன மகிழ்ச்சியுடன் அனுப்பிவைக்க வேண்டிய பொறுப்பினை அவள் எப்படி நிறைவேற்றுகின்றாள்...! ஆனால் தனது ஊழியன் ஒருவன் அலுவலகத்தில் மனநிறைவுடன் பணிபுரிகின்றானா என்பதை எந்த நிர்வாக மட்டத்திலாவது கிஞ்சித்தேனும் நினைத்துப் பார்க்கிறார்களா?


"இந்து.. நீ கவலைப்படாதே. நான் சந்திரனோட கதைச்சுத் தவணை கேட்கிறன். விடுதி விசயமாக பணிப்பாளரோடை விபரமாகவும் பணிவாகவும் கதைச்சு வைத்திருக்கிறன். இந்த முறை தப்பாது..."

மனைவிக்கு ஆறுதல் கூறிவிட்டு எனது துவிச்சக்கர வண்டிச் சக்கரங்களின் காற்றழுத்தத்தைச் சரி பார்த்த பின்னர் மனைவியிடம் விடைபெற்றுச் சென்றேன்.

எங்கள் அலுவலகத்தில் இருபதுக்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிகின்றார்கள். வேலையில் எந்தத் தடங்கலும் இருக்க மாட்டாது. அதே சமயம் கதை பேச்சு பகிடிக்கும் குறைவிருக்காது. அன்றைய தினம் ஏதோ காரணத்தால் பல அலுவலர்கள் எதிர்பாராதபடி லீவில் நின்றுவிட்டிருந்தார்கள். அப்படியான சமயத்திலும் அவர்களுடைய மேசைகளையும் தூசுதட்டி... கிளாஸ்பாட் 'பெலிஷ்' செய்து கோவைகளை அடுக்கி குடிநீர் வைத்து...

"என்ன ரஞ்சன் யோசித்துக் கொண்டு.... நேரமாச்செல்லே... எடுமன் தினவரவுப் பதிவேட்டை..." பிரதம எழுதுவினைஞர் பணிக்கவும் துரிதமாகச் செயற்படுகின்றேன்.

இவா சாதாரண விடய எழுதுவினைஞராக இந்த அலுவலகத்திற்கு வந்து நான்கு மாதகாலம் தான் ஆகின்றது. அதற்குள்ளாகப் பிரதம எழுதுவினைஞராக உயர்ந்துள்ளா. ஐந்து வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பம். கணவன் அரச வங்கியின் ஏதோவொரு



பிரிவில் பணிபுரிகின்றார்.

கவர்ச்சியாகவும் விதம் விதமாகவும் ஆடைகள் அணிந்து எமது ஏனைய அலுவலகப் பெண்களுக்கு அதிரடி கொடுப்பா. முதுகு, இடை ஆகிய பகுதிகள் சற்றுப் பளிச்செனத் தெரியும்... "நேர்சரிக்கு" பிள்ளைகளைக் கூட்டிப் போக... கூட்டிவர நான் வேண்டும்... காலைச் சாப்பாட்டை அலுவலகத்திற்கு எடுப்பிக்க நான் வேண்டும்.... புருஷன்காரன் அது இது என்று தொலைபேசியில் கேட்டால் நான் கொண்டோட வேண்டும்.

"ரஞ்சன்... நேற்றுப் பணிப்பாளருக்குப் போட்ட கோவைகள் இரண்டு இன்னமும் வரவில்லை."

"சாரி மேடம்... பார்க்கிறன்."

"ரஞ்சன்... நீர் உங்கை மற்ற மற்றவை ஏதும் 'பிரைவேட்' வேலை சொல்லிச்சினம் எண்டு ஓடித் திரியாதையும்... பணிப்பாளர் உம்மிலை சரியான கடுப்பிலை இருக்கிறார்... பிறகு என்னைக் குறை சொல்லாதையும்..."

"நான் அப்படிப் போறேல்லை மேடம்... உங்கடை அலுவலாகப் போகேக்கை ஆரும் முத்திரை அது இது எண்டு கேட்டால் மாத்திரம் வாங்கிக் கொடுப்பன்"

"சரி சரி... நான் உம்முடைய நன்மைக்காகத்தான் சொன்னனான். எங்கடை விடுதிக்குப் பின்னாலை கண்டபாட்டுக்கு புதர் மண்டிக் கிடக்குது... எப்ப எண்டாலும் உம்மை கூப்பிட்டனானா?"

இவா என்னை விலை பேசி வாங்கினாலும் வாங்குவா போலத்தான் கிடக்குது...! எமது அலுவலக தோட்டத் தொழிலாளிக்கு வேலை போதாது, சுகாதாரத் தொழிலாளியின்ர கடமைகளயும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று அவனை வெருட்டிய வெருட்டில் அவன் பல மணி நேரம் இவாவினுடைய விடுதியில்தான் வேலை செய்து கொண்டு நிற்கிறான். இவவோடை எந்த வகையிலும் பிரச்சனைப் பட்டுவிடக் கூடாது. விடுதி விசயம் கனிந்து கொண்டு வருகிற இந்த நேரத்தில் இன்னும் கவனமாக இருக்க வேணும்...

சிந்தித்தபடியே சென்று எனக்குரிய இடத்தில் அமர்கின்றேன். பணிப்பாளர் வரவும் அவரது கையொப்பத்திற்காகத் தினவரவுப் பதிவேட்டை எடுத்துச் செல்கின்றேன். நான் வெளியே வரவும் 'மேடம்' உள்ளே சென்றா.

"ரஞ்சன்..." -மற்றொரு விடய எழுதுநர் விஜயன் சேர் என்னை அழைத்தார். இவர் வேலை செய்கின்றாரோ என்னவோ தப்பாமல் கால்களை ஆட்டியபடி பார்வையை கோவை ஒன்றில் பதித்தபடி யார் யார் என்ன செய்கின்றார்கள் என்பதை அவதானிப்பதில் வல்லவர்.

"ஓம் சேர்... சொல்லுங்கோ"

"கிட்ட வாவன்ராப்பா... சொல்ல" விஜயன் கூறவும் அவரை மிக மிக அண்மித்தேன்.

"உன்னுடைய அரச விடுதி விசயம் என்ன மாதிரி..?" -வினவினார்.

"நேற்றுத்தான் 'மேடம்' கோவையை பணிப்பாளருக்குப் போட்டுள்ளா. எனக்குத்தான் அதிக புள்ளிகள். பணிப்பாளருக்கும் எனது கஷ்டங்களைச் சொல்லியிருக்கிறேன். இந்த முறை எப்படியும் எனக்கு விடுதி கிடைக்கும்." நம்பிக்கை தெரிவித்தேன்.

விஜயன் 'சேர்' எனது முகத்தைப் பார்த்தார்... சற்று ஏளனமாகச் சிரித்தார். அவர் இப்படித்தான். எதிலும் எவர் மேலும் இலகுவில் நம்பிக்கை வைக்கமாட்டார். மற்றவர்கள் நம்பிக்கை வைக்கும் விடயங்களையும் அவநம்பிக்கையுடன்தான் நோக்குவார். ஆனாலும் அவருக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம் எமது அலுவலகத்திலேயே இருந்தது. அதுவே கலாச்சாரத்தை உறுதியுடன் பின்பற்றும் அனோஜா என்ற 'புயல்...!'

நான் எனது அலுவலகத்தில் பல வருடங்கள் பணிபுரிந்து கொண்டிருந்தும் ஒரு அரச விடுதியைப் பெற முடியாமல் அவதிப்படுகின்றேன். பணிப்பாளர் நல்லவர். அவரது விடுதியில் இன்று குலைதள்ளி உள்ள வாழைகள் அத்தனையும் நான் ஆழக் கிடங்கு வெட்டி வைத்தவைதான். அவர் கேட்டு நான் செய்யாத உதவிகள்தான் என்ன? எப்படியும் அரச விடுதி இம்முறை எனக்குத்தான் கிடைக்கும்.

"என்ன ரஞ்சன்... பணிப்பாளர் இப்ப முன்னர் போல இல்லை எண்டு கந்தோரிலை ஒரே கதையாய்க் கிடக்கு... அலுவலர்களோடு இறுக்கமாம். ஆரோ இஞ்ச இருந்து அவருக்கு கதைகள் கொண்டு போறதாகக் கதைக்கினம். நீர் பணிப்பாளரோடு நெருங்கிப் பேசிப் பழகினாலும் அப்படிக் கதை காவமாட்டீர் என்பதும் எங்களுக்குத் தெரியும்."

"ஐயோ மிஸ்! நான் அப்படி செய்வனா... இது எனக்கொரு புதுக்கதை!" நான் பதறினேன்.

"நீர் ஒரு குழந்தைப் பிள்ளை... போன கிழமை எங்கடை லிகிதர் ஒருவர் இடமாற்றத்திலை அனுப்பப்பட்டிருக்கிறார். களஞ்சியப் பொறுப்பாளர் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார். ஒன்றும் அறியாத காவலாளிக்கு வேதன ஏற்றம் மறுக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் ஒரு பின்னணியில்லாமல் சும்மா நடக்கேல்லை."

அனேஜா மிஸ் கூறவும் எனக்கு மலைப்பாக இருந்தது. மறுபக்கம் அதனை ஏற்க முடியாமலும் இருந்தது.

"எமது பணிப்பாளர் நல்லவர். யாருக்கும் தீங்கு செய்யமாட்டார். மற்ற மற்றவை சொல்வதையும் நடுநிலைமையிலை நிண்டு சரி எண்டு ஏற்றுக் கொண்டால்தான் செய்வார்." நான் விளக்கினேன்.

"நீர் சொல்லுவது சரி ரஞ்சன். எறும்பு ஊர கல்லும் தேயும் எண்டு நீர் கேள்விப்படவில்லையா? நாங்கள் கந்தோருக்கு வாறது வேலை செய்ய. வேலை முடிந்தால் பகிடி பேசி எதை எதையாவது கதைப்பம்... சில வேளைகளிலை எங்கடை எங்கடை கவலைகளையும் மற்ற மற்றவர்களிடம் சொல்லி ஆறுவம். பிறகு மறந்துவிடுவம். எங்களுடனேயே இருந்து கொண்டு ஒருவர் இதற்கெல்லாம் கண் காது மூக்கு வைத்து பணிப்பாளரிடம் கூறினால் அவருக்கு கோபம் வரக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படுமில்லையா?"

அனோஜா மிஸ்ஸின் வாதத்தையும் மறுக்க முடியவில்லை. இப்போதெல்லாம் அலுவலகத்தில் முந்திய சந்தோசம் மகிழ்ச்சி நன்றாக அருகிக்கொண்டு போகின்றது. யாரைப் பார்த்தாலும் 'உம்' என்று முகத்தை வைத்தபடி இருக்கின்றார்கள். அளந்து அளந்து கதைக்கின்றார்கள். ஏனைய அலுவலகங்களைப் புகழ்ந்து கதைக்கின்றார்கள்.

எனது விடுதிப் பிரச்சனை எனது நினைவுக்கு வருகின்றது. எப்படியும் அரச விடுதி எனக்குக் கிடைக்கும். எனது மனைவி பிள்ளைகள் ஓலைக் குடிசையில் அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு நிச்சயம் ஒரு முடிவு ஏற்படும்...

பணிப்பாளருக்காக நான் பட்ட கஷ்டங்களை செய்த உதவிகளை சொல்லி முடியாது! அவற்றினை அவர் மறந்துவிடவும் இயலாது!

தாபனக் கோவையின் பிரமாணங்களுக்கு அமைவாகவும் எனக்கு அதி கூடிய புள்ளிகள் இருக்கின்றன...

குறுகிய நேர விடுதலை பெற்று மேடம் வெளியே செல்கின்றா... அலுவலகம் சுறுசுறுப்படைகின்றது. ஒவ்வொருத்தரும் மற்ற மற்றவர்களுடன் கதைத்து சிரிக்கின்றார்கள். அனோஜா மிஸ், விஜயன் சேரின் மேசைக்கு முன்னால் கதிரை போட்டு அமர்கின்றா...

எல்லோரும் அனைத்துத் துன்ப துயர்களிலிருந்துமே விடுபட்டவர்கள் போல அக மிக மகிழ்ந்து காணப்படுகின்றார்கள்!

எனது அரச விடுதி ஒதுக்கீடு பற்றிய முடிவு? பணிப்பாளர் இன்று எப்படியும் முடிவினைத் தெரியப்படுத்துவார்.

எமது ஸ்ரெனோ அவசர அவசரமாகக் கடிதங்களைக் கணனியில் தட்டச்சுச் செய்கின்றா. நான் எனது இடத்தில் அமர்ந்திருந்தபடியே அனைத்தையும் நோட்டம் விட்டபடி இருக்கின்றேன்.

ஸ்ரெனோ ஒரு கடிதத்தைத் தட்டச்சு செய்து முடித்து பிரின்ரறில் பிரதிகளை எடுத்துக் கொண்டு என்னருகாக வருகின்றா...

"என்ன மிஸ் விடுதி சம்பந்தமான கடிதமா?" நான் ஆவலுடன் வினவுகிறேன்.

"ஸொறி ரஞ்சன்... விடுதி உமக்குக் கிடைக்கவில்லை. தோட்டத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டிருக்கிறது..."

நான் கொண்டிருந்த நம்பிக்கைகள் கற்பனைகள் ஆசைகள் அனைத்துமே சின்னா பின்னமாகத் தகர்ந்து சிதறுகின்றது...

அவமானத்தால் எனது தலை தாழ்கின்றது...

மௌனம் சாதிப்பதைத் தவிர எனக்கு மார்க்கமெதுவும் புரியவில்லை.

திருமலை-வீ.என். சந்திரகாந்தி

# திரும்பும் அம்புகள்

அங்கம் 03

**தி**டீரென்று வீல் என்று ஒரு அலறல் சப்தம் கேட்டது. கொஞ்சம் போல குலை நடுங்கியது. யார், எதற்கு கத்துகிறார்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் இடமே கொடுக்காமல் ஏ.சி. பாக்ஸை அப்படியே வெளியே எடுக்க ஆரம்பித்தான். கனமான அந்தப் பாகம் பாதி வந்து மீதி வராமல் படுத்தியது. இன்னொருவர் துணை கட்டாயம் தேவை என்று புரிந்தது.

பெரியசாமி என்னும் அட்டெண்டர் வேலைக்கு வந்திருப்பான். அவனைப் போய் அழைத்து வருவதற்காக அப்படியே பெட்டியை பாதியில் நிறுத்திவிட்டு கிளம்பினான்.

"எங்க போறே?" வளர்மதி தடுத்துக் கேட்டாள்.

"பாக்ஸை இழுக்க இன்னும் ஒரு ஆள் வேணும்மா. நான் போய் நம்ம பெரியசாமியை கூட்டிகிட்டு வந்துடுறேன்."

"ஒண்ணும் வேண்டாம். நான் பிடிக்கறேன் வா..." அவள் தயாரானாள். அவனுக்குள் உதைத்தது.

"அம்மா... உங்களால முடியாது. அய்யா பார்த்தா ஆபத்து."

"அப்பா பிசியா அவர் ரூம்ல இருக்காரு. அதெல்லாம் பார்க்க மாட்டாரு. நீ வா..."

"இல்லம்மா... பெரியசாமியை போய் ஒரு நிமிஷத்துல கூட்டிகிட்டு வந்துட்றேன்"

"இப்ப நீ என் பேச்சை கேட்க மாட்டே?"

அவள் சற்று மிரட்டலாக பேசவும் வேறுவழியின்றி அவள் உதவியோடு அந்த பாக்ஸை வெளியே இழுக்க முயன்றான். வளர்மதியும் நல்ல தீவிரம் காட்டினாள். குனித்து இழுக்க முனைந்தபோது தாவணி நழுவி முன் மார்பு பால்கோவாவைக்கிளறிக் கொட்டியமாதிரி வழிந்து பெருகியது. பார்க்கவும் முடியவில்லை; பார்க்காமல் இருக்கவும் வேணுவால் முடியவில்லை.

மிரண்டான்.

நிமிர்ந்தான்.

நெற்றி வியர்வையை வழித்துப் போட்டவன்.

"வேண்டாம்மா.. போயிடுங்க. நான் பாத்துக்கறேன்" என்றான்.

"வேணு..." வளர்மதி ஒரு தினுசாக அவனை அழைத்தாள். தாவணி யிடம் திருமபவும் நழுவல். அவனுக்கும் புரிந்துவிட்டது.

முப்பத்தைந்து வயதாக ஒரு பெண்ணுக்கு திருமணமே ஆகாமல் இருந்தால் இப்படித்தான்...

"அம்மா வேண்டாம்மா... யாராவது பார்த்தா என் வேலை போயிடும்மா..."

அவன் சொல்லச் சொல்ல அவள் போய் கதவை தாழிடத் தொடங்கினாள்.

அதே சமயம் அவனுக்கு எப்பொழுதோ பொன்னம்பலம் குடும்பம் பற்றிக் கேள்விப்பட்ட ஒரு விசயம் ஞாபகத்துக்கு வந்தது.

'அவர் குடும்பத்தில் யாருக்கு திருமணமானாலும் அவர்கள் அதிக பட்சம் மூன்று மாதத்தில் விதவையாகி விடுவார்கள்! இதனால் எவ்வளவோ கோடிகள் இருந்தும் யாரும் அவர்களைத் திருமணம் மட்டும் செய்து கொள்ள முன்வரவேயில்லை.'

'இப்போது இவளிடம் தான் தன்னை இழந்தால்..?' வேணுவுக்கு வியர்த்தது.

அவளோ அவன் மேல் மரம் போல விழுந்து கட்டி அணைத்துக் கொண்டாள். ஒரு அணை நீர்வரத்து தாங்காமல் உடைத்துக் கொண்டது போல இருந்தது! கடவுளே!



**'எல்லாம் இறைவன் செயல் என்பதன் பொருள் வேறு. அதற்காக நமக்கான ஒவ்வொரு விநாடியும் அவனால் தீர்மானிக்கப்பட்டதாக நினைப்பதும் தவறு!**

**நமது நாளையும், பொழுதையும் அதன் இன்ப துன்பங்களையும் நமது செயல்கள் எண்ணும் கருமங்களால் நாம் தாம் தீர்மானிக்கிறோம்!'**

**வ**ளர்மதியின் கண்களில் விரகதாபம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

## இந்திரா சௌந்தர்ராஜன்

வேணுவோ அவர்கள் குடும்ப சாபத்தை உத்தேசித்தும் காதில் விழுந்தும், ஊர் முழுக்க பரிவிமிருக்கும் அந்த சாபத்தால் உண்டான பயத்தோடும் நடுக்கமாக அவளைப் பார்த்தான்.

"வேணு... என் துடிப்பு உனக்குப் புரியலையா?"

அவள் குரலில் தாப ஸ்மரணை.

"புரியாம போக நான் என்ன உணர்ச்சி இல்லாதவனா..? இருந்தாலும் நான் சாதாரண எலெக்ட்ரீஷியனுங்க."

"அதைப் பத்தி நான்தான் கவலைப்படணும். நீ ஏன் கவலைப் படறே?"

"என்னம்மா நீங்க.. விடுங்கம்மா. உங்களை எல்லாம் உத்துப் பார்த்தாலே ஐயா கண்ணை நோண்டிடுவாரு. இதுல நீங்க இப்படி என்கிட்ட இருக்கறதப் பார்த்தா அவ்வளவுதான்..."

"இங்க இருந்தாத்தானே சிக்கல்.. நாம ஓடிப்போய்டலாமா?"

வளர்மதி பெரிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"என்ன யோசிக்கிறே... இந்த ஜென்மத்துல இங்க இருக்குற வரை எங்களுக்குக் கல்யாணம் நடக்கப் போறதில்ல. என்னாலயும் ஒரு மரக்கட்டையா வாழ முடியலை. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு வேணு..."

"அதுசரி... உங்க வயசை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கம்மா. இனி இப்படி பேசாதீங்க. இதோட நீங்களும் மறந்துடுங்க. நானும் மறந்துட்டேன். என்னை மன்னிச்சிடுங்கம்மா... நான் வர்றேன்."

வேணு அந்த ஏ/சி பெட்டியை திரும்பத் தூக்கி வைக்கக்கூடத் தோன்றாமல் விட்டால் போதும் என்று விலகி ஓட ஆரம்பித்தான்!

அவள் கண்களில் கண்ணீரின் பிரவாகம்!

அந்த பங்களாவுக்குள் ஒரு அறையை ஆபீஸ் ரூமாக ஆக்கிக் கொடுத்திருந்தார் பெரியவர் பொன்னம்பலம் அங்கேதான் மேனேஜர் நாகசாமி எப்பொழுதும் இருப்பார் அவர் டேபிளில்தான் அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தரில் இருந்து லாக் நோட்டு வரை எல்லாம் இருக்கும்.

வேலை முடிந்து போவதற்கு முன் அதில் அன்றைய தினம் செய்த வேலைகளை எழுதி கையெழுத்துப் போட்டுவிட்டுப் போக வேண்டும் என்பது வழக்கம்.

வேணுவும் மேனேஜர் அறைக்குள் நுழைந்தான்.

நாகசாமி அவனைப் பார்த்து விட்டு கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

"அரை மணி லேட்டா..?" கேட்டார்.

"இல்லைய்யா... ஆமாய்யா..." அவனிடம் ஒரு மாற்றம்.

"ஒரு கேள்விக்கு இரண்டு பதிலா?"

"அய்யா... வந்து... வர்ற வழியில பொலிஸ்காரர் ஒருத்தர் பிடிச்சுகிட்டாருங்க. அதான்..."

"உன்னை எதுக்குப் பொலிஸ் பிடிக்குது... என்ன தப்பு பண்ணே?"

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

# ஆறுமனமே ஆறு!

## குடும்பப் பிளவு..... 02

"**ப**தின்மூன்று ஆண்டுகள் நீங்களும் மனைவியும் மூன்று குழந்தைகளையும் பெற்றுச் சந்தோசமாக வாழ்ந்துள்ளீர்கள். அகதிகள் முகாம் வாழ்க்கையும் இதனால் ஏற்பட்ட புதிய உறவுகளும் உங்கள் குடும்ப வாழ்க்கையைச் சீரழித்துவிட்டது என்பதை நினைத்து நான் மிகக் கவலையடைகிறேன். ஆனந்தன்! உங்கள் கவலையையும் பகிர்ந்து கொள்கிறேன்.

ஆனந்தன்! உங்கள் மனைவியைத் தேடிக் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. காவல்துறையினரும் முயற்சி செய்வார்கள். இப்போது உங்கள் குழந்தைகளை யாரிடம் கொடுத்துவிட்டு வந்தீர்கள்."

"பக்கத்து வீட்டு சரோ அக்காவிடம் சொல்லிவிட்டு வந்தேன்."

"சரி ஆனந்தன்! பிரச்சனைகள் ஏற்படும் போது நம் மனதை உறுதியாக வைத்திருக்க வேண்டும். சோர்ந்துவிடாதீர்கள். என்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் உங்களுக்குச் செய்ய ஆவலாக இருக்கிறேன். ஆனந்தன்! இன்று இத்துடன் இந்த அமர்வை முடித்துக் கொள்கிறேன். நீங்கள் முகாம் சென்று குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் மனைவி பற்றி ஏதாவது தகவல் கிடைத்தால் எனக்கு உடன் தெரியப்படுத்துங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

ஆனந்தனுக்கு மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தேன்.

மதிய உணவை முடித்துக் கொண்டு ஆனந்தன் விடைபெற்றார்.

இரண்டு நாட்களின் பின் திருச்சியிலுள்ள எடமலைப்பட்டிபுதூர் என்ற இடத்தில் கண்ணன் தனது நண்பரின் வீட்டில் ஆனந்தனின் மனைவியுடன் இருப்பதாக ஆனந்தன் மூலமாகத் தகவல் கிடைத்தது.

எடமலைப்பட்டிபுதூருக்கு எனது தொடர்பாளரை அனுப்பி தகவலை ஊர்ஜிதம் செய்து கொண்டேன். அடுத்த நாள் காலையிலேயே அழியாநிலை முகாம் தலைவரை அழைத்து, கண்ணன் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று அவர்கள் இருவரையும் அலுவலகத்திற்கு அழைத்து வரும்படி கேட்டுக் கொண்டேன்.

பி.ப 3.00 மணிக்கு முகாம் தலைவர், கண்ணன், ஆனந்தனின் மனைவி ஆகியோர் எனது அலுவலகம் வந்திருந்தார்கள்.

அழியாநிலை முகாம் தலைவர் முத்துலிங்கத்தைப் பார்வையாளர் இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொண்டு கண்ணனையும் ஆனந்தனின் மனைவி அசுந்தாவையும் ஆற்றுப்படுத்தல் மையத்திற்குள் அழைத்து இருக்கச் சொன்னேன்.

"எதற்காக நீங்கள் இருவரும் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். தயவுசெய்து என்னுடன் மனந்திறந்து பேசுங்கள். ஆனந்தன் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் உங்கள் இருவரையும் தேடுகிறார்கள். அகதிகள் முகாம் பதிவில் உள்ள நீங்கள் வெளியில் தங்க அனுமதி இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். தெரிந்தும் திருச்சி எடமலைப்பட்டிபுதூரில் தங்கியுள்ளீர்கள். அசுந்தா திருமணமாகி மூன்று குழந்தைகளின் தாய். திருமணமாகாத கண்ணனுடன் வாழ விரும்புவது சட்டப்படி குற்றம். சமுதாயமும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இப்படிப் பல சிக்கலான பிரச்சனைகளுடன் இருக்கும் உங்களை நான் அழைத்து இவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைத் தேடுவதற்காகவே என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்."

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணனும் அசுந்தாவும் பய உணர்வுடன் காணப்பட்டனர்.

கண்ணனுக்கும் அசுந்தாவிற்கும் முகாம் தலைவர் முத்துலிங்கத்திற்கும் குளிர்பானம் வழங்க ஏற்பாடு செய்தேன். பின் முதலில் அசுந்தாவுடன் தனிமையில் பேசவிரும்பி கண்ணனைச் சற்று நேரம் பார்வையாளர் அமரும் பகுதியில் இருக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க கண்ணன் எழுந்து சென்றார்.

"அசுந்தா! உங்கள் கணவரையும் குழந்தைகளையும் பிரிந்து கண்ணனோடு வாழ வேண்டுமென்று விரும்பியதற்குக் காரணம் என்ன?" தலைகுனிந்தபடியே இருந்த அசுந்தாவைப் பேச வைப்பது மிகச் சிரமமாக இருந்தது.

"அசுந்தா! தயவ செய்து என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள். அவை மிக இரகசியமாக வைக்கப்படும். உங்களுக்குள்ள பிரச்சனைக்குத் தீர்வு காணத்தானே இங்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்?"

அசுந்தா எதுவும் பேசாமலே இருந்தாள்.

"உங்களுக்கு என்ன வயதாகிறது?" என்றேன் நான்.

"முப்பத்தாறு."

"உங்கள் கணவருக்கு என்ன வயது?"

"நாற்பத்தி ஒன்று."

"ஆனந்தனுக்கு குடிப் பழக்கம் அல்லது வேறு. கெட்ட பழக்கங்கள் இருக்கிறதா?"

"இல்லை."

"குடும்பத்தில் பொருளாதாரக் கஸ்ரம் இருக்கிறதா?"

"இல்லை."

"அப்படியென்றால் ஏன் இன்னொருவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டீர்கள்?"

மீண்டும் அமைதியாக இருந்தாள்.

"அசுந்தா! என்னைப் பார்த்துக் கதையுங்கள். உங்கள் குடும்ப வாழ்க்கையில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?" இல்லையென்று தலையாட்டினாள். "உங்கள் வாழ்க்கையின்

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

பெரியதாக பிரச்சனைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கணவன் குழந்தைகளை விட்டுவிட்டு இன்னுமொரு ஆணுடன் வாழ உங்களை தூண்டியது எது?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை" என்றாள்.

"அசுந்தா! கண்ணனுடன் நீங்கள் எவ்வளவு காலமாக உடலுறவை வைத்துக் கொண்டீர்கள்?"

"மூன்று மாதங்களாக."

"உங்கள் வீட்டில் இரண்டு தங்கச்சிமார் இருந்திருப்பார்களே! எப்படி இவ்வுறவு சாத்தியப்பட்டது?"

"அவர்கள் இருவரும் பக்கத்து வீட்டு சரோ அக்கா வீட்டில்தான் படுப்பார்கள்."

"அப்படியென்றால் உங்கள் வீட்டில் நீங்களும் குழந்தைகளும்தான் படுப்பீர்களா?"

"ஓம்."

"உங்கள் கணவர்?"

"அவர் ஞாயிற்றுக்கிழமை மட்டும் தான் இரவில் வீட்டில் படுப்பார். மற்ற நாட்களில் எல்லாம் வேலைக்குப் போய்விடுவார்."

தொடர்ந்து வரும்...

# தொடுகை

எல்லா உயிரினங்களுக்கும் தொடுகை அல்லது ஸ்பரிசம் சுகமானது என்பது அனுபவ உண்மை. இரண்டு உயிரினங்களின் உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று தொடும்போது அந்த இரண்டு உயிரினங்களும் மின்சார அல்லது காந்த உணர்வை இதமாகப் பெறுகின்றன. இந்த உணர்வு சுகமானதாகவும் அமைகின்றது.

முரட்டுக் குணம் கொண்ட காட்டு மிருகங்களையும் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளையும் தொடுகையின் மூலம் வசப்படுத்தவும், அவை நம்மிடம் அன்பு காட்டவும் செய்ய முடிகிறது. உதாரணமாக நாய், பூனை, மாடுகள் போன்றவற்றை நாம் தடவிக் கொடுக்கும்போது அவை உணர்ச்சி வசப்படுகின்றன, சுகம் காணுகின்றன என்பதை அறிய முடியும். இவற்றின் மூக்கு, காது, முதுகு, வயிறு, பின் பகுதி ஆகியவற்றில் தடவிக் கொடுக்கும்போது அவை அதிக சுகத்தை அடைகின்றன. ஒரு தரம் நாம் தடவிக் கொடுக்கும் போது தனக்குக் கிடைக்கும் சுகத்தை அவை மீண்டும் பெற விரும்புவதையும் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக, பூனை அல்லது நாயை நாம் தடவிக் கொடுத்தால் அவை எம்மைச் சுற்றிச் சுற்றி வருவதும், எம்முடன் உரசிக்கொள்ள விரும்புவதும், நமது மடியில் பாய்ந்து படுக்க முயற்சி செய்வதும் நமது படுக்கையில் வந்து படுத்திருப்பதும் கவனிக்கத் தக்கவை.



இதே போல கிராமப்புறங்களில் முதல் கன்றை ஈன்ற பசுவைக் கட்டுப்படுத்துவது மிகச் சிரமமானதாக இருக்கும். ஆனால் அனுபவம் நிறைந்தவர்கள் இப் பசுவை மிகச் சுலபமாக வசப்படுத்தி மூன்று நாட்களிலேயே பாலும் கறந்துவிடுவார்கள். முதலில் ஏதாவது இலை குழைகளைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தப் பசுவின் அருகில் செல்வார்கள். பசு விரும்பி அதை சாப்பிடத் தொடங்கும்போது மெதுவாகப் பசுவின் தலைப் பகுதியைத் தடவிக் கொண்டே முதுகுப் பகுதியையும் சேர்த்து தடவிக் கொண்டிருப்பர். பின்பு மெதுவாக வயிற்றுப் பக்கமாகத் தடவியபடி பசுவின் மடியையும் அதன் முலைக்காம்புகளையும் தடவுவர். இப்படியே மூன்று நாட்களில் பசுவை வசப்படுத்தி பால் கறந்து விடலாம். ஒரு மனிதனுடைய கைகள் ஒரு மிருகத்தின் உறுப்புக்களைத் தடவும் போது ஏற்படும் ஸ்பரிச உணர்ச்சியினால் அவை வசப்படுகின்றன, அந்த உணர்ச்சியில் அவை சுகம் காணுகின்றன என்று அறியக் கூடியதாக உள்ளது.

அடுத்து சர்க்கஸ் விளையாட்டுக்களில் பல மிருகங்களைப் பயன்படுத்துகிறவர்களும் அவற்றைக் கட்டுப்படுத்தி, வசப்படுத்தித் தாம் விரும்பியபடி விளையாட்டுக்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். மிக முரட்டுத்தனம் கொண்ட மிருகங்களைத் தொடுகை மூலம் வசப்படுத்தி, தாம் சொல்வதை அல்லது அவர்களின் சமிக்ஞையை ஏற்றுச் செயற்படும் அவளவுக்குப் பழக்கப்படுத்தி கொள்கிறார்கள்.

நமக்குச் சுகவீனம் ஏற்பட்டு வயிற்றுவலியோ நெஞ்சுவலியோ ஏற்பட்டால் நமது தாயோ மனைவியோ முதலில் செய்யும் முதலுதவி என்ன? வலியுள்ள இடத்தை மெதுவாகத் தடவி விடுகிறார்கள். உண்மையிலேயே எக் காரணத்தால் வலி ஏற்படுகிறது என்பதை அறியும் முன் வலியுள்ள இடத்தில் தடவிக் கொடுப்பதில் சற்று வலி குறைந்து சுகம் தெரிகிறது. ஸ்பரிசம் அல்லது தொடுகை சுகம் தருவது என்பதற்கு இது ஒரு முக்கியமான ஆதாரம். மனிதன் உட்பட சகல உயிரினங்களும் உணர்ச்சி நரம்புகளாலும் தசை நார்களாலும் ஆக்கப்பட்டிருப்பதும் ஸ்பரிசம் அல்லது தொடுகை மூலம் கிடைக்கும் சுகமும், உணர்வும் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது என்பதும் உண்மையே.

தற்போது மனிதருக்கு ஏற்படும் பல நோய்கள் உளவியல் தாக்கத்தினால்தான் ஏற்படுகிறது என்பதை விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது. மனத்தாங்கல், மன உழைச்சல்களிலிருந்து விடுபட, தற்போது தொடுகை முறையிலான தளர்வுப் பயிற்சிகள் அளிக்கப்படுவதன் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தொடுகை மூலம் சிகிச்சை அளிப்பது மனதிற்கு ஆறுதல் தரக் கூடியதாகவும் சுகம் தருபவையாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. எனவே ஸ்பரிசம் அல்லது தொடுகை சுகமானது, இன்பம் தரவல்லது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# சாத்தியமற்றுப்போன சமரச முயற்சி

அரசும் புலிகளும் போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவற்றில் கைச்சாத்திட்டு சமாதான முன்முயற்சிகளை மேற்கொண்டு ஒரு வருட காலத்தை எட்டப்போகும் கால எல்லையில், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுக்கும் - தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையேயான சந்திப்பு ஒன்று, கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் அது முழுமையாக இடம்பெற முடியாத நிலைமையை அடைந்துவிட்டது.

“இந்தச் சந்திப்புத் தொடர்பாக என்னென்ன விடயங்கள், யார் யார் கலந்து கொள்வது என்பது தொடர்பான முழு விபரங்களைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவிக்காததால் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள முடியவில்லை” என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ)மும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. “தமது அரசியல் செயற்பாடுகளுக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை. எனவே நாம் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை” என்று ரெலோ தெரிவித்துள்ளது. ரெலோ தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி என்பது குறிப்பிடத் தக்கது.

அதே நேரம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில் இராணுவம், பொலிஸ், விசேட அதிரடிப்படை உயரதிகாரிகள் உட்பட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்- வரதர் அணி) ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில், அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை இடம் பெற்றதற்குப் பின்னர், தமது பாதுகாப்புக்கு வைத்திருந்த ஆயுதங்களைக் கையளித்த பின்னர் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்வதில் ஏற்பட்டுள்ள அச்சமான சூழலை நீக்க வேண்டும் என்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில மாதங்களில் காணாமற் போயுள்ள ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்.-வரதர் அணி உறுப்பினர்களை மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று தமிழ்க் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அதே நேரம் இந்தச் சந்திப்பு இடம் பெறுவதற்கு இரு நாட்களுக்கு முன்பதாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ சூனியப் பிரதேசமான வவுணதீவில் புலிகளும் - படை உயரதிகாரிகளும் சந்தித்து மாவட்டத்தில் தற்போது தோன்றியுள்ள சிக்கலான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவில் இணைந்து செயற்பட்டு வந்த புலிகளின் முன்னாள் முக்கியஸ்தரான கசியர் என்றழைக்கப்படும் புலேந்திரராஜா என்பவர் திடீரெனக் காணாமற்போன சம்பவத்தையடுத்து, கல்லடி டச்பார் வீதியிலுள்ள புலிகளின் மாவட்ட நிர்வாகப் பிரிவு அலுவலகம் விசேட அதிரடிப்படை, பொலிஸ், இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்ட சம்பவமானது இரு தரப்பினரிடையேயும் முறுகல் நிலையைத் தோற்றுவித்தமை குறிப்பிடத் தக்கது.

இது ஒரு பக்கமிருக்க, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் - முஸ்லிம் சகோதரர்களுக்கிடையே மீண்டும் வன்முறைகளைத் தூண்டி அரசியல் லாபம் தேடும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருவதும் கவனிக்கத் தக்கதோர் விடயம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தோன்றியுள்ள தற்போதைய பிளவு, மோதல்கள் என்பனவும் இந்த நிலைமைகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஆயுத மோகத்தை ஊக்குவிக்கும் மறைமுக முயற்சிகளில் சில அரசியல் சக்திகள் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

எப்போதும் கொந்தளிப்பான சூழலையே எதிர்கொண்டுள்ள கிழக்கில் தோன்றியுள்ள எதிரும் புதிருமான நிகழ்வுகள் ஒவ்வொன்றும் கவலை கொள்ளத் தக்க விடயங்களாகவேயுள்ளன. ○

# மீண்டும் 'ஸ்பொன்ஸர்' சர்ச்சையில் இந்திய கிரிக்கெட் அணி

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி முன்னெப்போதும் இல்லாத அளவு சட்டச் சிக்கல்களையும் ஸ்பொன்ஸர் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியதாக அமைந்துள்ளது.

விளம்பரங்கள் மூலம் உலகிலேயே அதிகளவு சம்பாதிக்கும் வீரர்களைக் கொண்ட அணி என்ற வகையில் இந்திய கிரிக்கெட் அணிக்கும் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கும் இடையில் பலத்த முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலில் உலகக் கிண்ணப் போட்டிகளின் விளம்பர அனுசரணைகள் தொடர்பாகச் சில விதிகளை வகுத்துள்ளது. அவற்றை ஏற்க இந்திய வீரர்கள் மறுத்து வருகின்றனர்.

இந்திய வீரர்கள் உலகக் கோப்பைக் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கான ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ள சில விதிகளை ஏற்க மறுத்து ஆட்சேபத்துடன் கையெழுத்திட்டுள்ளனர். அவர்கள் ஆட்சேபத்துடன் கையெழுத்திட்டுள்ளதைச் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் ஏற்குமா என்பது தெரியாது என இந்திய கிரிக்கெட் வாரியத் தலைவர் ஜக்மோகன் டால்மியா கூறியுள்ளார்.

அதாவது சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் வகுத்துள்ள விதிகளின் படி, கிரிக்கெட் வீரர்கள் உலகக் கோப்பைக்கு முன்னர் 30 நாட்களும், பிறகு 5 நாட்களும் தங்களின் சொந்த ஸ்பொன்சர்களின் லோகோவைப் பயன்படுத்தக் கூடாது. அது மட்டுமின்றி வீரர்களின் சொந்த ஸ்பொன்சர்கள், உலகக் கோப்பை முடிந்து 3 மாதங்கள் வரை அவர்கள் தோன்றும் விளம்பரங்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதாகும்.

சிம்பாப்வேயில் நடக்கவுள்ள உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகளை அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் புறக்கணித்தால், அந்த அணிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுப் புள்ளிகள் குறைக்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இருப்பினும் இங்கிலாந்து, ஆஸி. அணியினரின் இச் செயல் சர்வதேச கிரிக்கெட் வாரிய விதிமுறைகளைப் புறக்கணிப்பதாகவே அர்த்தம். ஒருவேளை அவர்கள் மேற்கண்டவாறு நடந்து கொண்டு முதல் தர கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணியுடன் ஆட சர்வதேச கிரிக்கெட் வாரியம் அனுமதி அளித்தால், இந்திய வீரர்கள் ஆடுவதை யார் தடுக்க முடியும்? என்றார் டால்மியா. அணிகளுக்குத் தகுந்தவாறு பல்வேறு விதிமுறைகள் இருக்கக் கூடாது. அனைத்து அணிகளும் ஒன்றாகவே பாவிக்கப்பட வேண்டும் என்றார்.

இவ் விவகாரம் சுவிற்சர்லாந்திலுள்ள சர்வதேச நீதிமன்றத்தால் விவாதிக்கப்படவுள்ளது என்று டால்மியா கூறியுள்ளார்.

ஆனால் லண்டனிலுள்ள சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் தலைமையகம் இந்தியாவின் இச் செயல் பற்றிக் கருத்துக் கூற மறுத்து விட்டது. தங்களுக்குக் கடிதம் கிடைத்த பின்னரே, விதிகளை முழுமையாக ஒப்புக்கொண்ட பின்னர் கையெழுத்தாகியுள்ளதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்க இயலும் என்று கூறியுள்ளது.

இந்திய வீரர்களின் நடவடிக்கை சரியானதே என்றும், இவ் விவகாரத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் நம்புவதாகவும் இந்திய அணியின் கப்டன் சவுரவ் கங்குலி கூறியுள்ளார்.

இதேவேளை உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் 15 பேருக்கும் நியூஸிலாந்தில் ஊக்கமருந்துச் சோதனை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிரிக்கெட் வீரர்களுக்கு ஊக்கமருந்துச் சோதனை நடைபெறுவது இதுவே முதல்முறை.

வீரர்களிடமிருந்து எடுக்கப்பட்ட சிறுநீரின் 'மாதிரி' சிட்னியில் உள்ள சோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்படும். சோதனையின் முடிவுகள் 10 நாள்களுக்குள் அணியின் உடலியக்க நிபுணர் ஆன்ட்ரூ லீபஸிடம் மட்டுமே தெரிவிக்கப்படும்.

வீரர்கள் அனைவரும் இந்தியாவுக்குத் திரும்பியவுடன் மீண்டும் ஒரு முறை ஊக்கமருந்துச் சோதனை நடத்தக் கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அரசு விதிப்படி ஊக்கமருந்துச் சோதனை என்பது அனைத்து வீரர்களுக்கும் கட்டாயமானது. எனவேதான், சோதனைக்கு இந்திய வாரியம் ஒப்புக் கொண்டது.

# பெண்களின் ஆண்களின் நிராகரிப்பும்

**ஒரு** ஆணை நிராகரிக்க, பெண்கள் சொல்லும் தலையாய பத்துக் காரணங்கள் (அதன் உண்மையான அர்த்தத்துடன்)

10. உன்னை என் சகோதரன் போல நினைத்துக் கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
9. நமக்குள் ஒரளவுக்கு வயசு வித்தியாசம் இருக்கிறது. (நீ என் அப்பா மாதிரி இருக்கிறாய், அல்லது உனக்கு வழுக்கை விழுந்துவிட்டது)
8. உன் மேல் எனக்கு "அதுமாதிரி" கவர்ச்சி இல்லை (நீ மிகவும் அசிங்கமாக இருக்கிறாய்)
7. என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது. (எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள்)
6. எனக்கு ஏற்கெனவே ஒரு ஆண் நண்பன் இருக்கிறான். (உன்னைப் பார்த்தால் என் வீட்டுப் பூனையும் ஐஸ்கிறீமுமே மேல்)
5. நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு ஆளைக் காதிலிப்பதை விரும்புவதில்லை. (நீ உலகத்திலேயே அல்லது இந்தப் பேரண்டத்திலேயே ஒரே ஒரு ஆண்மகனாக இருந்தாலும் உன்னைக் காதலிக்க மாட்டேன், ஒரே கட்டடத்தில் இருக்கிறோம் என்பதற்காகக் காதலித்துவிடுவேனா?)
4. நீ காரணமில்லை, நான்தான் காரணம் (நீதான் காரணம்)
3. இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக் கொண்டிருக்கிறேன். (மகா அலுப்படிக்கும் என் வேலையே உன்னை விடப் பரவாயில்லை)
2. நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன். (உன்னைப் போன்ற ஆட்கள் இருப்பதால் தான்)

**எல்லாவற்றிலும் முதலாவதாகச் சொல்லப்படும் காரணம்...**

1. நாம் நண்பர்களாக இருப்போம். (நான் உன் கூடவே இருந்து நான் சந்திக்கும் ஆண்களைப் பற்றி எல்லாம் புகழ்ந்தது உன்னை வெறுப்பேற்றத் தான்)

பெண்ணை நிராகரிக்க ஆண்கள் சொல்லும் காரணங்களில் தலையாயவை

10. உன்னை என் சகோதரி போல நினைக்கிறேன் (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
9. நமக்குள் சிறிதளவு வயது வித்தியாசம் இருக்கிறது (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
8. உன் மேல் எனக்கு "அதுமாதிரி" கவர்ச்சி இல்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
7. என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
6. எனக்கு ஏற்கெனவே ஒரு பெண் நண்பி இருக்கிறாள். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
5. நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு பெண்ணைக் காதலிப்பதை விரும்புவதில்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
4. நீ காரணமில்லை, நான்தான் காரணம். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
3. இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக் கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)
2. நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

**எல்லாவற்றிலும் முதலாவதாகச் சொல்லப்படும் காரணம்....**

1. நாம் நண்பர்களாக இருப்போம் (நீ உண்மையிலேயே படு அசிங்கமாக இருக்கிறாய்.)

## காதல் தீயை மூட்ட முயற்சி

**ப**டிப்பு, தொழில், வியாபாரம் ஆகியவற்றுக்குத் தரும் முக்கியத்துவத்தைக் காதலுக்குத் தராமல் வாழ்க்கையை வீணடிக்கிறார்களே சிங்கப்பூர் வாசிகள் என்று கவலைப்படும் அந்நாட்டுச் சமூகவியலாளர்கள், காதல் தீயை மூட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்கப்பூர் ஆற்றங்கரையோரம் காதலர்கள் சந்தித்துப் பேசத் தனியிடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அருகிலேயே சிற்றுண்டி, பானங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தரையில் இருந்து பேசி அலுத்துவிட்டால், தண்ணீரில் சென்று உல்லாசமாக இருப்பதற்காக வாடகைப் படகுகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

அந்தி மாலையில் துவங்கி நள்ளிரவு வரை ஆடிப் பாடி மகிழ்வதற்காகக் கேளிக்கை நிகழ்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, காதலர்கள் காரில் அமர்ந்தபடியே கண்டுகளிக்கத் திறந்தவெளி திரையரங்குகளில் 'சிறப்புத் திரைப்படங்களுக்கும்' ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

முப்பது வயதுக்குட்பட்ட இளம் பெண்களில் 80 வீதமானவர்கள் திருமணத்தில் ஆர்வம் காட்டுகின்றனர், ஆனால் திருமணத்தைத் தள்ளிப்போடுகின்றனர். அவர்களே முப்பது வயதை எட்டிவிட்டால், இப்படியே வாழ்ந்துவிட்டால் என்ன என்று நினைத்துவிடுகிறார்கள். 48 வீதமானவர்கள்தான் அதன் பிறகு திருமணத்தில் ஆர்வம் காட்டுகின்றனர். எனவேதான் சிங்கப்பூரின் சமூகவியலாளர்கள் இந்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

சிங்கப்பூர் இளைஞர், யுவதிகளுக்கும் காதலில் பெரிதாக ஆர்வமில்லை என்பதுதான் கவலை.

சிறு வயது முதலே இயந்திரத்தனமான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுவிடும் சிங்கப்பூர் இளைஞர்களை அதிலிருந்து வெளியேறி மென்மையான உணர்வுகளுடன் கூடியவர்களாக மாற்றியமைப்பது பெரும் பிரச்சினையாக இருக்கிறது எனச் சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## இன்டர்நெட் காதல்கள்

**ஹாய்**, என் பெயர் ஷான். எனக்கு 27 வயது. நான் பிறக்கும் போதே லேசான திக்குவாயுடன் பிறந்தேன். எப்போதும் இதைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையுடன் இருந்த எனக்கு 10 வயது ஆகும்போது இன்னொரு பெரிய இடி விழுந்தது. ஒரு சாலை விபத்தில் நான் என் இடது காலை இழந்தேன்.

என்னிடம் இந்தக் குறைகள் இருந்தாலும் நானும் ஒரு சராசரி

## எலக்ட்ரானிக் வைத்தியம்



இளைஞனின் கனவுகளுடனும் கற்பனைகளுடனும்தான் வளர்ந்தேன். எனக்கும் பெண்களிடம் ஈர்ப்பு ஏற்பட்டது. அவர்களுக்கும் என்னிடம் ஈர்ப்பு ஏற்பட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்.

என்னுடன் பேசிய என் வயதுப் பெண்கள் ஏராளம். ஆனால் மற்ற ஆண்கள் அதைப் பார்த்துப் பொறாமைப்படவில்லை. ஏனென்றால் அந்தப் பெண்கள் என்னை ஒரு ஆணாகப் பார்க்கவில்லை. என்னிடம் இரக்கப்பட்டு, என்னை அரவணைக்கும் தொனியுடன் பேசினார்கள். அது என்னைப் புண்படுத்தியதே தவிர சந்தோசத்தைக் கொடுக்கவில்லை.

இன்டர்நெட்டில் அரட்டை அடிக்கத் தொடங்கியபோது எனக்கு என் தாழ்வு மனப்பான்மையை மறைத்துக் கொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்தது. இன்டர்நெட்டில் மாறுவேடம் போட முடியும் என்று கேள்விப்பட்டிருந்தேன். சாட் செய்யும்போது அது எவ்வளவு நிஜம் என்று புரிந்து கொண்டேன்.

ஒரு நாள் ஒரு வெப்சைட்டின் அரட்டை அறையில் லாரா என்ற பெண்ணைச் சந்தித்தேன். இருவரும் ஜாலியாக சாட் செய்து கொண்டிருந்தோம். சில நாட்களிலேயே நாங்கள் கொஞ்சம் நெருக்கம் ஆனோம். ஒரு நாள் அவளுடன் சாட் செய்ய முடியவில்லை என்றால் எனக்கு எதையோ இழந்துவிட்டது போல் இருக்கும்.

ஜாலியானவன், ரோமியோ டைப், எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாத ஆள் என்று என்னைப் பற்றி இப்படி நேர்மாறான ஒரு கருத்தை லாராவின் மனதில் உருவாக்கியிருந்தேன். இது நீண்ட நாள் நீடிக்காது என்று எனக்குத் தெரியும். அவளிடம் என் நிஜ உருவத்தைக் காட்டிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தேன்.

என் குறைகளைப் பற்றி நான் அவளிடம் சொன்னபோதும் என் தாழ்வு மனப்பான்மை தெரியாதபடி காஷுவலாகச் சொன்னேன். ஒரு படி மேலே போய் என் குறைகளை நானே கிண்டல் செய்து கொண்டேன். லாராவும் மற்றப் பெண்களைப் போல என் மேல் அனுதாபப்பட ஆரம்பித்து விட்டால் நொந்துபோய்விடுவேன்.

லாரா என் குறைகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவளுக்கு என்னைப் பற்றி நான் அடித்துக் கொண்ட ஜோக்குகள் பிடிக்கவில்லை. "குரூரமாக ஜோக் அடிக்காதே" என்று என்னைக் கண்டித்தாள். நான் ஒப்புக்கொண்டேன். உண்மையில் என் குறைகள் நான் நினைத்ததை விட ரொம்பச் சின்ன விஷயம் என்று எனக்கு அப்போது தான் உறைத்தது.

என் குறைகளைப் பற்றி நான் சொன்னபோது லாரா அதைப் பொருட்படுத்தவே இல்லை. நாங்கள் மிக மிக நெருக்கம் ஆனோம். எனக்கு லாராவை விட்டால் வேறு யாரும் இல்லை என்று நினைக்கத் தொடங்கினேன். லாராவுக்கு என்னிடம் அது போன்ற ஈர்ப்பு எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனக்கோ அதுதான் முதல் காதல்.

ஒரு நாள் அவள் "நாம் நேரில் சந்திக்கவேண்டும்" என்றாள். இது எனக்குச் சந்தோசமும் தந்தது, கவலையும் தந்தது. லாரா என்னைச் சந்திக்க நினைத்ததற்குக் காரணம், அவள் என் மேல் வைத்திருந்த நம்பிக்கை. இன்டர்நெட்டில் 25 வயதுப் பெண்கள் எந்த ஆணையும் நம்புவதில்லை. லாரா என்னை நம்பியதற்குக் காரணம் ஊனமுற்ற ஒரு ஆணால் பெரிய ஆபத்து ஏற்பட்டு விடாது என்ற எண்ணமாக இருக்கலாம் என்று தோன்றியது.

அதனால் அவள் என் மேல் கொண்டிருந்த நம்பிக்கை இயற்கையான, சுத்தமான நம்பிக்கையாக எனக்குத் தெரியவில்லை. "நாம் சந்திக்க வேண்டாம்" என்றேன் லாராவிடம். லாராவுக்குக் கோபம் வந்தது.

"ஏன்? உனக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும் என்ற பயமா?" என்றாள் லாரா. "இல்லை, என்னை உனக்குப் பிடிக்காமல் போகும் என்ற பயம்தான்" என்றேன் நான். "நாம் சந்திக்கவில்லை என்றால் இனிமேல் பேச வேண்டாம்" என்றாள் லாரா. அவளின் பிளாக்மெயிலுக்கு நான் அடிபணிய வேண்டியிருந்தது.

அதிர்ஷ்டவசமாக என் ஊரிலிருந்து அவள் இடம் 10 கி.மீ. தூரத்தில்தான் இருந்தது. என் வசதிக்காக என் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு பெரிய பூங்காவில் சந்தித்தோம். எங்கள் இருவருக்கும் பார்த்தவுடனே ஒருவரை ஒருவர் பிடித்துப் போய் விட்டது. எங்கள் உறவுக்கு லைசென்ஸ் கிடைத்தது போல் இருந்தது.

இருவரும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் ஊர் சுற்றினோம். நிறையப் பேசினோம். இன்னும் நெருக்கமானோம். பூங்காவில் அரட்டை அடித்துக்கொண்டிருக்கும் போதுதான் லாரா என்னிம் கேட்டாள்: "ஷான், நீ என்னைக் காதலிக்கிறாயா?"

இது எனக்கு சின்ன ஷாக். இருந்தாலும் எனக்கு இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. "அப்படித்தான் நினைக்கிறேன்" என்றேன், தயங்குவது போல் காட்டிக் கொண்டு. "இதை நீ முன்பே சொல்லியிருக்கலாம், இல்லையா?" என்றாள் லாரா. "சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பாய்?" என்றேன்.

"என் நேரத்தை இப்படி வீணாக்கியிருக்க மாட்டேன். நாம்தான் மேட் ஃபார் ஈச் அதர்!" என்று சொல்லிவிட்டு நான் எதிர்பார்க்காத வகையில் அழுத்தமாக ஒரு முத்தமிட்டாள் லாரா. ஒரு பெரிய பிரச்சனை இவ்வளவு சுலபமாகத் தீரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

நாங்கள் தொலை தொடர்புத் துறைக்குத் தொடர்ந்து நன்கொடை வழங்கிக்கொண்டிருக்கிறோம். இன்டர்நெட் மட்டுமில்லாமல் ஃபோனிலும் மணிக் கணக்காகப் பேசுகிறோம். என் குறைகள் என்று நான் நினைத்தவை என் மனதிலதான் இருந்தனவே தவிர உடலில் இல்லை என்று லாரா எனக்குப் புரிய வைத்துவிட்டாள். ◘

## நெட் தரும் காதல் ஜோக்ஸ்

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"

"எப்படிச் சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ."

**காதலன்:** "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சிட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"

**காதலி:** "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

**காதலி:** "ஏன் டியர் நீங்க என்ன மட்டுத்தான் லவ் பண்றீங்களா?"

**காதலன்:** "நிச்சயமாக நீதான், ஏன்னா நேத்திக்குத்தான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

**மனைவி:** "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ லவ் யூ' சொன்னப்ப, நான் திக்குமுக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"

**கணவன்:** "பின்ன ஞாபகம் இருக்காதா? அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

**ஆண்:** "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூடத் தரத் தயாராக இருக்கேன்"

பெண்: எப்ப? எப்ப? ? ?..

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 02

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | 4 |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | 15 | 16 |
| ■ | 17 | 18 | 19 | ■ |
| 20 | 21 | 22 | ■ | 23 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.01.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-02**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல. - 1772**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

### இடமிருந்து வலம்

*(1).* மகாபாரதத்தில் சகுனியைப் போல இராமாயணத்தில் இவர்.
*(3).* பயிர்ச்செய்கைக்கு உகந்த சேதனப் பசளை.
*(6).* ஐந்திணைகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)
*(10).* முக்கியஸ்தர்கள் சந்திக்கும்போது முக்கியமான செய்கை. (திரும்பியுள்ளது)
*(13).* இது குடியைக் கெடுக்கும். (திரும்பியுள்ளது)
*(17).* சத்தியராஜ் மாறுபட்ட வேடத்தில் நடித்த படம். (குழம்பியுள்ளது)
*(20).* வெள்ளைப் பூடு (திரும்பியுள்ளது)
*(23).* பசு

### மேலிருந்து கீழ்

*(1).* ஊர் இரண்டுபட்டால் இவருக்குக் கொண்டாட்டம்.
*(3).* கைமுனுவால் கொல்லப்பட்ட தமிழ் மன்னன்.
*(4).* சத்துள்ள காயையும், பூவையும், கீரையையும் தரும் மரம். (குழம்பியுள்ளது)
*(6).* வாழை தருவது (தலைகீழாக உள்ளது)
*(18).* சக்திக்கு இன்னுமொரு பெயர். (தலைகீழாக உள்ளது)

494 வது தினமுரசில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டி இல. 02 சில எழுத்துப் பிழைகள் காரணமாக இரத்துச் செய்யப் பட்டுள்ளமையை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். **ஆ-ர்.**

## சொன்னதா நினைச்சேன்!

**ஒரு** நள்ளிரவில் ஏதோ சத்தம் கேட்டுக் கண்விழித்தான் ராகவன். அவன் வீட்டு ஷெட்டுக்குள்ளிருந்த காரைத் திருட, சில திருடர்கள் முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

பதற்றமாக பொலிஸுக்கு ஃபோன் போட்டான். மறுமுனையில் "இப்ப இங்க யாரும் இல்லைங்க. எல்லாரும் ரோந்து போயிருக்காங்க. பொலிஸ்காரங்க வந்ததும் அனுப்பிவைக்கிறேன்..." என்று பதில் வந்தது. "சரி ஃபோனை வைங்க" என்று கட் செய்தான் ராகவன்.

ஒரு நிமிடம் கழித்து மீண்டும் பொலிஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் போட்டான். "ஐயா, ஒரு நிமிடத்துக்கு முன்னால ஃபோன் போட்டனே நான்தான் மறுபடி பேசுகிறேன். என் காரைத் திருடிக்கிட்டிருக்காங்க இல்லையா... அதைப் பத்திக் கவலைப்படாதீங்க. நான் அவங்களைச் சுட்டுக் கொன்னுட்டேன்..." என்று சொல்லித் தொலைபேசியை வைத்தான்.

ஐந்து நிமிடங்களுக்குள் அங்கே மூன்று பொலிஸ் ஜீப்கள் சீறிக்கொண்டு வந்து நின்றன. அரை டஜன் பொலிஸ் அதிகாரிகள் இறங்கினார்கள். திருடர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டார்கள். ஒரு அதிகாரி கேட்டார். "திருடங்களைச் சுட்டுட்டேன்னு நீங்க சொன்னீங்கன்னு நினைச்சேன்."

ராகவன் சொன்னான் "பொலிஸ்காரங்க யாரும் இல்லைன்னு நீங்க சொன்னதா நினைச்சேன்!"

## "முயல்களின் தலைவர் தெரிவு"

**நீ**ண்டகாலமாகக் காட்டுக்கு அரசனாக இருந்த சிங்கம் தனது பதவியில் வெறுப்புற்றும் மற்றைய மிருகங்களுக்குச் சுதந்திரம் வழங்க எண்ணியும் ஒரு கட்டளை பிறப்பித்தது. "நான் உங்கள் அனைவருக்கும் அரசனாக இருக்க விரும்பவில்லை. நீங்கள் ஒவ்வொரு இனமும் உங்களுக்குள்ளேயே உங்கள் தலைவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று அறிவித்தது. இந்த அறிவிப்பைக் கேட்ட சகல இன மிருகங்களும் சந்தோச மிகுதியால் துள்ளிக் குதித்தன.

மிருகங்கள் தத்தமது தலைவர் தெரிவுக்காகக் காட்டுக்குள் உள்ள ஒரு சமவெளிப் பகுதியைத் தெரிவு செய்து ஒவ்வொரு இனமும் தமக்குள் இரு பிரிவாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொருவரைத் தலைவராகப் பிரேரித்தன. இரண்டு குழுக்களும் பிரேரித்த இரண்டு தலைவர்களையும் மோதவிட்டு மோதலில் எவர் வெற்றியடைகிறாரோ அவரே அந்த இனத்தின் தலைவர் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இனத்திற்கும் தலைவர் தெரிவு அந்த நடுக்காட்டுச் சமவெளிப் பகுதியில் நடைபெற்றது. மிக சுவாரசியமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற தலைவர் தெரிவுகளைச் சகல மிருகங்களும் பார்த்து இரசித்தன. எருமை, புலி, யானை, கரடி இப்படியான மிருகங்களின் தலைவர் தெரிவு படுபயங்கர மோதலாக இருந்தது. குரங்கு, தேவாங்கு, மந்தி, மர அணில் போன்ற இனங்களின் தலைவர் தெரிவு நகைச்சுவையாக இருந்தது.

உம் நாள் முயல்களுக்கிடையில் தலைவர் தெரிவு நடைபெற்றது. அனைத்து முயல்களும் இரண்டு பிரிவாகப் பிரிந்து தத்தமது தலைவர்களைப் பிரேரித்தார்கள். ஒரு பிரிவினர் தமக்குள் மூத்த முயலைத் தலைவர் என்று கூறியது. அடுத்த பிரிவினர் வாலிபப் பருவமான ஒரு முயலைத் தலைவர் என்று கூறியது. அந்த இரண்டு முயல் தலைவர்களையும் மோதவிடும் இடத்திற்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு முயல்கள் அனைத்தும் பார்வையாளராக அமர்ந்து கொண்டன. பெரிய முயல் மோதத் தயாரானது. மோதலைத் தவிர்க்க முயன்ற வாலிப முயல் பெரிய முயலை அணுகி "ஐயா! நீங்கள் தலைவராக இருங்கள். நமக்குள் எதற்கு மோதல்" என்று கூறியது. பெரிய முயல் சினம் கொண்டது. "எல்லா மிருகங்களும் சண்டை பிடித்தே தலைவரைத் தெரிவு செய்துள்ளதால் நானும் சண்டை பிடித்தே தலைவராக வேண்டும். அதுதான் பெருமை" என்று ஆணித்தரமாகக் கூறியது. வாலிப முயல் முடிந்த அளவுக்குச் சண்டையைத் தவிர்க்க முயற்சி செய்தது. வாலிப முயலைச் சண்டைக்கு இழுக்கப் பெரிய முயல் பல வழிகளைக் கையாண்டது. வாலிப முயலுக்கு சகிப்புத் தன்மையும் இருந்தது. சற்றுச் சிந்தித்த பெரிய முயல் சிறிது தூரம் ஓடிச் சென்று ஒரு தடியை எடுத்து வந்தது. அந்தத் தடியைக் கையில் எடுத்துக் கொண்ட பெரிய முயல் "இந்தத் தடியை நான் எனது என்று சொல்லுகிறேன். நீ உனது என்று சொல் இப்படி விவாதம் ஏற்பட்டால் சண்டை தொடங்கிவிடும்" என்று ஆலோசனை கூறியது. வாலிப முயலின் பதிலை எதிர்பார்க்காமலே பெரிய முயல் கையில் தடியுடன் இரண்டு காலில் நின்று "இது எனது தடி" என்று கத்தியது. வாலிப முயல் பதிலாக "அது உன்னுடைய தடி என்றால் நீயே வைத்துக் கொள்" என்று கூறியது.

பொறுமையாக இருந்த முயல் கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்தன. "வாலிப முயலே எமது தலைவர்" என்று குரலெழுப்பின. மோதலைத் தவிர்த்துச் சமாதானத்தை விரும்பிய வாலிப முயலே முயல்களின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது. மோதலை விரும்பி வன்முறையில் நம்பிக்கை கொண்ட பெரிய முயல் வெட்கித்து ஒதுங்கிக் கொண்டது. அடுத்த நிகழ்ச்சியாக முயல் தலைவர் உரையாற்றினார். "நாம் பதுங்கி வாழும் இனம். நாம் இரவில் இரை தேடிப் பகல் முழுவதும் நெரிசலான பற்றைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறோம், பகலில் வெளியே வந்தால் எதிரிகளான நாய், புலி, ஒநாய், நரி, காட்டுப் பூனை என்பன நம்மை இரையாக்கிக் கொள்கின்றன. சிங்கமே தனது குணத்தை மாற்றிக் கொண்டு நம்மை சுகந்திரமாக இருக்க ஏற்பாடு செய்துள்ளபோது நமது இனத்தின் தலைவர் பதவிக்காக நமக்குள் நாமே சண்டையிட்டுக் கொள்வது அவசியம்தானா?" என்ற கேள்வியுடன் நன்றி சொல்லிக் கூட்டத்தை முடித்தது.

**எஸ்.பி.எல்.**

## இந்தவாரம் உங்கள் பலன்

19.01.2003 தொடங்கி 25.01.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

**மகரம்** - சூரியன், **இடபம்** - சனி, இராகு, **கர்க்கடகம்** - வியாழன், **விருட்சிகம்** - செவ்வாய், வெள்ளி, கேது, **தனு** - புதன், சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும், முயற்சிகளில் வெற்றி, பண வரவு, காரிய சித்தி, உயர்ந்த நிலை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி. மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் உண்டு.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 3.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் மேன்மை, கௌரவம், தேக சுகம், நன்மை, பிரயாண மிகுதி. உத்தியோகத்தில் மேன்மை, பாராட்டு, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல: 5.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) காரியானுகூலம், மன மகிழ்ச்சி, பொருள்பேறு, வெளியிட வாழ்க்கை, உத்தியோக சிறப்பு, கௌரவம். மாணவர் கல்வி மேன்மை. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, பொருள் விரயம், அன்னியர் உதவி, தொழிலாளர் பகை, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் வீண் பகை. மாணவர் கல்வி மந்தம், கூடிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) பொருள் விரயம், மனக் கவலை, உறவினர் உதவி, வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்குறை, தொழிலாளர் கஷ்டம், வீண் பகை, பிரயாண மிகுதி. தேகாரோக்கிய குறைவு. உத்தியோக முயற்சி, பதவி மாற்றம். மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 7.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, பொருள் வரவு, அன்னியர் சகவாசம், கௌரவக் கேடு, உத்தியோகப் பிரச்சனை, மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் சிறப்பு, பிரயாண நன்மை, எதிர்ப்பு நீங்கும், பண வரவு, பெரியோர் உதவி, உத்தியோகப் பேறு, மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி மாற்றம், நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) இனசன பேதம், மனக் கவலை, தூர இடப் பயணம், அன்னியர் உதவி, செலவு மிகுதி, உத்தியோக உயர்ச்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்வு, வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, இனசனப் பேறு, உத்தியோக கஷ்டம், வீண் பிரயாசம், மாணவர் கல்விப் பேறு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் மந்தம், பண விரயம், மனக் கவலை, வெளியிடப் பிரயாணம். உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்
அதிஸ்ட இல.: 5.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சி பலிதம், பெரியோர் உதவி, தேகாரோக்கிய நன்மை, பண வரவு, மன மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகளின் அனுகூலம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)





ஈராக்கை அமெரிக்கா தாக்குவது பெரும்பாலும் உறுதியாகிவிட்ட நிலையில் அமெரிக்க, பிரிட்டிஷ் படையணிகள் வளைகுடாவை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன. ஈராக் இராணுவமும் 'ஏதோ தன்னாலான' தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளனவென்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா தாக்கினால் பதிலடி கொடுக்கப்படும் என்று சதாம் ஹுசைன் கூறியிருக்கிறார். இந் நிலையில் ஈராக்கின் பல பகுதிகளிலும் உள்ள தொண்டர் படைப் பிரிவுகள் பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

ஜெருசலேம் மீட்புப் படை என்ற பெயரில் பல இலட்சம் பேர் கொண்ட தொண்டர் படைப் பிரிவொன்று ஈராக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண், பெண், வயது வேறுபாடின்றி சுமார் 70 இலட்சம் பேர் இத் தொண்டர் படையில் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் போர் முஸ்தீபுகளுக்கு மத்தியில் பக்தாத்துக்கு வடக்காக 40 கி.மீ. தூரத்தில் உள்ள பகுபா என்ற இடத்தில் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் சகிதம் இராணுவ அணிவகுப்பில் ஈடுபட்டிருக்கும் தொண்டர் படையணியின் பெண் உறுப்பினர்களில் ஒரு பகுதியினரையே இங்கு காண்கிறீர்கள்.

## தயார்





ஸ்டீவ்வோ, மார்க்வோ சகோதரர்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டில் அசைக்க முடியாத இரு தூண்களாக இருந்தவர்கள். இன்று 'வோ' சகோதரர்கள் இருவரும் அணியை விட்டு நீக்கப்படும் அளவு புதியவர்களின் ஆக்கிரமிப்பு ஆஸி. அணிக்குள் நிகழ்ந்துள்ளது. ஸ்டீவ் வோ ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் இருந்து விலகிய நிலையில் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் ஆடிவந்த மார்க்வோவின் ஓய்வும் பெரும்பாலும் உறுதியாகியுள்ளது. ஆஷஸ் கிண்ணத்துக்கான இறுதி

அன்னா கோனிகோவா டெனிஸ் உலகில் தனக்கென ஸ்திரமான ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டு மிளிர்ந்தவர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ரஷ்ய மண்ணில் இருந்து பிரகாசிக்கத் தொடங்கிய இவர் ஏகப்பட்ட சவால்களுக்கு மத்தியில் பெண்களுக்கான டெனிஸ் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தவர்.

அண்மைக் காலமாக கோனிகோவாவுக்கு வேண்டாத பிரச்சினைகளும் மன உளைச்சல்களும் அதிகரித்து வந்ததனால் அவரால் போட்டிகளில் முழுக் கவனம் செலுத்த முடியாமல் போனது. சஞ்சிகை ஒன்று அவரது புகைப்படத்தை நிர்வாணமாகப் பிரசுரித்துப் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இந்தச் சஞ்சலத்திலிருந்து மீளும் முன்னரே காதல் கிசுகிசு ஒன்றில் கோனிகோவாவின் பெயர் பரவலாக அடிபட்டது.

ரஷ்யாவில் இருந்து வெளிக்கிளம்பிய 14 வயதான டெனிஸ் புயல் மெரியா சரபோவோ தாய்நாட்டுக்குள் கோனிகோவாவின் முதல் தரத்திற்குக் கடுமையான சவாலாக விளங்குகிறார்.

இந் நிலையில் கடந்த வாரம் சிட்னி நகரில் நடைபெற்ற அவுஸ்திரேலிய சர்வதேச டெனிஸ் சுற்றுப் போட்டியில் ஸ்லோவோக்கிய வீராங்கனை ஜெனட் ஹுசோரோவாவிடம் 6-4, 2-6, 6-1 என்ற அடிப்படையில் தோல்வி கண்டார். கோனிகோவாவின் இறங்கு முகம் குறித்து அவரது இரசிகர்கள் கவலை கொண்டுள்ளனர். தோல்வியின் பின்னர் கோனிகோவா சோகமாக நிற்பதையே இதில் காண்கிறீர்கள்.

## இறங்குமுகம்



## 'ஃபைனல் ஷொட்'

டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஒருவர் வீசிய பந்து மார்க்வோவின் உடம்பைப் பதம் பார்க்கிறது. இப் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

விண்வெளி ஓடத்துடன் சம்பந்தப்பட்ட பொருள் என்று நினைத்து விடாதீர்கள். ஜப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்திருக்கும் புதிய ரக மோட்டார் சைக்கிள்தான் இது. இதன் வேகம் மணிக்கு ஆக, 400 கிலோ மீற்றர் மட்டும்தான்.

## ஹைஸ்பீட்





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 6A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜன. 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.